CONNEMARA ... OCT 1965


# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

| | | |
|---|---|---|
| மலர் 29 | செப்டம்பர் 1965 | இதழ் 9 |


# இந்தியத் திருநாட்டின் இணையற்ற வெற்றி!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சென்ற ஏழு வார காலமாக நடைபெற்றுவந்த போர், செப்டம்பர் 23ஆம் நாள் முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்று வந்த போரை நிறுத்திவைக்க இந்த இரு நாடுகளின் அரசாங்கங்களும் உடனடியாக முன் வரவேண்டுமென்று ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்புச் சபை, செப்டம்பர் 21ஆம் நாளன்று ஏகமனதான முறையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தது. அந்தத் தீர்மானத்துக்கு இணங்கவே, இரு நாடுகளும் போரை நிறுத்தியுள்ளன.

இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரை, போர் நிறுத்தத்திற்கு அது எப்போதுமே தயாராக இருந்திருக்கிறது. எந்த விநாடியில் பாகிஸ்தான் போர் நிறுத்தத்திற்கு இணங்குகிறதோ அந்த விநாடியிலிருந்தே தானும் போரை நிறுத்திவிடத் தயார்

என்று, இந்தியாவின் தலைமையமைச்சர் திருவாளர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச் செயலாளர் திருவாளர் ஊதாண்ட் அவர்கள், செப்டம்பர் மாத நடுவில், இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் வந்திருந்து, இரண்டு அரசாங்கங்களின் தலைவர்களையும் தனித்தனியே சந்தித்து, போரை நிறுத்தி அமைதி நிலையைக் கட்டிக் காப்பதில் துணைபுரியுமாறு கேட்டுக் கொண்டபோதே, நம்முடைய பிரதமர் திருவாளர் லால்பகதூர் அவர்கள், திட்டவட்டமான முறையிலும் தெள்ளத் தெளிவான வகையிலும் இதனை விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

செப்டம்பர் 14, 15, ஆகிய இரண்டு நாட்களில், ஊதாண்ட் அவர்களுக்கு லால்பகதூர் அவர்கள் எழுதிய கடிதங்கள் இரண்டிலும், அமைதி வழியை ஏற்றுக்கொள்வதில் நம் நாட்டுக்கு உள்ள இந்த ஆர்வம், அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஊதாண்ட் எடுத்துக்கொண்ட சமாதான முயற்சிகளுக்கு நம் பிரதமர் அவர்கள் பெருந்தன்மையோடு அளித்த அதே அளவு ஒத்துழைப்பை, பாகிஸ்தானின் சர்வாதிகாரி தளபதி அயூப்கானும் தந்திருந்தால், போர் நிறுத்தம் ஏற்பட உலகம் 23ஆம் தேதிவரை காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிராது. 14ஆம் தேதியே போர் நின்றுவிட்டிருக்கும்.

நியாய உணர்ச்சி படைத்த யாரும் ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளையெல்லாம் விதித்து, இந்த நிபந்தனைகளை இந்தியா ஒப்புக்கொண்டால்தான், நான் போர் நிறுத்தத்திற்கு இணங்குவேன் என்று தளபதி அயூப்கான் அப்போது வெறியாட்டம் ஆடினார்—வீண் வாதம் பேசினார். அவருடைய வலது கையெனத் திகழும் அமைச்சர் பூட்டோவோ, ஆயிரம் ஆண்டுகளானாலும் சரி, போரைத் தொடர்ந்து நடத்துவோமே தவிர, துவண்டுவிடமாட்டோம்—சுருண்டுவிட மாட்டோம் என்று ஆவேசச் சொற்களை அவசர அவசரமாக அள்ளி வீசினார்.

இப்படியெல்லாம் வீராப்புப் பேசிய அயூப்கானும் பூட்டோவும், அப்படிப் பேசிய சொற்கள் காற்றிலே கலந்து மறைந்து அழிவதற்குள்ளாகவே, கணக்காக எண்ணிப் பார்த்தால் பத்து நாட்கள் முடிவதற்குள்ளாகவே, போர் நிறுத்தத்திற்கு இணங்கியிருக்கிறார்கள். பாகிஸ்தானை ஆட்டிப்படைத்து வருகிற சர்வாதிகாரி அயூப்கானுக்கும், அவருடன் கூடிக் குலவி அவருடைய வெறியாட்டத்திற்குத் துணையாக நிற்கும் ஆதிக்கவாதிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் இணையற்ற தோல்வி இது.

எவ்வளவுதான் உரத்த குரலில் அயூப்கான் இடி முழக்கமென வார்த்தைகளை வீசினாலும் சரி, எத்தனை முறைதான் அவருடைய அமைச்சர் பூட்டோ கோபம் கொப்பளிக்கும் வார்த்தைகளைக் கொட்டிக் காட்டினாலும் சரி, இந்தப் போரின் விளைவாகப் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டிருப்பது பரிதாபகரமான படுதோல்வி என்பதை, அவர்கள் இருவராலும் மறைத்துவிட முடியாது.

பொதுச் செயலாளர் ஊதாண்ட் கேட்டுக்கொண்ட நேரத்திலேயே அயூப்கான் போர் நிறுத்தத்துக்கு இணங்கியிருந்தால், "ஏதோ அவர் கேட்டுக்கொண்டார்—அவருக்காகப் போரை நிறுத்திவிட்டோம்" என்று கூறி, இழந்துவிட்ட தன்மானத்தை அவர் துளியளவாவது காப்பாற்றிக்கொண்டிருக்க முடியும். தற்போதோ அதற்கும் வழியில்லாமல் போய்விட்டது. "தற்போது போர் நிறுத்தத்திற்கு இணங்கியுள்ள அயூப்கான், ஏன் ஊதாண்ட் கேட்டுக்கொண்டபோது அவ்வளவு வீராப்புப் பேசினார்—என்ன ஆயிற்று அந்த ஆணவம்—எங்கே போயிற்று, அந்தக் கோபாவேசம்—எப்படி வீழ்ந்தது, அந்த வெறிச்செயல்?" என்று உலகெங்கும் உள்ள நல்லறிவாளர்கள், கைகொட்டிச் சிரிக்கும் கேவலமான நிலைமைக்கு, அயூப்கான் தன்னைத்தானே தூரத்திக்கொண்டுவிட்டார்.

பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பரிதாபகரமான கதி, அவர்களாகத் தேடிக்கொண்ட விளைவு, அதுவாக வந்தது அல்ல—தினையை விதைத்தார்கள் அவர்கள். தினையைத்தானே அறுவடை செய்ய முடியும்!

சென்ற ஏழு வார காலமாக நடைபெற்ற போர், இந்தியத் திருநாட்டால் தொடங்கப்பட்டதும் அல்ல; இந்தியாவின் தலைவர்களால் வரவேற்கப்பட்டதும் அல்ல; இத்தகைய ஒரு போர் நிகழ்வதை இந்தியத் தலைவர்கள் எந்தக் காலத்திலும் விரும்பியதில்லை.

அமைதி நெறி
அற வழி
அன்பு மார்க்கம்

இவற்றைத்தான் இந்தியா என்றென்றும் கடைப்பிடித்து வந்திருக்கிறது.

பிற நாடுகள்மீது படையெடுத்தல்,
அந்த நாடுகளின் பகுதிகளை விழுங்குதல்,
ஆக்கிரமிப்புப் பாதையில் ஆவேச நடை போடுதல்,

ஆகிய செயல்களை, இந்திய நாட்டின் தலைவர்கள் கனவிலுங்கூட எண்ணிப்பார்த்ததில்லை.

உலகம் எங்கணும் அமைதிவழி அரசோச்சவேண்டும் என்பதற்காக, விடுதலை விழா கொண்டாடிய அந்த நாள் முதல் இந்த நாள் வரை அயராது பாடுபட்டு வருகிற இந்தியா—அப்படிப் பாடுபட்ட காரணத்தால் உலகம் முழுவதும் உள்ள அறிஞர் பெருமக்களின் பேரற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரிய நாடாகத் திகழும் இந்தியா—புத்தர்பிரான் வகுத்த அகிம்சை நெறியில் இணையற்ற ஈடுபாடு கொண்டு அதனையே தன் அயல் நாட்டுக்கொள்கையாக அமைத்துக்கொண்டுள்ள இந்தியா, பிற நாடுகளின் மண்ணைக் கவரும் கண்ணற்ற செயலில் ஈடுபடும் என்பது, எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத ஒரு நிலைமையாகும்.

எந்த நாட்டின்மீதும் பகையுணர்ச்சி காட்டாமல், எல்லா நாடுகளோடும் நட்புறவு பூண்டு, எல்லோரும் இன்புற்றிருக்க விரும்புவதேயல்லாமல் வேறொன்று அறியோம் என்னும் பரந்த உள்ளத்தோடு, அமைதி வழியில் அன்பு நடைபோட்டு வந்த இந்தியாமீது, திடீரென்று பாய்ந்து போரைத் தொடங்கியது பாகிஸ்தான்.

இந்திய மண்ணின்மீது பாகிஸ்தானின் படைகள் ஆக்கிரமிப்பில் இறங்கிய பிறகு, அந்த ஆக்கிரமிப்புச் செயலைத் தூள் தூளாக்காமல் இருக்கமுடியுமா இந்திய அரசாங்கத்தால்? இருந்தால், அது முறையாகுமா? புனிதமான தாயகத்து மண்ணைப் பிற நாட்டுப் படைகள் அள்ளி விழுங்க முயன்றால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா எந்த நாட்டாலாவது? பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானினும் நனி சிறந்தன அல்லவா? நம்மைப்பெற்று வளர்த்த தாயகத்தின் தன்மானத்திற்குப் பிற நாட்டுத் தருக்கர்கள் ஊறு தேடும்போது அதனை அழித்து ஒழிப்பது நம் தலையாய கடமை அல்லவா? எனவேதான், இந்திய அரசாங்கம், நம் தாயகத்து மண்ணை ஆக்கிரமிக்கத் துணிந்துவிட்ட பாகிஸ்தான் படைகளை விரட்டியடிக்கத் தொடங்கிற்று. புனிதமான இந்தப் பணியைத் தவறான நடத்தை என்று, யார் தானாகட்டும், எப்படிக் கூற முடியும்?

காஷ்மீரம், இந்தியத் திருநாட்டின் ஒரு பகுதி. தமிழகமும் ஆந்திரமும் மராட்டிய மண்டலமும் குஜராத் மாநிலமும் உத்தரப் பிரதேசமும் பீகாரும் எப்படி இந்தியாவின் பகுதிகளாத் திகழ்கின்றனவோ அப்படித்தான், காஷ்மீரமும் இந்தியாவின் ஒரு பகுதியாகத் திகழ்கிறது.

1947ல், பாகிஸ்தான் அரசாங்கத்தால் தூண்டிவிடப்பட்ட மலைசாதியினர், அந்த அரசாங்கம் அளித்த ஆயுத பலத்தோடு, காஷ்மீர நாட்டிற்குள் அக்கிரமமான முறையில் நுழைந்து, அந்த நாட்டின் பகுதிகளில் கலகமும் குழப்பமும் விளைவித்து, அந்த நாட்டின் பகுதிகளை அபகரிக்க முயன்றபோது அந்த நாட்டு அரசாங்கம்,

அந்த நாட்டை இந்தியாவோடு இணைத்துவிட விருப்பம் தெரிவித்தது. அதுவாகத் தெரிவித்த இந்த விருப்பத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அது முதல், காஷ்மீர், இந்தியாவின் ஒரு பகுதியாக ஆகிவிட்டது. இவ்வாறாகச் சென்ற பதினெட்டு ஆண்டுகளாக இந்தியாவின் ஒரு பகுதியாகத் திகழும் காஷ்மீரத்தின் ஒரு பகுதியை, 1947-ன் இறுதி மாதங்களில், பாகிஸ்தான், அப்பட்டமான ஆக்கிரமிப்பின் மூலம் கைப்பற்றித் தன் ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொண்டிருக்கிறது. காஷ்மீரத்தின் பிற பகுதிகள் யாவும் இந்தியாவின் பொறுப்பில்—இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றன. பாகிஸ்தானின் வசமுள்ள காஷ்மீரப் பகுதிக்கும் நம் பொறுப்பில் உள்ள காஷ்மீரப் பகுதிக்கும் இடையே எல்லைக் கோடு, ஐக்கிய நாடுகள் மன்றத்தால் வகுக்கப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது.

ஆகஸ்டு மாதம் 5ஆம் நாளன்று, பாகிஸ்தான் அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஊடுருவல்காரர்கள், இந்த சர்வ தேச எல்லைக் கோட்டை அக்கிரமமான முறையில் கடந்து, இந்தியப் பகுதியாக உள்ள காஷ்மீரத்திற்குள் நுழையலானார்கள்.

இந்த ஊடுருவல்காரர்கள், பாகிஸ்தான் அரசாங்கத்தால் கடந்த பல மாதங்களாக இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு, போர்க் கருவிகளும் அளிக்கப்பட்டு, இந்தியாவுக்குள் நுழைந்து குழப்பம் விளைவிப்பதற்காக என்றே தயாரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் கையாட்களாகிய இந்த ஊடுருவல்காரர்கள் காஷ்மீரத்திற்குள் நுழைந்ததும், அங்குள்ள மக்கள் இந்த வெறியர்களுக்கு வரவேற்புத் தருவார்கள் என்றும், அதன் விளைவாக அங்கே சட்டமும் அமைதியும் சீர் குலைந்து சின்ன பின்னமாகிவிடும் என்றும், அத்தகைய குழப்ப நிலையில் தன் படைகளை அங்கு அனுப்பி, காஷ்மீரம் முழுவதையும் தான் கைப்பற்றி விடலாம் என்றும் தப்புக் கணக்குப் போட்டிருக்கிறார்கள், பாகிஸ்தானின் அரசாங்கத் தலைவர்கள். ஆனால் அவர்களுடைய நோக்கத்தைத் தவிடுபொடியாக்கி விட்டார்கள் காஷ்மீரத்து மக்கள். ஊடுருவி வந்த குண்டர்களுக்கு மக்களிடமிருந்து எத்தகைய ஆதரவும் கிடைக்கவில்லை. கிடைக்காதது மட்டுமல்ல, ஊடுருவி வந்த அந்த ஊதாரிகளை வேட்டையாடிப் பிடித்துச் சிறைச்சாலைக்குள் தள்ளுவதற்கு, நம் அரசாங்கத்திற்கு மக்கள் பேருதவியாகவும் இருந்தார்கள்.

ஊடுருவல்காரர்களைக் கொண்டு காஷ்மீரத்தில் உட் குழப்பத்தை உண்டு பண்ணிக் காஷ்மீரம் முழுவதையும் கைப்பற்றி

விடலாம் என்கிற எண்ணத்தில் மண் விழுந்துவிடவே பாகிஸ்தான் அரசாங்கம், செப்டம்பர் முதல் தேதியன்று, நேரிடையாகத் தன் படை வரிசைகளையே, இந்தியாவைச் சேர்ந்த காஷ்மீரப் பகுதிக்குள் நுழையும்படி உத்தரவிட்டது. அப்பட்டமான ஆக்கிரமிப்பு இது. இதனைப் பார்த்துக்கொண்டு வாளா இடக்க முடியுமா நம் அரசாங்கம்? நம் புனித பூமியில் காலடி எடுத்து வைக்கத் துணிந்துவிட்ட பாகிஸ்தான் படைகளைச் சுக்கு நூறாக அழித்து ஒழிக்கும்படி நம் படைகளுக்கு உத்தர விட்டது.

நம் படை வீரர்கள் இந்தப் போரின்போது காட்டிய வீரமும் தீரமும் அஞ்சாத நெஞ்சமும் அசையாத உறுதியும், ஒரு புதிய புறநானூற்றைப் படைத்துவிட்டன என்று கூறினால், அந்தக் கூற்று, முழு உண்மை; வெறும் புகழுரை அன்று. தாய் நாட்டின் மானத்தைக் காப்பதற்காக நம் போர் வீரர்கள் தங்கள் உயிரையும் துரும்பென மதித்துக் களத்தில் போராடிய காட்சி, அவர்களுடைய தாய் நாட்டுப் பற்றுக்கும் கடமை உணர்ச்சிக்கும் ஓர் இணையற்ற காட்சியாக விளங்கியது. அடலேறுகளென ஆர்த்து எழுந்த அந்த அஞ்சாத நெஞ்சர்கள், இந்தியத் தாயகத்தை மாசு படுத்த முனைந்துவிட்ட மமதையாளர்களின் பகை வரிசைகளை மளமளவென முறியடித்து, ஓட ஓட விரட்டியடித்தார்கள். நம் மாவீரர்களின் ஈடில்லா எழுச்சியையும் வீர உணர்ச்சியையும் செயல் திறத்தையும் அளவற்ற ஆற்றலையும் கண்டு அஞ்சி நடுங்கி, தப்பினேம் பிழைத்தோம் என்று, பாகிஸ்தான் படை வீரர்கள், விலை உயர்ந்த டாங்கிகளையும் போர்க் கருவிகளையும் இயந்திரத் துப்பாக்கிகளையும் பயங்கரமான பீரங்கிகளையும் விட்டுவிட்டு ஓடோடி ஒளிந்து கொண்ட காட்சிகள், இந்திய நாட்டின் இராணுவ ஆற்றலுக்கும் புகழுக்கும் உலக அரங்கத்தில் இணையற்ற இடத்தைப் பெற்றுத் தந்து விட்டன.

நம்முடைய படைகளுக்கும் பாகிஸ்தான் படைகளுக்குமிடையே நேரடிப் போர் நடைபெற்றதெல்லாம் 22 நாட்கள் தான். ஆனால் இருபத்து இரண்டே நாட்களில், நம் படை வீரர்கள், பாகிஸ்தானின் விலை உயர்ந்த டாங்கிகளில் 464ஐ அழித்துவிட்டிருக்கிறார்கள் அல்லது கைப்பற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆகாய விமானங்களில் எழுபதை வீழ்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய சிப்பாய்களில் 3818 பேரைக் கொன்று குவித்திருக்கிறார்கள். 437 சிப்பாய்களையும் 12 அதிகாரிகளையும் சிறைபிடித்திருக்கிறார்கள். இவ்வளவு குறுகிய காலத்தில் இத்துணைப் பெரிய சாதனைகளை நம் படை வீரர்களும் தளபதிகளும் செய்து காட்டியிருப்பதைப் பார்த்து, பிற நாடுகளின் இராணுவ நிபுணர்களெல்லாம் பெரு வியப்பு அடைந்திருக்கிறார்கள்.

நம் படை வீரர்களின் இணையற்ற வெற்றிகள் பூரிப்பையும் பெருமையையும் நமக்கு அளிக்கின்றன என்றால், இந்தப் போரின் போது இந்திய மக்கட் சமுதாயம் காட்டிய ஒற்றுமை யுணர்ச்சி நம் உள்ளத்தை ஆநந்த வெள்ளத்தில் நீந்தித் திளைக்கச் செய்கிறது.

இந்திய நாட்டுக்கு ஏற்பட்டுவிட்ட ஆபத்தைத் தவிடுபொடி யாக்குவதற்காக, இந்த நாட்டு மக்கள் நாற்பத்தேழு கோடி மக்களும் தங்களுக்கிடையே இருந்த ஆயிரத்தெட்டு வேற்றுமை களையும் ஒரே கணத்தில் மறந்துவிட்டு, ஒரே அணியில் ஒன்று திரண்டு நின்ற காட்சி என்றென்றும் எண்ணி மகிழத் தக்க ஏற்றமும் எழிலும் மிகுந்த ஒன்றாகும். சாதி வேற்றுமை—சமய வேற்றுமை—வட்டார வேற்றுமை—கட்சி வேற்றுமை—அத்தனை வேற்றுமைகளையும் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு இந்திய மக்கள் யாவரும் ஒருவராகி நின்ற நிகழ்ச்சியும், அவர்கள் அனை வரும் காட்டிய எழுச்சியும், இந்திய நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய பொன்னேடாகத் திகழ்கிறது.

நம் போர் வீரர்கள் காட்டிய பெருவீரமும், நம் பொது மக்கள் காட்டிய பொன்னான ஒற்றுமையும்தான், நம் நாட்டிற்கு இந்தப் போரின்போது அடுக்கடுக்காக வெற்றிகளை அள்ளிக் கொடுத்திருக்கின்றன.

போர், தற்போது நின்றிருக்கிறது. ஆனால் இனி எப்போ துமே போர் நம் நாட்டு எல்லையைத் தீண்டாமல் இருந்து விடுமா? கூறுவதற்கில்லை. பாகிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள போர் வெறி பிடித்த கூட்டம், எந்த நேரத்திலும் மீண்டும் ஆக்கிர மிப்பு எனும் அக்கிரமத்தில் ஈடுபடக்கூடும். அதுமட்டுமல்ல பாகிஸ்தான் வெறியர்களுக்கு அரசியல் ஆசான்களாகத் திகழ்கிற செஞ் சீனத்து வஞ்சக ஆட்சியாளர்களும், எந்த விநாடியிலும், இந்திய மண்ணைக் கொத்திட முனையக் கூடும். இந்த இருவகை ஆபத்துகளும், எந்த நேரத்திலும், இந்தியத் தாயகத்தைத் திடீ ரென்று முற்றுகையிடக்கூடும். இந்த அடிப்படை உண்மையை, நம் அரசாங்கமும் சரி, மக்கட் சமுதாயமும் சரி, ஒரு நாள்கூட மறத்தல் ஆகாது. மறக்கவும் மாட்டார்கள்.

செஞ்சீனா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிடமிருந்து, போர் வெறி எந்த நேரத்திலும் நம் நாட்டைத் தாக்கக்கூடும் என்பதை மனதில் நிறுத்திக்கொண்டு, அவ்வாறு மூளக்கூடிய போரை முறியடிப்பதற்காக, நம் படை வலிமையையும் நம் மக்களின் மனவலிமையையும் பல மடங்காகப் பெருக்குவது நம் தலையாய கடமை. அந்தக் கடமையை நாம் அனைவரும் ஒழுங்காக நிறைவேற்றுவோமானால், என்றென்றும் வெற்றி நமதே. ஐயம் துளியும் இல்லை. வெல்க இந்தியா! வீழ்க ஆக்கிரமிப்பாளர்கள்!!

# தமிழ் முனிவர்

தொழிலாளருக்காக முதன் முதலில் தொழிற் சங்கத்தைத் தோற்றுவித்த முதல்வர் நாள் இன்று!

மாணிக்கச் சுடரொளி மறைந்து மக்களிடையே மாபெரும் அவல நிலையை ஏற்படுத்திய நினைவு நாள் இன்று!

அண்ணல் காந்தியடிகள் இறந்ததைக் கண்டு இந்தியத் துணைக் கண்டம் கண்ணீர் சொரிய நின்றது போல், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் இறந்ததைக் குறித்துத் தமிழகம் தவித்து நின்றது. தமிழறிஞர்களெல்லாம் கரைகாண முடியாத மாலுமியைப்போல் தன்னிலை இழந்து தவித்த நாள்!

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று இரண்டாம் நூற்றாண்டில் கூறிய பூங்குன்றனார் கருத்தின் திருவுருவமாய்த் திகழ்ந்த திரு. வி. க. வின் சிந்தனை நின்ற நாள்!

இளங்கோவடிகளின் கனவை நனவாக்க, நித்த நித்தம் செல்லுகின்ற இடமெல்லாம் ஓயாது 'ஒற்றுமை—ஒற்றுமை' என்று கூறிய அவரின் வாய் பேச முடியாதவாறு நின்றது. அறிவு மலர்ந்து, அன்பு காய்த்து, அருளாக்கம் கனிந்த கருணை வடிவம் கண் மூடியவாறு நீண்ட உறக்கம் கொண்டு விட்டது.

தமிழ் மக்களுக்குத் தொண்டு புரிந்த தலைவர்களில் சிறந்து விளங்கிய பெரியாரைத் தமிழகம் இழந்து கிடக்கிறது. ஆனாலும் அவரின் நினைவு நாள் நம்மை என்றும்போல் இன்றும் நினைவுறுத்துகிறது.

"இளமை விருந்தின்" மூலமாக நம்மையெல்லாம் இன்பப் பூங்காவிற்கு அழைத்துச் சென்ற அறிஞர்—"பெண்ணின் பெருமை"யை நிலைநாட்ட வந்த பெம்மான்—'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்று எழுதி, 'மனிதன் யார்?' என்ற வினாவை எழுப்பி, விடையளித்த பெரியார்—'தமிழ்த்தென்றல்". வாயிலாகத் தமிழமுதம் அளித்த தந்தை—"தமிழ்ச் சோலையின்" வழியாக நம்மை அழைத்துச் சென்று நல்லுணர்வை உண்டாக்கிய உத்தமர் இன்று நம்மிடையே இல்லை. ஆயினும் அவருக்குப் பதிலாக அறிவுரை புகட்டி வரும் அன்னாரது நூல்கள் நம்மை அறிவுலகத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

இத்தகைய பெரியாரை நாம் என்று திரும்பவும் காணப் போகிறோம்? தூய்மையும், எளிமையும், பொதுமையுமாக விளங்கிய ஒப்

பற்ற தலைவரை என்று காண்போம்.

ஆம்! அத்தகைய தலைவரை இனி நம்மால் காண முடியாது. இனி அவரது நூல்களைத்தான், நாம், அவராகப் பாவித்து நடக்க வேண்டும். செத்துக்கிடந்த தமிழகத்துக்குப் புத்துயிரளித்த அப்பெரியாரை, இனி நூலின் வாயிலாகத்தான் கண்டு களிக்கவேண்டும். அவரின் பேச்சை நம்மால் கேட்க இயலாவிட்டாலும், எழுத்தின் மூலமாக எதனையும் கண்டு உணர்ந்து திருந்தலாம். பாடலின் வாயிலாக,

## வே. கபிலன்

"தாய்மொழி போற்றுக;
தமிழகம் போற்றுக;
வேற்றுமை நீக்குக;
ஒற்றுமை வேண்டுக;
உடலினைப் போற்றுக;
ஒழுங்கினை ஓம்புக;
மண்ணினை வெறுத்திடும்
மாதரை வெறுத்திடும்;
போலித் துறவினைப்;
புறத்தே தள்ளுக;
நந்தமிழ்த் தாய்மார்
எவ்வெவ் வழியிலும்
செவ்வி தின் உழைக்க;
இயற்கை அழகில்
இறைவனைக் காட்டுக;
சாதி சமயச்
சழக்கினை ஒழிக்க;
சமநிலை காண்க;
சமரசம் போற்றுக;
வறுமை ஒழித்திட
உளமிகப் பெருக்குக
அடிமை நினைவை
அகற்றுக யாண்டும்"

என்றவாறு பணி புரிவோம். இதைவிட ஒரு உயர்ந்த கருத்து எந்த நாட்டு நூல்களிலும் காண இயலாது. அத்தகைய கருத்தை எழுதிப் போந்ததை நினைத்துச் செயலாற்றுவோம். அவர் வழி காட்டிய பண்பின் பிரகாரம் ஒற்றுமை நிலை நாட்டுவோம்! அது தான் அவரின் நினைவு நாளில், நம் அகத்தே நினைத்துச் செயலில் செய்துகாட்டும் ஒரே வழி!

'போரையும், பிணக்கையும் உண்டாக்கிப் பிதற்றும் மக்களே. ஒன்றுபடுங்கள்—உங்களிடையே உயர்ந்த எண்ணங்கள் வளரட்டும்—ஒருவரை யொருவர் நன்றாகப் புரிந்து அன்பையும், அறிவையும் பெருக்குங்கள்!' என்று அவரின் கல்லறையில் இருந்து கிளம்பும் ஓசையைக் கேட்டுத் திருந்துவோம்.

எரிக்கப்பட்ட சாம்பலிலிருந்து எழும் எண்ணற்ற கருத்துக்களைப் பாருங்கள்! 'இனியாகிலும் தமிழினமே ஒன்றுபடு!' என்று வரும் ஒலியைக் கேட்டுப் பின்பற்றி நடக்க முற்படுவோம். அப்போது தான் தமிழ்த் தந்தை திரு. வி. க. அவர்களுக்கு நன்று செலுத்தியவர்களாவோம். உண்மையில் நாம் அவரை, நினைவுபடுத்திக் கொண்டவர்களாவோம்.

# வளமாக்கும் வானொலி

திரு. V. T. டைட்டஸ்

(1965, ஜூலை மாதம் இரண்டாம் தேதி 12-40-க்கு சென்னை ராஜ்ய செகண்டரி கல்வித்துறை இயக்குநர் திரு. V. T. டைட்டஸ் அவர்கள், 1965–66ஆம் ஆண்டுக்கான சென்னை–திருச்சி ரேடியோ நிலையக் கல்வி நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்து நிகழ்த்திய உரை.)

இவ்வாண்டின் கல்வி ஒலி பரப்பு நிகழ்ச்சிகளை மகிழ்ச்சியுடன் துவக்கிவைக்கிறேன். 1938-ம் ஆண்டிலிருந்தே இந்தக் கல்வி ஒலிபரப்பு, பள்ளிக் கூடங்களுக்காக, பல மொழிகளில், விஞ்ஞான, இசை, சமூக இயல் போன்ற பல பிரிவுகளில் பலவகைப்பட்ட நிகழ்ச்சிகளை அளித்து வந்திருக்கிறது.

அறிவு நம்மை எய்தும் வாயில்கள் நம்முடைய புலன்கள். கண்ணும் காதும் மற்ற புலன்களை விட இன்னும் தெளிவாக, விவரமாக நமக்குச் செய்திகளை உணர்த்துகின்றன. அங்ஙனம் கிடைத்த அறிவு உள்ளத்தில் நீடித்துப் பதிந்து நிற்கின்றது. சரியான முறையில் சரியான நோக்கங்களோடு அமைக்கப்பட்ட ஒரு கல்வி நிகழ்ச்சி, தக்க மனிதர்களின் முயற்சியுடன் ஒலிபரப்பாகும் பொழுது, கற்பிக்கும் கலைக்கு ஒரு பெரும் பக்கபலமாக ஆகிவிடுகிறது.

உடலற்ற குரல்தான். ஆனால் ஒலிபெருக்கியில் எழும் குரல் இனிமையுடன் வரும்போது, மாணவர்களின் கவனத்தைக் கவர்ந்து நிறுத்தும். அந்தக்கவனத்தின் மூலம் நிகழ்ச்சியிலும் ஊக்கம் பிறக்கிறது. அதனால் செவியின் மூலம் அடைந்த ஒரு குறிப்பிட்ட பொருளைப்பற்றிய அறிவு நீடித்த காலம் உள்ளத்தில் தோய்ந்து விடுகிறது.

கல்வி நிகழ்ச்சி இளம் உள்ளங்களை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பிட்ட பாடங்களின் முக்கிய அம்சங்கள் மீது கவனத்தைத் திருப்பவேண்டும். அவற்றில் ஒரு சுவையையும் ஆர்வத்தையும் ஊட்ட வேண்டும். இதனால் கற்பிக்கும் போது, மாணவர்களும் தீவிரமாகச் செயல்பட முடிகிறது. அறிவு பெருக இது ஒரு நல்ல வழி.

வகுப்பு ஆசிரியரின் அன்றாட வேலைகளைத் தான் சுமத்திக்கொள்வது கல்வி நிகழ்ச்சியின் நோக்கமல்ல. அவர்முறையாகப் போதிப்பதில் தலையிட்டு அவரை அப்புறப்படுத்த அது முயலவில்லை. அவருக்கும் அவர் பணிக்கும் துணையாக நின்று, உதவி செய்யத்தான் பாடுபடுகிறது. பள்ளி

களுக்கான கல்வி நிகழ்ச்சியானது பாடத்திட்டத்திலுள்ள செய்திகள் அதற்கு அப்பாற்பட்ட பொதுவான செய்திகள் இரண்டையுமே பொருளாகக் கொள்ளலாம். ஒரு வரம்புக்குட் பட்ட பாடதிட்டம், ஒரு ஆசிரியர்—இவ்விரண்டுமே ஓங்கி நின்றால் பள்ளிக் கல்வி குறுகிய தாகிவிடும். புதுமையும் மாறுதலும் தரும் சுவைகள் இல்லாது போய்விடும்.

கல்வியின் உண்மையான நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான பல செய்திகள் ஒரு நல்ல பாட திட்டத்தில் இருக்க வேண்டும். அறிவின் பல துறைகளிலும், விஞ்ஞானத்திலும், தொழில் நுட்ப இயலிலும் வேகமாகத் தோன்றி வரும் முன்னேற்றத்தின் காரணமாக நவீன வாழ்வு முன்னைப்போல எளிதாக இல்லை. பல அபிவிருத்திகளும் சிக்கல்களும் பெருகி வருகின்ற, பொதுப்படையாகவாவது இவற்றை மாணவர் அறிந்து கொள்வது அவசியம். வகுப்புப் பாடத்திற்குப் பக்கபலமாக நின்று மாணவர்களின் மனப்பாங்கையும் அறிவையும் விசலாப்படுத்த கல்வி நிகழ்ச்சிகள் உதவுகின்றன. பள்ளிகள் தனிப்பட்ட முறையிலோ ஒன்று கூடியோ முயன்றாலும் சில உத்திகளும் முறைகளும் அவற்றிற்குக் கிடைப்பது அரிது. அந்த வசதிகள் ரேடியோ நிகழ்ச்சிக்கு உண்டு.

இளம் உள்ளங்களில் அறிவு வேட்கையை எழுப்பும் புதுமுறைகளை யெல்லாம் நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கல்வித் தரத்தையும், அறிவுத் தரத்தையும் உயர்த்தும் எந்த முயற்சியும் வரவேற்புக்குரியதுதான். நன்கு கற்பிக்கும் ஆற்றல் படைத்த அருமையான ஆசிரியர்களின் உதவி ரேடியோ மூலம் எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரே சமயத்தில் கிடைக்கும். பள்ளி எத்தனை தொலைவில் இருந்தாலும் பரவாயில்லை.

மொழிகளைக் கற்பிக்கும் துறையில், முக்கியமாக அயல் மொழிகளையும் துணை மொழிகளையும் கற்பிக்கும் பணியில் ரேடியோ எவ்வளவோ உதவிசெய்ய முடியும். நாடக முறையாலும், செய்திகளையும் இடங்களையும் மக்களையும் நேரில் கண்டு ஒலிப்பதிவு செய்தளிக்கும் முறையாலும், கல்வி நிகழ்ச்சிகள் கற்பது என்னும் செயலுக்கு ஒரு புதிய சக்தியையும் சுவையையும் ஊட்டுகின்றன. கற்கும் கலையில் குழந்தைகளுக்கு ஒரு புது அனுபவத்தையே அவை தருகின்றன. நாடகம், உரையாடல், சொற் சித்திரம், நேர்முக வர்ணனை, பேட்டி, ஒருவரே பல பாத்திரங்களாகி உணர்ச்சியுடன் நடிப்பது—போன்ற பல உதவிகளை கல்வி நிகழ்ச்சி மேற்கொள்கிறது. வகுப்பில் அதிக விவரமன்றி நடத்தப்படும் சில விஷயங்களை மேற் சொன்ன உத்திகளையும் முறைகளையும் கையாண்டு, ஒரு புது அனுபவமாக விளக்குகிறது. எனவே ஏற்கனவே ஆசிரியர் மூலம் அடைந்த உணர்வை நன்கு

ஆழ்ந்து உள்ளத்தில் பதியச் செய்ய இந்நிகழ்ச்சிகள் உதவுகின்றன.

கல்வி ஒலிபரப்பில் ஒரு புதிய மாறுதல் இவ்வாண்டிலிருந்து புகுத்தப்பட்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. சென்ற ஆண்டு வரையில் கல்வி நிகழ்ச்சிகள், நடுத்தரப்பள்ளி, உயர்தரப்பள்ளி என்று பொதுவாக இரு தரப்பினருக்கு ஒலிபரப்பாகி வந்தன. இவ்வாண்டு, நிகழ்ச்சிகள் 6 முதல் 11 வரை ஒவ்வொரு வகுப்புக்கும் என தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. அதாவது,

| | | |
|---|---|---|
| திங்கள் | — | 11-ம் வகுப்பு |
| செவ்வாய் | — | 10-ம் ” |
| புதன் | — | 9-ம் ” |
| வியாழன் | — | 8-ம் ” |
| வெள்ளி | — | 7-ம் ” |
| வெள்ளி (பிற்பகல்) | | 6-ம் ” |

என்று வகுக்கப்பட்டுள்ளன. இதனால் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் நிகழ்ச்சிகளைக் கேட்க ஏற்பாடு செய்வது சுலபமாக இருக்கும். ஏனெனில் ஒரு வகுப்பு, ஒரு வாரத்தில் ஒரே ஒரு நிகழ்ச்சியைக் கேட்டால் போதும்.

கல்வி ஒலிப்பரப்புகளால் இன்னும் நல்ல பயன் ஏற்பட வேண்டும் என்பதற்காக அவை பாடத்திட்டத்தோடும் பாட புத்தகங்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டனவாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆறும் வகுப்பு பிரத்யேக கவனம் பெற்றிருக்கிறது. பள்ளி வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான கட்டம். கிராமங்களில் உள்ள ஆரம்பப்பள்ளிகள் பலவற்றிலிருந்து மாணவர்கள் வந்து செகண்டரி பள்ளிகளில் சேருகிறார்கள். தாம் என்ற நோக்கில் பார்க்கப்போனால் சில சமயம் பல வகைத் தரங்கள் உள்ள மாணவர்கள் இப்படி வந்து சேர்கிறார்கள். முக்கியமாகக் ஆங்கில அறிவை கவனிக்கும் போது இந்த நிலையை நன்கு காணமுடியும். ஆனால்வகுப்பில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியருக்கு இது ஒரு பெரும் பிரச்னை. அந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்உதவுவதற்கெனவே 15 வாசிப்பு நிகழ்ச்சிகளை இவ்வாண்டில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தியக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் அனுபவம் படைத்த ஒரு ஆங்கிலேயர் ஆறும் வகுப்புக்கான ஆங்கில பாடபுத்தகத்திலிருந்து பாடங்களைப் படித்துக் காட்டுவார். ஆங்கில மொழியைப் படிக்கவும் பேசவும், அதற்கே உரிய ஏற்ற இறக்கம், இசை ஆகியவற்றையும் கற்க குழந்தைகளுக்கு இது உதவியாயிருக்கும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை யன்றும் பிற்பகல் 2–20 மணிக்கு இந்நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகும்.

கல்வி நிகழ்ச்சிகளைத் திறம்படக் கேட்கவும் அவற்றின் பயன்களைப் பூரணமாக பெறவும், சில முன்னேற்பாடுகள் செய்து கொள்வதும், தக்க சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வதும் மிகவும் அவசியம். ஒவ்

வொரு பருவத்தின் (Terms) தொடக்கத்திலும் பள்ளி ஆசிரியர் யாவரும் கூடிக் கலந்து, ஒவ்வொரு வகுப்பும் எந்த எந்த நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும் என்ற அட்டவணை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

நிகழ்ச்சி வரிசையோ, தனிப்பட்ட நிகழ்ச்சியோ—எதுவாயினும் சரி, அதன் நோக்கங்களையும் பொருளையும் பற்றி ஆராய்ந்து, ஏற்ற முறையில் வகுப்பு மாணவர்களைக் கேட்க ஆசிரியர்கள் ஆயத்தம் செய்யவேண்டும். தேசப்படம் வரைப்படம் முதலியன பார்த்து அறிய உதவும் சாதனங்களை முன்கூட்டியே சேகரித்து மாணவர்களுக்கும் காண்பிக்க வேண்டும். நிகழ்ச்சிக்குத் தேவையான சொற்களையும் நன்கு தெரியும்படி எழுதி வைக்கவேண்டும்.

கவனித்துக் கேட்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அவசியம். சும்மா கேட்பது மட்டும் போதாது. மனதை ஒருமுகப் படுத்தலும் பழக்கமும் கேட்பதற்கு மிக அவசியம். ஒரு நிகழ்ச்சியின் சாராம்சங்களைச் சலித்து எடுத்து அறிவது ஒரு கலை. அதை மாணவர்கள் பழக வேண்டும்.

நிகழ்ச்சியைக் கேட்கையில் குறிப்பெடுப்பது கேட்பதற்குக் குந்தகமாக இருக்கும். புரிந்து கொள்வது கடினமாகிவிடும். ஒலிப்பதிவுக் கருவி இருந்தால், ஒலிபரப்பைப் பதிவு செய்து கொண்டு, ஓய்வு நேரம் கிடைத்த போது மாணவர்களுக்குப் போட்டுக் காட்டுங்கள். நிகழ்ச்சியில் என்ன கேட்போம் என்பதை, பின்னர் நன்றாக, விரிவாக ஞாபகப்படுத்திப் பார்ப்பதும், கேட்ட கருத்துக்களைச் சரியாக மீண்டும் எடுத்துரைப்பதும் மாணவர்களுக்கு நல்ல பழக்கமாகும். இவற்றைச் செய்து பழகுவதால் கேட்கும் ஆற்றலும் பெருகிச் சிறக்கும்.

ஒரு ஆசிரியர் இந்நிகழ்ச்சிகளைக் கையாண்டு பயன்படுத்தும் வகையைப் பொறுத்திருக்கின்றன, இந்த நிகழ்ச்சிகளின் வெற்றி பயன் எல்லாம். ஒவ்வொரு கல்வி நிகழ்ச்சியிலும் மூன்று பகுதிகள் உண்டு. (1) முன்னுரை, (2) ஒலிபரப்பு, (3) முடிவு. வகுப்புக்கு அளிக்கும் கட்டுரை போன்ற பயிற்சிகள் கல்வி ஒலிபரப்புகளோடு ஒட்டியிருத்தல் நல்லது. அதனால் நிகழ்ச்சிகள் கேட்பதில் ஊக்கம் பிறக்கும். நிகழ்ச்சியைக் கேட்ட பின் தொடர்ந்து செய்ய வேண்டிய முயற்சிகளைப் புறக்கணிக்கக் கூடாது.

ஆசிரியரின் ஒத்துழைப்பு இதற்கு முழுவதும் வேண்டும். குழந்தைகளோடு அவரும் நிகழ்ச்சியைக் கேட்க வேண்டும். அவர்கள் எப்படிக் கேட்கிறார்கள், புரிந்து கொண்டார்கள் என்று அறிந்து, தங்கள் கருத்துக்களை கல்வி இலாக்காவுக்கும் ரேடியோ நிலையத்திற்கும் அடிக்கடி தெரிவிக்க வேண்டும்.

# கல்வித் துறைச் செய்திகள்

## தற்போதைய ஆண்டு இறுதிப் பரீட்சை முறை மாற வேண்டும்.

பம்பாய், ஆக, 17—கல்லூரிப் படிப்பின் தரம் குறைந்து வருவதைத் தடுக்க மாணவர்களை அனுமதிப்பதில் இன்னும் ஜாக்கிரதையான கொள்கையைப் பின்பற்ற வேண்டும்; இன்னும் திறமையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்; இப்போதுள்ளதை விட விவேகமான பரீட்சை முறை வேண்டும் என்று மகாராஷ்டிர கவர்னர் டாக்டர் பி. வி. செரியன் இன்று பம்பாய் சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துகையில் கூறினார்.

டாக்டர் செரியன் மேலும் கூறியதாவது:—

"நமது கல்வி முறை பற்றி தற்போது நடந்து வரும் மறு பரிசீலனையில் பரீட்சை முறை விஷயத்திலும் முழு கவனம் செலுத்தப்படும் என நம்புகிறேன். இப்போதுள்ள விரிவான வருஷாந்தரப் பரீட்சைத் தேர்வுமுறை மாணவரின் திறமையைப் பூரணமாக எடுத்துக் காட்டுவதாகாது; அவ்வப்போது நடக்கும் வகுப்பு 'டெஸ்டு'களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவ்வகையில் மதிப்பீட்டை சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவர ஏதாவது வழி காண வேண்டும்" என்று திரு. செரியன் கூறினார்.

## ஒரு பஞ்சாயத்து யூனியனில் ஒரே நாளில் 53 ஆசிரியர்கள் மாற்றம்

திருச்சி, ஆக, 24—தஞ்சை ஜில்லாவில் ஒரு பஞ்சாயத்து யூனியன் ஒரே நாளில் 53 ஆசிரியர்களை மாற்றியிருக்கிறது.

நேற்று திருபெரும்பூரில் பேசுகையில் முதன் மந்திரி திரு. பக்தவத்சலமே இதைக் குறிப்பிட்டார். ஆசிரியர்களை மாற்ற யாருக்கு அதிகாரம் உண்டு என்று காட்டிக் கொள்வதில் முனையாமல், பஞ்சாயத்து யூனியன்கள் ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டும் என்று முதன் மந்திரி கூறினார்.

மாற்றப்பட்ட ஆசிரியர்கள் தன்னிடம் வந்து மாற்ற உத்தரவை ரத்து செய்யக் கோரியதாகச் சொன்னார்.

இந்தக் கோரிக்கையைக் கவனிப்பதாக முதன் மந்திரி வாக்களித்துள்ளதாய்த் தெரிகிறது.

## குழந்தை பள்ளிகள்

சென்னை, ஆக, 22—பள்ளிப் படிப்புக்கு முன் குழந்தைகளுக்கு நல்ல நடவடிக்கைகள், நற்குணங்கள் படிவதற்காக சென்னை அரசாங்கத்தினரால் நடத்தப்படும் பரீட்சார்த்த திட்டம் ஒரு சில மாறுதல்களுடன் நாடு முழுதும் அமல் நடத்தப் படலாம் என்று தெரிகிறது. இப் பரீட்சார்த்த திட்டம் சென்னையில் 1962 முதல் நடத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தைக் கல்விக் கமிஷன் இங்கு வந்திருந்தபோது பரிசீலனை செய்தது. இக்கமிஷன் தன் யாதாஸ்தைச் சமர்ப்பிக்கும் போதுதான் இதில் என்ன மாறுதல்களை அது புகுத்தியுள்ளது என்பது தெரியும்.

கல்வி புகட்டு முன் குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்கள், கட்டுப்பாடு ஆகியவை எப்படி ஆரம்பக் கல்வி அவசியமோ அம்மாதிரி அத்யாவசியமாகும். இதை மனதிற் கொண்டுதான் தமிழக அரசாங்கம் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இதை பரீட்சார்த்த முறையில் அமல் நடத்தியது.

ஒரு அபிவிருத்தி மாவட்டத்திற்கு ஒரு 'பிளாக்' வீதம் 'பிளாக்'குகளில் 751 குழந்தைகளுக்கான இத்தகைய பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பள்ளிகளில் 2 வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். ஒரு வகுப்புக்கு சுமார் 40 குழந்தைகள் இடம் பெற்றுள்ளன. இந்த 21 பிளாக்குகளிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் இத்தகைய பள்ளிகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு குழந்தைப் பள்ளிக்கும் ரூ. 300 மதிப்புள்ள போதனைப் பொருள்களும் யூனிசெப் (ஐ. நா. குழந்தைகள் அவசர நிதியுதவி ஸ்தாபனம்) பால் பௌடரும் சப்ளை செய்யப்படுகின்றன. உணவுச் சத்துப் பொருள்கள் விநியோகிக்கப்படும். பிளாக்குகளில் மதிய உணவும் மற்ற பிளாக்குகளில் பிஸ்கோத்துகள், இனிப்புப் பண்டங்கள் ஆகியவை குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன.

சில பிளாக்குகளில் குழந்தைகளுக்கு யூனிபாரம் தரப்படுகின்றன. முக்கியமான பண்டிகைகளின் போது எல்லாக் குழந்தைகளுக்குமே உடை அளிப்பது குறித்து யோசிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் குழந்தைகள் பள்ளிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு முக்கிய சேவிகைகளுடையது. இக் குழந்தைகளைக் கவனித்துக்கொள்வதற்காக சுமார் 30 முக்ய சேவிகைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் 'தாயிகள்' அல்லது பாலசேவிகைகளுக்குப் பயிற்சியளிப்பார்கள். இத்திட்டத்திற்கு ஆகும் செலவையெல்லாம் அரசாங்கமே ஏற்கிறது. இவ்வருடம் மார்ச் மாதம் வரை ரூ. 8·75 லட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது.

# செய்திக் கொத்து

## திருக்குறளின் உருது மொழிபெயர்ப்பு

ஹைதராபாத், ஆக. 8—திருக்குறளின் உருது மொழி பெயர்ப்பை ஆந்திர கவர்னர் திரு. பட்டம்தாணுப்பிள்ளை இன்று வெளியிட்டார்.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி உருதுப் பிரிவின் தலைவர் திரு. ஷுஜாத் சுஹராவர்த்தி மொழி பெயர்த்தது இது.

ஆந்திர சாகித்திய அகாடமி ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவுக்கு அதன் தலைவர் திரு. பி. கோபால ரெட்டி தலைமை வகித்தார்.

குறள் உலகப் பெரு நூல்களில் ஒன்று. பூகோள, மத எல்லைகளையெல்லாம் கடந்து எல்லா மனிதர்களுக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும்படியான ஒழுக்க நியதியை வரையறுக்கும் நூல் திருக்குறள் என்று புத்தகத்தை வெளியிட்டுப் பேசுகையில் கவர்னர் திரு. பட்டம்தாணுப்பிள்ளை கூறினார்.

திரு. கோபால ரெட்டி தனது உரையில் கூறியதாவது:—பல நூற்றாண்டுகளாக மக்களுக்கு உத்வேகம் அளித்து வரும் உலக மகா இலக்கியங்களில் குறள் ஒன்று. இந் நூல் பல இந்திய மொழிகளிலும் அன்னிய மொழிகளிலும் ஆக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் மலேயாவில் ஒருவர் இந் நூலை மலாயிலும் சீன மொழியிலும் மொழி பெயர்க்க 500 மலாய் டாலர் நன்கொடை வழங்கியுள்ளார்.

## அமெரிக்க இரட்டையரின் விண்வெளி யாத்திரை வெற்றி

ஹௌஸ்டன், டெக்ஸாஸ், ஆக. 29—யு. எஸ். விண்வெளி கப்பல் ஜெமினி 5—ல் சென்ற கார்டன் கூப்பரும், சார்ல்ஸ் கோன்ராடும் அநேகமாக 8 தினங்கள் விண்வெளியில் இருந்த பின்னர் இன்று பத்திரமாக அட்லாண்டிக் பகுதியில் இறங்கினர். விண்வெளியில் நீண்டகாலம் இருப்பதில் இவ்விருவரும் புதியதொரு சாதனையை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

8 தினங்கள் விண்வெளி யாத்திரை என்பது சந்திர மண்டலத்துக்குச் சென்று திரும்புவதற்கு சமமான தினங்கள் ஆகும்.

இறங்கும் பகுதியில் புயலைத் தவிர்க்கும் பொருட்டுப் பூமியை சுற்றுவதில் ஒரு சுற்றுக் குறைக்கப்பட்டது.

இரு விண்வெளி வீரர்களும் பூமியை 120 தடவை சுற்றியுள்ளனர். 30 லட்சம் மைல் சென்றுள்ளனர்.

38 வயதுள்ள கூப்பரும், 35 வயதுள்ள கோன்ராடும் ரஷிய வீரர் பைகோவ்ஸ்கியின் சாதனையை மிஞ்சிவிட்டனர். பை

(56-ம் பக்கம் பார்க்க)

# கல்வி வளர்ச்சி

நம் நாட்டின் 19வது சுதந்திர தினத்தன்று, சுதந்திரத்துக்குப் பிறகு கல்வித் துறை வசதிகளில் ஏற்பட்டுள்ள மாபெரும் விஸ்தரிப்பு பற்றித் தெரிந்துகொள்ள நம்மில் பலர் ஆர்வங் கொண்டிருப்பது இயற்கையே.

பல்வேறு கல்விக் கட்டடங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை விஷயத்தில் மட்டுமின்றி, இந் நாட்டில் வளர்ந்துவரும் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் புதிய கல்வி நிலையங்களை ஏராளமாக ஏற்படுத்துவதிலும் நாம் மாபெரும் முன்னேற்றம் அடைந்திருப்பது மிகவும் திருப்தியளிக்கக் கூடியதொரு அம்சமாகும்.

ஆரம்பக் கல்வித் துறையில் 1946 – 47–ல் இந்நாட்டில் மொத்தம் 1,72,661 பள்ளிக் கூடங்கள் இருந்தன. அவற்றில் 21,000க்கும் மேற்பட்ட பள்ளிகள் பெண்களுக்கானவை. 1950–51ல் ஆரம்பப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்துக்கும் சற்றுக் கூடுதலாக அதிகரித்தது. இந்த எண்ணிக்கை 1955–56-ல் 2,78,135 ஆகவும், 1960–61ல் 3,30,399 ஆகவும் அதிகரித்தது. 1965–66 இறுதியில் இது 4 லட்சத்தை எட்டி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் பெண்கள் பள்ளிகள் மட்டும் 25,000 ஆக இருக்கும்.

## ஆரம்ப ஜூனியர் ஆதாரப் பள்ளிகள்

1946–47–ல் ஆரம்ப–ஜூனியர் ஆதாரப் பள்ளிகளில் மொத்தம் 130 லட்சம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1950–51ல் அது 182 லட்சமாக அதிகரித்தது. 1955–56ல் அது 229 லட்சமாகவும் 1960–61ல் அது 266 லட்சமாகவும் உயர்ந்தது. இவ்வருடம் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 400 லட்சத்தை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில் 108 லட்சம் பெண்கள் இருப்பார்கள்.

1946-47ல் ஆரம்ப–ஜூனியர் ஆதாரப் பள்ளிகளில் 4 லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர். அவர்களில் 4 பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 64 சதவிகிதம் இருந்தனர். இப்பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1950–51–இல் 5,37,918 ஆகவும், 1955–56–ல் 6,91,249 ஆகவும் 1960–61ல் 7,41,515 ஆகவும் அதிகரித்தது. இவ்வருட இறுதியில் இப்பள்ளிகளில் 2 லட்சம் ஆசிரியர்கள்

இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆண்களில் 70 சதவிகிதம் பேரும் பெண்களில் 75 சதவிகிதம் பேரும் இருப்பார்கள்.

ஆரம்பக் கல்விக்கான செலவு தொகை 1950–51ல் ரூ. 36 கோடியாக இருந்தது. 1955–56ல் ரூ. 53.72 கோடியாகவும், 1960-61ல் ரூ. 73.44 கோடியாகவும் அதிகரித்து வந்துள்ளன. 1965-66ல் இது சுமார் 112 கோடி ரூபாயை நெருங்கி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெண்களுக்கான ஆரம்ப கல்விச் செலவாகிய ரூ 10 கோடியும் இதில் அடங்கும். அதாவது, ஒரு மாணவனுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவுக்குத் தொகை 1946-57ல் ரூ. 14.2 ஆக இருந்தது. 1965–66ல் ரூ. 28 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் 1946-47-ல் மொத்தம் 12,843 நடுத்தரப் பள்ளிகள் இயங்கி வந்தன. இந்தத் தொகை 1955–56ல் 21,730 ஆக அதிகரித்தது. 1960–61ல் மொத்தம் 49,663 நடுத்தரப் பள்ளிகள் இருந்தன. நடப்புக் கல்வி ஆண்டின் இறுதியில் இப் பள்ளிகளின் எண்ணிக்கை பெண் பள்ளிகள் 8,000 உட்பட மொத்தம் 78,000 ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடுத்தர–சீனியர் ஆதாரப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1946–47ல் சுமார் 18 லட்சமாக இருந்தது. 1950-51ல் சுமார் 20 லட்சமாகவும், 1955–56ல் சுமார் 38 லட்சமாகவும் 1960–61ல் 106 லட்சமாகவும் அதிகரித்தது; இவ்வருடம் இது 160 லட்சத்தை எட்டி விடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1946–47ல் நடுத்தரப் பள்ளிகளில் மொத்தம் 72,413 ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர். அவர்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 59 சதவிகிதம் பேர். இப்பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 1935–56ல் சுமார் 1.5 லட்சமாக இருந்தது. 1960–61ல் சுமார் 3.5 லட்சமாக அதிகரித்தது. இவ்வருடம் இந்த எண்ணிக்கை சுமார் 5,20,000 ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 70 சதவிகிதம் பேர் இருப்பார்கள். இவர்களில் 1,40,000 ஆசிரியைகள் இருப்பார்கள். ஆசிரியைகளில் பயிற்சி பெற்றவர்கள் 75 சதவிகிதம் பேர் இருப்பார்கள்.

1946–47ல் நடுத்தரப் பள்ளிகள் விஷயத்தில் மொத்தம் ரூ. 480 லட்சத்துக்குமேல் செலவழிக்கப்பட்டது. இச்செலவுத் தொகை 1950–51ல் ரூ. 769 லட்சமாகவும், 1955-56ல் ரூ. 1,540 லட்சமாகவும் அதிகரித்தது. இவ்வருடம் இது சுமார் ரூ. 65.50 கோடியாக இருக்கும்

என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1960-61ல் இது ரூ. 43 கோடியாக இருந்தது. இவ்வருடம் நடுத்தரப் பள்ளிக்கூடத்தில் பெண்களின் கல்விக்காக ரூ. 8 கோடி செலவிடப்படும். ஆயினும், ஆண்டு ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்குச் செலவிடப்பட்ட தொகை 1946-47ல் ரூ. 47 ஆக இருந்தது. 1965-66ல் ரூ. 40.9 ஆகக் குறைந்து விட்டது.

## உயர் செகண்டரிக் கல்வி

உயர்தர – செகண்டரிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1965-66ல் 110 லட்சமாக (இதில் பெண்கள் 30 லட்சம்) இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை 1946-47ல் 21.94 லட்சமாகவும் 1950-51ல் 31.60 லட்சமாகவும், 1955-56ல் 47.14 லட்சமாகவும் 1960-61ல் 75.12 லட்சமாகவும் இருந்தது.

இந்தக் கட்டத்தில் கல்வி நிலையங்களில் மொத்த எண்ணிக்கை 1946-47ல் 5,298 ஆக இருந்தது. 1950-51ல் 7,288 ஆகவும் 1955-56-ல் 10,838 ஆகவும் 1960-61ல் 17,257 ஆகவும் அதிகரித்தது. இவ்வருடம் இப்பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 27,000-ஐ எட்டி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் பெண்களுக்கான பள்ளிகள் 4,000 இருக்கும்.

இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இதேபோல் அதிகரித்துள்ளது. இந்நாட்டிலுள்ள எல்லா உயர்தர செகண்டரிப் பள்ளிகளிலும், 1946-47ல் மொத்தம் 87,862 ஆசிரியர் இருந்தனர். இந்த எண்ணிக்கை 1950-51ல் 1,26,504 ஆகவும், 1955-56ல் 1,89,794 ஆகவும், 1960-61ல் 2,96,305 ஆகவும் அதிகரித்தது. இவ்வருடம் இப்பள்ளிகளில், ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 4,40,000 ஆக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில் பெண்கள் 95,000 பேர்கள் இருப்பார்கள்.

இந்தியாவில் – உயர்தர செகண்டரிக் கல்விக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை 1946-47ல் ரூ. 12.22 கோடியாக இருந்தது. 1950-51ல் ரூ. 23.04 கோடியாகவும், 1955-56ல் ரூ. 37-61 கோடியாகவும், 1960-61-ல் ரூ. 68.91 கோடியாகவும் அதிகரித்தது. நடப்பு ஆண்டில் மொத்தம் ரூ. 108 கோடி செலவிடப்படும். இதில் ரூ. 22 கோடி பெண்களின் கல்விக்கானதாகும்.

இக் கல்விக் கட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்குச் செலவிடப்பட்ட தொகை 1946-47ல் ரூ. 55.7 ஆக இருந்தது. 1950-51ல் ரூ. 72.9 ஆகவும், 1955-56ல் ரூ. 79.8 ஆகவும் 1960-61ல் ரூ. 91.7 ஆகவும் அதிகரித்து வந்துள்ளன. இவ்வருடம் இச்

செலவு ரூ. 98.2 இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## கலைத்துறை-விஞ்ஞானக் கல்லூரிகள்

இந்தியாவில் 1946 - 47-ல் மொத்தம் 420 கலைத்துறை, விஞ்ஞானக் கல்லூரிகள் இயங்கி வந்தன. இக் கல்லூரிகளின் எண்ணிக்கை 1950-51ல் 498 ஆகவும் 1955 – 56ல் 712 ஆகவும் 1960–61ல் 1039 ஆகவும் அதிகரித்தது. இவ்வருடம் இவற்றின் எண்ணிக்கை 1500ஐ எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் பெண்களுக்கான கல்லூரிகள் 200 இருக்கும்.

இக்கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1946–47ல் சுமார் 2 லட்சமாக இருந்தது. 1950–51ல் 3 10 லட்சமாகவும், 1955 56ல் 5.22 லட்சமாகவும், 1960–61ல் 6.91 லட்சமாகவும் அதிகரித்தது. நடப்பு ஆண்டில் இந்த எண்ணிக்கை 10 லட்சத்தை எட்டிவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; அவர்களில் பெண்கள் 1,80,000 பேர் இருப்பார்கள்.

கல்லூரி ஆசிரியர்கள் எண்ணிக்கை 1950–51ல் 15,312 ஆக இருந்தது. 1955–56–ல் 23;812 ஆகவும் 1960–61ல் 35,555 ஆகவும் உயர்ந்தது. இவ்வருடம் இந்நாட்டிலுள்ள எல்லாக் கலைத்துறை, விஞ்ஞானக் கல்லூரிகளிலும் 8000 ஆசிரியைகள் உள்பட மொத்தம் 50,000 ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலைத்துறை, விஞ்ஞானக் கல்லூரிகள் விஷயத்தில் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை கல்விக்கானதாகும்.

1946-47ல் ரூபாய் 4.39 கோடியாக இருந்தது. 1950–51ல் ரூபாய் 7.17 கோடியாகவும், 1955–56ல் ரூபாய் 11.64 கோடியாகவும் அதிகரித்து வந்துள்ளது. 1960–61ல் இது சுமார் ரூ. 21 கோடியாக இருந்தது. இவ்வருடம் இது ரூ. 30 கோடியை எட்டிவிடும். நடப்பு வருட பட்ஜெட்டில் இக்கல்லூரிகளில் பெண்களின் கல்விக்காக ரூ. 5 கோடி செலவிடப்படும்.

இக்கல்லூரிகள் விஷயத்தில் ஆண்டொன்றுக்கு மாணவரொருவருக்குச் செலவிடப்படுகிற தொகை 1946–47ல் ரூ. 223.9 ஆக இருந்தது. 1965-66ல் ரூ. 300 ஆக அதிகரித்திருக்கிறது.

## தொழில் கல்விக் கல்லூரிகள்

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் உட்பட தொழில் கல்விக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 1946–47ல் 140 ஆக இருந்தது. 1950-51ல் 208 ஆகவும், 1955–56ல் 346 ஆகவும், 1960–61ல் 852 ஆகவும் அதிகரித்துள்ளது. நடப்பு வருட மதிப்பீடுகளின் படி இந்நாட்டில் பெண்களுக்கான தொழில் கல்விக் கல்லூரி

(29 பக்கம் பார்க்க)

# கவிதைக் கலை

பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் M.A.

கவிதைக் கலை நுண்கலைகளுள் கவின் கலை. இதனைக் கல்லாக் கலை என்றும் கூறுவதுண்டு. இதற்கு யாப்பிலக்கணம் கற்காமலும் இலக்கியம் படிக்காமலும் கவி பாடத் தெரிந்து கொள்ளலாம் என்பது பொருளன்று; எவ்வளவு படித்திருந்தாலும் கருவிலே அமைந்த திருவால் ஏற்படக் கூடியது என்பதுதான் பொருளாகும். "காரிகை படித்துக் கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே" என்பது பழமொழி. காரிகை என்னும் யாப்பிலக்கண நூலைப் படித்து மட்டும் கவி பாடத் தெரிந்துகொள்ள முடியாது; கவி பாட வல்லவரிடம் கேட்டுச் சில நுட்பங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதனாற்றான் அப் பழமொழி வழங்கி வருகிறது. காரிகை படித்து விட்டுமட்டும் கவி பாடத் தொடங்கினால் கவிதை இனிதாய் இராது.

"பாக்கென்பது கமுகம்பழம்;
பருப்பென்பது துவரை,
மேற்கென்பது கிழக்கேநின்று
பார்த்தால் அது தெரியும்,
சாக்கென்பது கோணி; உயர்
சட்டை யதுபோர்க்கும்
யாக்கா கவிசொன்னேன்;
கொடுப்பாயோ விடுப்பாயோ."

இது காரிகை இலக்கணத்தில் கூறியவாறு ஓரளவு எதுகை மோனை பெற்றிருப்பினும் இதனைக் கவிதை என்று சொல்ல முடியுமா? முடியாது. இதனால் காரிகை இலக்கணம் கற்க வேண்டுவதில்லை என்றும் வேறு எதையும் படிக்க வேண்டுவதில்லை என்றும் தவறாக எண்ணிவிடக் கூடாது.

இக் காலத்தில் கவிதை பாடுவதில் பலருக்கு ஆர்வம் தோன்றியிருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், ஒரு சிறிதும் இலக்கணம் தெரியாமல் பெரும்பாலார் கவி இயற்ற முயல்வதைக் காண்கிறோம். எவரும் ஓரளவு மொழிப் புலமையின்றி, யாப்பிலக்கண அறிவின்றிக் கவி பாடுவது பூப்பே அடையாத பெண் பேருக்காக மணஞ் செய்து கொள்வது போலாகும். 1960 மார்ச்சுத் திங்களில் ஒரு நாள் இளங்கலைப் பட்டம் பெற்று உயர்ந்த அலுவலில் உள்ள ஒருவர் கவிதை என்று ஒரு சில பாக்களை எழுதிக்கொண்டு வந்து என்னிடம் காட்டினார். நான் அப்பாக்களைப் படித்துப் பார்த்த பின்பு அவற்றைத் திருத்தப் போனேன். உடனே அவ்விளைஞர், "ஐயா திருத்திவிடாதீர்கள். போட்டிக்கு அனுப்ப இருக்கிறேன்" என்றார். நான் அவரைப்

பார்த்து, "உங்களுக்கு எதுகை மோனை தெரியவில்லையே. குற்று கரச் சந்தியும் சற்றும் தெரிய வில்லையே. பி. ஏ. வகுப்பில் படித்த தமிழ் போதாது. பி.ஏ. படித்துவிட்டால் மட்டும் ஒருவர் மொழித்தேர்ச்சி பெற்று விட முடியாது. இந்தப் பாக்கள் எந்த வகைப் பாவிலும் அடங்க மாட்டா" என்றேன். "யாப் பிலக்கணத்தைப் பார்க்காதீர்கள். இவற்றில் கவிதைப் பண்பு உண்டா என்று பாருங்கள்" எனக் கேட்டார் அவர். "கவி தையில் உணர்ச்சி முதன்மை யானது. அதுவும் இல்லையே" என்றேன். அவர் என்னை விடா மல் மடக்கி, "பாட்டாகவாவது இவை இருக்கின்றனவா?" என்று கேட்டார். மேலும் அவர் உள்ளத்தைப் புண்படுத்தி எள்ளி நகையாட விரும்பாமல் "இருக் கிறது" என்றேன். அவர் நன்றி கூறிச் சென்றுவிட்டார். இப்படி யாப்பிலக்கண அறிவே சிறிதும் இன்றிப் பாட்டுப் பாடுபவர்கள் இந்நாட்டில் இந்நாளில் பலர் உள்ளனர். இவ்வாறு ஒன்றும் படிக்காமல் கவிதை இயற்றலாம் என்னும் மனப்பான்மை பலரிடம் இருந்து வருவது மிகமிக வருந்து தற்குரியது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் வள்ளலாரும் பாரதியாரும் செய்யுள் இலக்க ணம் அறிந்தே பாடல்களைப் பாடி யுள்ளார்கள் என்றறிக.

மற்றொருநாள் நான்காவது படிவம் வரைக்கும் படித்த மற் றோர் இளைஞர் என்னிடம் வந்து பாடல்களைச் சந்தத்தில் பாடி யிருப்பதைக் காட்டினார். இவர் முருக பக்தர்; அருணகிரிநாதர் இயற்றியருளிய திருப்புகழில் ஈடு பாடு மிக்கவர்; திருப்புகழ் சந்தத் தில் பாக்களைப் பாடியிருந்தார். பாக்களில் எதுகைத் தவறில்லை; விருத்த அமைப்புக் குறையு மில்லை. ஆனால், மோனைகள் இல்லை. சிற்சில பாக்களில் தற் செயலாக வந்த மோனைகள் மட்டும் ஈங்கும் ஆங்குமாகச் சிதறிக் கிடந்தன. இளைஞர் பாக் களைச் சந்தத்தோடு பாடிக் காட் டினார். "உங்களுக்கு யாப்பிலக் கணம் தெரியுமா?" என்று கேட்டேன். ஒன்றும் தெரி யாது. திருப்புகழ்ப் பாக்களை வைத்துக்கொண்டு பாடியிருக் கிறேன். அவரிடம் காட்டி னேன்; "நன்றாயிருக்கிறது" என் றார். இவரிடம் காட்டினேன். "தவறில்லை, அற்புதமாக இருக்கி றது" என்றார் என்று கூறினார் இளைஞர். "தங்கள் காலத்தை வீணாக்க எண்ணாமல் அவர்கள் அப்படிச் சொன்னார்கள். முத லாவது மிகச் சிறிய அளவு யாப் பிலக்கணம் தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்குக் கவி பாடும் ஆர்வம் இருக்கிறது. கரு வில் அமைந்த திருவும் காணப் படுகிறது. செய்யுள் இலக்கணம் ஒரு சிறிது கூறுகிறேன். தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லி அசை, வாய்பாடு, எதுகை, மோனை இவற்றைக் கூறி விசாகப் பெருமாள் ஐயர் யாப்பிலக்கணத்தைப் படிக்கு

மாறு வற்புறுத்தினேன். அவர் பொறுமையாகக் கேட்டுச் சென்றார்; ஒரு திங்களுக்குப் பின்பு என்னிடம் வந்து, "நீங்கள் சொன்னவாறு படித்துத் திருத்தி எழுதி வந்தேன். பாருங்கள்!" என்றார். படித்துப் பார்த்தேன். பாக்கள் ஓரளவு செம்மைப் பட்டன. "இப்போது திருப்புகழை நன்றாகப் படித்து அம்முறையில் எழுதுங்கள்" என்றேன். ஆகட்டும் என்று முக மலர்ச்சியுடன் சென்றார் அவ்விளைஞர். இங்ஙனம் சொல்வதைக் கேட்டுத் திருந்தும் இளைஞர்களும் இல்லாமல் இல்லை. இவ்விளைஞர் மேலும் மேலும் முயன்று வந்தால் சந்தப் பாக்களை இனிதாகப் பாடும் ஆற்றல் பெறலாம். பாடல் இயற்றுவதற்கு அறிவும் வேண்டும்; ஆர்வமும் வேண்டும். ஆர்வம் மட்டும் போதாது; கவி பாடுவதற்குரிய வெறியும் வேண்டும்; உணர்ச்சியும் வேண்டும். முயன்றால் முடியாதது இல்லை. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது பழமொழி "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்றார் முற்காலத்துப் பட்டினத்தடிகளார். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்" என்று பிற்கால ஔவையார் கூறியதும் இதற்குப் பொருந்தும். ஆதலால்; கவிதை இயற்ற ஆர்வமுள்ளவர்கள் கவிதைக் கலையைப் பற்றித் தெரிந்துகொண்டு யாப்பிலக்கணம் ஒரு சிறிதாவது பயின்று பாக்களை இயற்ற முன்வரவேண்டும்.

கவிதைக் கலையைக் குறித்து முற்ற முடியத் தெற்றெனவிளக்குவது அரிதினும் அரிது. பொருள் கவிந்து, இன்னோசை கவிந்து, கற்பார் உள்ளத்தைத் தன்பால் கவிந்து விடுமாறு செய்வது கவிதை. கவி—பகுதி; தை—விகுதி. நடத்தை என்பதில் 'தை' விகுதி வருதல் காண்க. இதை வடசொல் என்று கருத வேண்டுவதில்லை. மீன் என்பது தமிழ்ச் சொல். மின்னுவது மீன். விண்மீன் என்னுஞ் சொல்லைக் காண்க. முதிர்ந்திருப்பது முத்து. கால் (காற்று) பற்றி வருவது காலம். கால் என்பது இங்குப் பருவக் காற்று என்றறிக. நீர்மையுடையது நீர். நீரம் என்பது நீராயிற்று என்பதில்லை. இச் சொற்களைப் போலவே கவிதை என்பதும் தமிழ்ச் சொல்லே என்றறிக. கவிதை என்பது வடமொழியிலும் இருப்பதால் அதனை வடசொல் என்று கருதவேண்டுவதில்லை. ஆங்கிலத்தில் கொல் என்னும் பொருளில் quell என்னும் சொல்லும் ஈன் என்னும் பொருளில் yean என்னும் சொல்லும் ஒரே ஓசையில் இருப்பதால் அவை தமிழிலிருந்து ஆங்கிலத்தில் புகுந்தன என்று சொல்ல முடியுமா? அவை போலவே இச் சொல்லையும் கருதுக.

கவிதை, பாட்டு, பாடல், பா, செய்யுள் என்பனவெல்லாம் ஒரு பொருளுடையனவே. இக்காலத்தில் கவிதை என்பது உயர்ந்த தன்மையுடையதையும்,

செய்யுள் என்பது கடினமாக உள்ள பாவையும், பாட்டு, பாடல் என்பவை இசையோடு உள்ள வற்றையும், பா என்பது வகையையும் குறிப்பதாகப் பலர் கருதுகின்றனர்; எழுதியும் வருகின்றனர். முற்காலத்தில் இவையனைத்தும் ஒரு பொருளுடையனவாகவே கருதப்பட்டன. பா என்பதற்குப் பரந்த ஓசையுடையது என்பது பொருள். "பா என்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமற் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கு ஏதுவாகிய பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை" என்று தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். பரிமேலழகர் செய்யுள் என்பதற்கும் பாட்டு என்பதற்கும் வேறுபாடின்றித் தமது திருக்குறளுரையில் கூறுவதைக் காணலாம். திருக்குறள் முதற்பாவின் உரை முடிவில் பரிமேலழகர், "இச் செய்யுளால் முதற் கடவுளது இருப்புச் சொல்லப்பட்டது" என்றும், ஆறாவது குறளின் உரைமுடிவில் "இவை நான்கு பாட்டானும் கடவுளை நினைத்தலும் வாழ்த்துதலும் அவன் வழியில் நிற்றலுமுடையார் முத்திபெறுவர் என்பது சொல்லப்பட்டது" என்றும் குறிப்பிட்டிருப்பதைக் காண்க.

இனிக் கவிதையைக் குறித்து மேலை நாட்டு அறிஞர்களும் நமது தமிழகத்து அறிஞர்களும் கவிஞர்களும் கூறியிருப்பதைக் காண்போம். ஷெல்லி என்ற கவிஞர், "மிகச் சிறந்தனவும் மகிழ்ச்சி மிக்கனவுமான உள்ளங்களிலிருந்து மிகச் சிறந்த மகிழ்ச்சி மிகுந்த வேளைகளில் வெளிவரும் கருத்துப் பதிவே கவிதை" என்றார். ஜேம்ஸ் ஸ்டீபன் என்பார், "நமது இயல்பின் ஆழ்ந்த கருத்துக்கள், தூய உணர்ச்சிகள் இவற்றின் வெளியீடே கவிதை" எனக் கூறினார். மனக் கருத்துக்களையும் உள்ளத்தின் உணர்ச்சிகளையும் எழுத்து வடிவில் கொட்டிவிடுவது மட்டும் கவிதையாகுமா ? ஆகாது. அது இசை நயத்தோடு கூடியிருத்தல் வேண்டும். ஆதலால், கார்லைல் என்ற ஆங்கிலப் பேரறிஞர், "கவிதையை இசைக்கருத்து என்று கூறுகின்றோம்" என்றார். அக்காலத்தில் இங்கிலாந்தில் இலக்கிய உலகில் வல்லாட்சியாளராக விளங்கிய பெரும்புலவர் ஜான்சனும், "கவிதை என்பது இசையோடு கூடுமாறு பொருந்த இயற்றுவது" என்று குறிப்பிட்டார். இதுவும் போதுமா என்றால் இல்லை. கவிதைக்கு முருகுணர்ச்சி (அழகுணர்ச்சி) வேண்டும். எனவே, எட்கார் ஆலன்போ என்பார், "அழகினைச் சந்த அமைப்பில் புனைவதே அருங்கவிதை" என்றார். ஆனால், உணர்ச்சிகளையும் அழகினையும் உள்ளவாறு கூறுவது மட்டும் போதுமா ? போதாது. அதில் கற்பனையும் குழைந்திருக்க வேண்டும். ஆதலால்,

பேராசிரியர் ஜார்ஜ் ஓ நெய்ல் என்பார், "அழகின் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு விழுமிய முறையில் எழுந்துவரும் உணர்ச்சி, கற்பனை இவற்றின் மொழியே கவிதை" எனக் கூறினார். கவிதை வாழ்க்கையோடும் பொருந்தியிருக்க வேண்டும். எனவே, மேதகு கவிஞரும் அறிஞரும் திறனாய்வாளருமான மேத்யு அர்னால்டு என்பார், "வாழ்வின் ஆராய்ச்சிதான் வளம் மிக்க கவிதை" எனக் குறிப்பிட்டார்.

பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட புகழ்பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவரான வால்டேர், "உயர்ந்த உணர்ச்சி மிக்க உள்ளத்தின் இசையே கவிதை" என்றார். சிறந்த ஆங்கில எழுத்தாளராக இலங்கிய ஹாஸ்லிட், "உள்ளம் தன்னுடனும் இயற்கையுடனும் பேசும் மொழிக்குத்தான் கவிதை என்பது பெயர்" என்று குறிப்பிடலானார். எமிலி டிக்கன்சன் என்பார், "நான் ஒரு நூலைப் படித்தேன். அப்போது உடம்பு சிலிர்த்தது; என் தலை சுழன்றது. அது கவிதை நூல் என்பதை அப்போது உணர்ந்தேன்" என்று கவிதையின் தன்மை இதுவெனத் திறம்பட இயம்பினார்.

மெக்காலே என்ற மேதை மில்டனைக் குறித்தெழுதிய தமது கட்டுரையில், "நமது கற்பனையில் ஒரு தோற்றத்தைத் தரும் வண்ணம் சொற்களைப் பயன்படுத்தும் கலைதான் கவிதை; ஓவியம் தீட்டுவோன் வண்ணங்களைக் கொண்டு செய்வதைக் கவிஞன் செஞ்சொற்களால் செய்யுங் கலைதான் கவிதை" என்று குறிப்பிட்டுள்ளார். இயற்கை அன்னையை அயர்ச்சியின்றிப் பாடிய எழிற் கவிஞர் ஓர்ட்ஸ்வொர்த் "மோன மயமான போழ்தில் வெளிப்படும் உணர்ச்சியின் பேச்சே கவிதை" என்றார். இவ்வாறு மேலை நாட்டு அறிஞர்கள் கவிதையைக் குறித்து விளக்கியிருப்பதைக் கண்டோம்.

இனித் தமிழக அறிஞர்களும் கவிஞர்களும் கவிதையைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைப் பார்ப்போம். பவணந்தி முனிவர் தமது இலக்கண நூலில்,

"பல்வகைத் தாதுவின் உயிர்க்
குடல் போல்பல
சொல்லாற் பொருட்கு
இடனாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச்
செய்வன செய்யுள்'

என்றார். சிறுபஞ்சமூலம் என்னும் நூல், "பொருள் பெறும் நற்கவி" என்றும், "பாட்டு அவன் சிந்தையானாகும்" என்றும் செப்புகிறது. கம்பர், "ஆற்றொழுக்குப் போல் நடையமைந்து அணியென விளங்க வேண்டும்" என்றார். குமரேச சதகம்,

எழுத்தசைகள் சீர்தளைகள்
அடிதொடைகள் சிந்தையா
திருக்க வேண்டும் அப்பா;
ஈரைம் பொருத்தமொடு
மதுரமாய்ப் பளபளப்பு

இனிய சொற்கு அமைய
வேண்டும்;
அழுத்தமிகு குறளினுக்கு
ஒப்பாகவே பொருள்
அடக்கமும் இருக்கவேண்டும்;
அன்பான பாவினம்
இசைந்து வரவேண்டும்; முன்
அலங்காரம் உற்றதுறையில்
பழுத்து உளம் உவந்து ஓசை
உற்றுவரல் வேண்டும்;
பாங்காக இன்னவை
பொருந்திடச் சொற் கவிதை
பாடிற் சிறப்பென்பர்காண்.”

என்று கவிதைக்கு வேண்டிய இலக்கணங்கள் அனைத்தையும் ஒரு சேர எடுத்து மாண்புறக் கூறுவது காண்க.

தேசியக் கவிஞர் அமரகவி பாரதியார், “அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை” என்றும், ‘பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இவை இருக்கவேண்டும்’ என்றும், “ஓரே அடியாகக் கவிதை சுருங்கிப் போய்விடுவது நல்லதன்று” என்றும் கவிதைப் பண்புகளைத் தமது கட்டுரைகளில் வெளியிட்டுள்ளார்.

கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை,

“உள்ளத் துள்ளது கவிதை—
இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—
உண்மை
தெரிந்துரைப்பது கவிதை”

என்றார். இவ்வாறு தண்டமிழ் நாட்டு ஒண்டமிழ்க் கவிஞர்களும் இலக்கண அறிஞர்களும் கவிதைக் கலையைப் பற்றித் திறம்படக் கூறியுள்ளார்கள்.

இங்குக் கூறியுள்ள கவிதையின் இலக்கணம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பண்பை அல்லது ஓரிரண்டு பண்புகளை மட்டும் குறிப்பிடுகின்றதேயன்றி முழுப் பண்புகளையும் கூறவில்லை; கூறவும் முடியாது. கவிதையின் பண்பு அத்தகையது. சுருங்கச் சொன்னால், உத்தம மனப்பான்மை; எளிய இனிய சொற்கள், எதையும் ஊடுருவிப் பார்க்கும் அறிவுக் கூர்மை, சமூகத்தை இயக்குந் தலைமை, விருப்பு வெறுப்பற்ற முருகுணர்ச்சி, மன்பதையிடம் அன்பு, இடத்துக்கு ஏற்ற இசை இவற்றுடன் அனுபவத்தையும் இழைத்துச் சொல்லி, வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டித் திரும்பத் திரும்பப் படித்து இன்புறுமாறு செய்வது எதுவோ, உணர்ச்சிவசப் படுத்துவது எது எதுவோ, அதுதான் கவிதை, சிறந்த செய்யுள், உயர்ந்த பாடல் எனலாம்.

—மதுரை எழுத்தாளர் மன்ற
ஆண்டு விழா மலர்.

# பலதுறை வழிகாட்டி

டாக்டர். அ. சிதம்பரநாதன் எம். ஏ., எம். எல். சி.

திரு. வி. க. இப்பொழுது உயிருடன் இருந்தால் எண்பது வயது உடையவராக இருந்து தமிழ்நாட்டு அரசியல் உலகிலும், சமயத்துறையிலும், தலைமைப் பெரும்பங்கு கொள்ளுவதற்கு உரியவராக இருப்பார் என்பது உறுதி. எனினும் பத்து ஆண்டு களுக்கு முன்னரே அவர் மறைந்துவிட்டார். [மறைந்த நாள் (17–9–63) மறைதற்குச் சில ஆண்டுகள் முன்னர் அவர் நோய்வாய்ப்பட்டு முடங்கியி ருக்க வேண்டிய நிலை உடைய வராயினர். அவர் உடல்தளர்ந்த நிலையிலும் மனந் தளராமல் பொ றுமை யோடும் ஆர்வத்தோடும் வாழ்ந்து வந்தார். அவருடைய ''முதுமை உளறல்'' முதலிய முதிர்ந்தகால நூல்கள் அவருக் குக் கடைசி வரையில் இருந்த உள்ளக் கிளர்ச்சியை எடுத்துக் காட்ட வல்லன. திருவாரூரில் விருத்தாசல முதலியாரின் மகனாக 1883 ஆகஸ்டு 26-ஆம் நாள் தோன்றிய அவர் ஆசிரியர் உலகத் திலும், தொண்டர் உலகத்தி லும், அரசியல்வாதியர் உலகத் திலும், தொழிலாளர் உலகத் திலும் சமயக் கணக்கர் உலகத் திலும் மாண்புடையவராய் விளங் கிப் பெருமை யுற்றார். தமிழ் நாட்டின் பல வகையான வளர்ச்சி களிற் கருத்துடையவராய் அவர் வீற்றிருந்தார். பழந்தமிழ்நாடு சிறப்புடையதாய் இருந்ததை அடிக்கடி நினைவுபடுத்தி வந்த அவர் இக்கால மக்களுடைய அவலநிலையை ஒப்பிட்டுக் காட்டி, தமிழ் மக்கள் இழந்த பெருமை களையெல்லாம் வருங் காலத்தில் எய்தப் பெற வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். இலக்கிய, அரசியல் சமய மாநாடுகள் பலவற் றில் தலைமைதாங்கியும் விரிவுரை யாற்றியும் மக்கள் உள்ளத்தை நல்லவழிப் படுத்த முயன்ற பெரு மகனார் அவர். அவருடைய எழுத்துக்களால் அன்று திருந் திய பலரும் இன்று திருந்தும் பலரும் எக்காலத்தும் திருந்தக் கூடிய பலரும் உண்டு.

பொதுவாக, தாழ்த்தப்பட்டவ ரிடத்தில் அவருக்குத்தனி ஈடு பாடு உண்டு. பரம்பரையாக அடக்கியும் ஒடுக்கியும் வைக்கப் பட்டு வந்த தீண்டத்தகாதவர் என்பாருடைய முன்னேற்றத்தில் அவருக்கிருந்த ஆர்வம் அளவிடற் பாலதன்று. அறிவுத் தொழிலா ளரால் அடக்கியும் ஒடுக்கியும் வைக்கப்பட்டு வந்த கைத் தொழி லாளர்கள் முன்னேறி வாழ்க்கை வளம்பட்டு வாழவேண்டும் என்று விரும்பியவர்களுள் திரு. வி. க. முதலிடம் பெறுபவர். பல்லாண் டுகளாக விலங்கினம் போல் அடக்கி ஆளப்பட்டு வந்த பெண் களின் பெருமையை எடுத்துப் பகர்ந்து அவர் இல்லையெனின் ஆடவர் வாழார், ஆடவர் உயர்வு

பெறார் என்பதை எடுத்துக்காட்டிய நுண்ணறிவு அவருடையதாகும். அரசியல் உலகில், அந்நியர் ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டு நாயினுங் கேடாய் நலிந்த நாட்டினரைத் தட்டியெழுப்பி நிமிர்ந்து நிற்கும்படி செய்த பெருமையிற் சிறந்த பங்கு திரு. வி. கல்யாணசுந்தரனாருக்கு உரியது.

அவர் மறைந்த பதினோராவது ஆண்டு நிறைவு நாளைப்பற்றி எண்ணும் பொழுது இப்பொழுது அவருடைய கருத்துக்கள் சிலவற்றைக் கருதுதல் தக்கதாகும். அக்கருத்துக்களை அவருடைய சொற்களாலேயே அறிந்து கொள்ளுதல் நல்லது. பேச்சிலும் எழுத்திலும் எளிமையும், தூய்மையும் விறுவிறுப்பும் விரவியதாக அவருடைய நடை இருந்தது. அவரது நடையில் அமைந்த சில பகுதிகளை இப்பொழுது நினைவு கூர்வோமாக:

“தீண்டாமையைப் போக்க இந்நாளிற் காந்தியடிகள் முயன்று வருகிறார்கள். இப்பெரியார் சொல்வழி நின்று கடனாற்றச் சாதிக் கூட்டத்தார் ஒருப்படுகிறார்களில்லை: ஆனால் அவருடைய திருவுருவப் படங்களைப் பூசிக்கவும் அவற்றிற்குத் திருவிழா செய்யவும் ஒருப்படுகிறார்கள். தீண்டாமையை விட்டொழிக்க நம்மவர்கள் நடுக்குறுகிறார்கள். தீண்டாமை உள்ளமட்டும் நாட்டுக்கு உய்வில்லை என்பது ஒருதலை.”

“நல்ல அரசியல் இல்லா நாட்டில் அமைப்பேது? வாழ்வேது? அறஒழுக்கமேது? ஒரு நாட்டில் நாகரிகமோ அநாகரிகமோ அந்நாட்டின் அரசியலை அன்றோ பொறுத்து நிற்கும்? அரசியல் என்பது உலகிடை மறவினை மலியாது அறவினை மலியுமாறு செய்தற்கு ஏற்பட்ட ஓரமைப்பு. குடியாட்சியோ கோனாட்சியோ குடிக்கோன் ஆட்சியோ எவ்வாட்சியோபற்றி இயங்கினும் இயங்க. அதனால் குடி மக்கட்குக் கேடு விளைதல் ஆகாது என்பது அன்றோ கவனிக்கத் தக்கது? பெயருக்காக குடியாட்சி என்று ஆட்சி வகுத்துச் செல்வாக்குடைய சிலர் ஒன்றுகூடி நாட்டை வருத்துவதால் என்ன பயன்? எவ்வாட்சியாயினும் அதன் அடியில் அறனும் அன்பும் அருளும் கால்கொண்டு நிற்றல் வேண்டும்.”

“மக்கள் உயிர்க்கு ஆணியாய் விளங்கும் பிறப்புரிமைக்கு எவருங்கேடு சூழ்தல் ஆகாது. ஒருவர் பிறப்புரிமையை மற்றவர் கவர்வது இயற்கைக்கே மாறுபாடு.”

“தமிழ்நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் தமிழ் மக்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். தமிழ் நாடு ஒற்றுமை பெற வேண்டுமானால், தமிழ் மொழி பேசுவோர் அனைவரும் சகோதரர் என்பதைத் தமிழ் மக்கள் உணர்தல் வேண்டும். தமிழ் மொழியைத் தமிழ் நாட்டவர் தமது உயிரினும் சிறந்த

தாகக் கொண்டு ஓம்புந்நாள் தமிழ் நாட்டின் உரிமை நாளாகும். தாய்மொழியிற் பற்றில்லா நாடு என்றும் அடிமை நாடாகவே இருக்கும்."

"தன்னலம் கருதாத் தொண்டே யாண்டும் பரவினால் உலகில் கொடுமை ஏது? நடுக்கம் ஏது? கவலை ஏது? உலகில் வாழும் ஒவ்வொருவரும் பிறர்க்குத் தொண்டு செய்யவே படைக்கப் பட்டதாக நினைத்துத் தம் கடன் ஆற்றினால் உலகம் தெய்வலோகமாக வன்றோ மாறும். எச்சமயத்தை எடுத்து ஆய்ந்தாலும் அதன் கண் தன்னல மறுப்பும் பிறர் நலத் தொண்டும் பேசப்படுதல் காணலாம். சமயங்கள் பலவாகக் காணப்பட்டாலும் அவற்றினூடே என்றும் ஒரு பெருஞ் சமரசம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒருவருக் கொருவர் தொண்டராகும் தெய்வீகக் கொள்கை மாண்டு ஒருவருக் கொருவர் தலைவராக வேண்டும் என்னும் முனைப்புக்கொள்கை வளர்ந்து வருகிறது."

"பெண் ஒரு பாதி: ஆண் மற்றொரு பாதி. இரண்டுஞ் சேர்ந்த ஒன்றே முழு மனிதத் தன்மை. இங்ஙனமாக, வாழ்வில் ஒரு பாதி புரையோடல் என்பது எத்தகைய அறியாமை; உடலில் ஒரு பாதி குருதி யோட்டம் குன்றினால் உடல் நிலை என்னும்?

"தொண்டர்களுக்குப் பெரிய சொற்பொழிவு வேண்டுவதில்லை. அன்னார்க்கு வேண்டுவது செயலே." 'வித்தகம் பேச வேண்டாம். பணிசெய்ய வேண்டும்" என்னும் சீரிய உரை ஈண்டு உணரற் பாலது.

இத்தகைய பொன்னுரைகள் பலவற்றை அவருடைய கட்டுரைகளிற் காணலாம். அவற்றை இன்று நினைவிற்குக் கொண்டு வந்து வாழ்க்கையை வளமுறச் செய்வோமாக.

—"தமிழ் நாடு"

---

20 பக்கத் தொடர்ச்சி

கள் உட்பட மொத்தம் 1200 தொழிற் கல்விக் கல்லூரிகள் இருக்கின்றன.

இந்தியாவிலுள்ள தொழில் கல்விக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிற மாணவர்களின் எண்ணிக்கை 1946-47ல் 34,000 ஆக இருந்தது. 1950–51ல் 54,000 ஆகவும், 1955–56ல் 94,000 ஆகவும், 1960-61ல் 1,94,000 ஆகவும் அதிகரித்து விட்டிருக்கிறது. 1965 – 66ல் இந்த எண்ணிக்கை சுமார் 3 லட்சத்தை (பெண்கள் 52,000) எட்டிவிடும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இக்கல்லூரிகளுக்கு 1946–47 இல் மொத்தம் ரூ. 1.86 கோடி செலவிடப்பட்டது. பின்னர் அது 1950–51ல் ரூ. 4.22 கோடியாகவும், 1955–56ல் ரூ. 7 கோடியாகவும், 1960–61ல் ரூ. 15.80 கோடியாகவும், அதிகரித்தது. நடப்பு ஆண்டில் ரூ. 32 கோடி செலவிடப்படும்.

—"தினமணி"

# வளர்ச்சியில் மகிழ்ச்சி!

இந்தியா சுதந்திரம் அடைந்து இன்றோடு 18 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன; அதாவது சுதந்திரம் "மேஜர்" ஆகிவிட்ட ஆண்டு இது. இந்த 18 ஆண்டுகளில் தேசம் பல துறைகளில் முன்னேறியிருக்கிறது. அதைப் பற்றிய சந்தோஷத்தில் நமது தவறுகளையும் கோணல்களையும் மறந்துவிடக் கூடாது. இன்று காணப்படும் சிக்கல்களையும் மதிப்பிட வேண்டும். சிக்கல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இவற்றையும் மதிப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.

குழந்தைகளின் வளர்ச்சியில், 10வது வயது முதல் 16 ஆவது ஆண்டு வரையில் மிகவும் நெருக்கடியான கட்டம் என்பது கல்வி நிபுணர்களின் அபிப்பிராயம். 10 வயது முதல் 16 வயது அல்லது 18 வயது வரையில் மனிதனின் உடற்கூறு, மனத்தின் அமைப்பு, மூளையின்போக்கு இவற்றிலெல்லாம் பெரிய மாறுதல்கள் ஏற்படுமாம். அந்தப் பருவத்தில் சிறுவர்களின் வளர்ச்சி சரியானபடி பண்படுத்தப்படுவது அவசியம் என்று கல்வி நிபுணர்கள் கருதுகிறார்கள். அகம்பாவம், இமிர், சோம்பேறித்தனம், பயம், வரட்டுதைரியம், அவநம்பிக்கை, அஜாக்கிரதை, நம்பிக்கை, துணிவு, கூச்சம்போன்ற நல்ல அம்சங்களும் கெட்ட அம்சங்களும் இந்த "அடாலஸன்ஸ்" என்ற பருவத்தில் (அதாவது, குழந்தையென்றும் சொல்ல முடியாத, பக்குவமடைந்தவன் என்றும் சொல்ல முடியாத இந்தப் பருவத்தில்) ஒன்றோடொன்று மோதிக்கொண்டு நிற்குமாம். படிப்பு, உணவு, உழைப்பு, விளையாட்டு இவற்றைச் சரியாக அமைத்து ஒருமுகப் படுத்தி பராமரிக்காவிடில், மூளை வளர்ச்சி, விவேகம், நிதானம், துணிவு முதலிய அம்சங்கள் சரியாக உருவாக மாட்டா. இதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு இன்று பதினெட்டு வயது நிரம்பப் பெறும் "சுதந்திர இந்தியாவை" மதிப்பிட்டுப் பார்க்கும் போது,சென்ற ஏழெட்டு ஆண்டுகளில் இந்தக் குழந்தை சரியாகப் பராமரிக்கப்படாமல் போனது போலவே தோன்றுகிறது.

இது போன்ற "உவமைகளையும்" "உருவகத்தையும்" அப்படியேகீட்டிப்பூர்ணமானபொருத்தம் காண முடியாது. ஆனாலும்,

நமது பொருளாதாரம், கல்வி வளர்ச்சி, பண்பு வளர்ச்சி, பாது காப்புத்திறமை இவை இன்று என்ன நிலையில் இருக்கின்றன என்பதை மதிப்பிட்டுப் பார்ப்பவர்கள், இந்தக் குழந்தைக்கு (1) அதிகமாகச் "செல்வம்" கொடுத்ததாலோ, (2) அதிகமாக மிரட்டினதாலோ (3) தாங்கமுடியாத பளுவைச் சுமத்தியதாலோ, (4) அதிகமாக ஆசை காட்டினதாலோ, எக்காரணத்தாலோ தேசத்தின் பல அம்சங்கள் சீரும் ஒழுங்குமின்றித் தாறுமாறாக வளர்ந்திருப்பதாகவே முடிவு கட்ட வேண்டி யிருக்கிறது.

பொருளாதாரத் துறையில் "சோஷலிஸம்" என்ற குறிக்கோள் மூலம் 'சமத்துவம்' என்ற லட்சியத்தை நோக்கி முன்னேற முயன்றோம். எவ்வளவு "சமத்துவம்" ஏற்பட்டிருக்கிறதா என்பது நிச்சயமாகத் தென்படவில்லை. ஆனால், ஒன்று நிச்சயமாகப் புலனாகிறது. ஏழைகளின் வாழ்க்கையில் அவர்களது ஆசை வளர்க்கப்பட்டதே யொழிய, அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வசதிகள் பெருகிவிடவில்லை. ஊதியம் உயர்ந்ததைவிட விலைவாசிகள் அதிகமாக உயர்ந்தன. கல்வி பயில்வோரின் தொகையைப் பெருக்க முயன்ற போது, கல்வி முறையை "சீர்திருத்த" ஆரம்பித்தோம். ஆனால், பள்ளிக் கூடத்துக்குப் போகிறவர்களின் தொகை பெருகினதற்குத்தக்கபடி, நவீன விஞ்ஞானத் துறையில் கல்வியின் தரம் உயரவில்லை. கல்வியைச் "சீர்திருத்து வதற்கு" முந்தின காலத்தில் 10 வருஷம் கல்வி பயின்றவர்களிடையே, எவ்வளவு விஷய அறிவும், ஒழுக்கமும், அடக்கமும் காணப்பட்டன என்பதையும், இப்போது 10ஆண்டுகள் பள்ளிக் கூடத்தில் இருப்போருக்கு எவ்வளவு மனப் பக்குவமும், விஷய அறிவும் இருக்கின்றன என்பதையும் ஒப்பிட்டால், நிலைமை திருப்திகரமாக இல்லை. "சீர்திருத்துவதற்கு" முன்னர் இருந்த கல்வி முறையானது குமாஸ்தாக்களைத் தயாரிப்பதற்குத்தான் லாயக்காக இருந்தது என்று சொல்லி வந்தோம். சீர்திருத்தப்பட்டுள்ள கல்வி, நம் இளைஞர்களை அதற்குக்கூட போதிய பக்குவம் இல்லாதவர்களாக ஆக்கிவிட்டதோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

பொருளுற்பத்தி முறையில் சிறிது காலமாக விஞ்ஞான நுட்பமும், பொறி இயல் நுட்பமும் முக்கியமான அம்சங்களாகிவிட்டன. அஸ்திவாரத்தைப் பலமாக அமைத்துவிட்டால்முன்னேற்றம் தீவிரமாக நடைபெறும். ஆனால் அஸ்திவாரம் போடும் வேலை அவசரமாக நடக்கமுடியாது. கட்டடம் கட்டும் போது ஒவ்வொரு கட்டத்திலும் உபயோகித்த சிமெண்ட் நன்கு "ஊறி" உரம் பெறுவதற்கு சாவகாசமளிப்பது அவசியம். அதற்குப் பொறுமை இல்லாமல், அஸ்திவார வேலையில் அதிக அவசரம் காட்டி, அகலக்கால் வைத்துவிட்டதால், ஆரம்பித்த பல தொழிற்சாலைகள் தமக்கு வேண்டிய

சாதனங்கள், கச்சாப் பொருள்கள் முதலியவற்றுக்குப் பஞ்சம் ஏற்பட்டு முழு நேரம் வேலை செய்ய முடியாமல் திணறுகின்றன. வேலைத் திறன், தொழில் நுட்பம், சிக்கன நிர்வாகம் இவற்றில் முக்கியம் செலுத்தாமல், சமத்துவம், ஊதிய உயர்வு இவற்றில் அதிக கவனம் செலுத்தினோம். இது காரணமாக, நாம் தயாரிக்கும் பொருள்களின் "அடக்க விலை" வெளி நாட்டார் ஏற்றுமதி செய்யும் பொருள்களின் அடக்க விலையைவிட உயர்ந்து போய் நம் தயாரிப்புகளுக்கு உலக மார்க்கெட்டில் கிராக்கி இல்லாமல் போகிறது. "வெளி நாட்டுச் செலாவணிப் பஞ்சம்" என்பது இதுதான். நமது தவறுகளால் ஏற்பட்ட இதே "வெளிநாட்டுச செலாவணிப் பஞ்சம்" காரணமாக ஏற்கனவே ஸ்தாபிக்கப் பட்டுள்ள தொழில்கள் திணறுகின்றன.

சமாளிக்க முடியாத ஆசைகளைக் கிளப்பி விட்டதன் மூலம் சமூகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் அதிருப்தியே வளர்ந்திருக்கிறது. இந்த அருப்தி, பலவித ஆர்ப்பாட்டங்களாகத் தலையெடுத்து "சட்டம், அமைதி, ஒழுங்கு" பற்றிய பல பிரச்னைகளை ஏற்படுத்தி வருகிறது. இதையெல்லாம் இவ்வாறு விவரித்து எழுதுகிறோமாயினும், 18 ஆண்டு காலத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட வில்லை என்று நாம் கூறுவதாக யாரும் நினைக்கவேண்டியதில்லை. பலதுறைகளில் நாம் வளர்ச்சி யடைந்துதான் இருக்கிறோம்.

உதாரணமாக, சிறுவர்களில் பெரும் பகுதியினருக்கு எழுதப் படிக்கவாவது தெரிவதற்கு வேண்டிய வசதி ஏற்பட்டிருக்கிறது என்பது சிறிய விஷய மல்ல. வருஷா வருஷம் ஜனத்தொகை பெருகி வருவதன் விளைவாக சென்ற 18 ஆண்டுகளில் ஜனத் தொகை சுமார் 60 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. இந்த ஜனப் பெருக்கத்திற் கேற்றபடி பெருகாவிடினும் உணவு உற்பத்தி ஓரளவாவது அதிகரித்திருக்கிறது. நிலச்சீர் திருத்தத்தின் பேரால் செய்த சில காரியங்களால் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இல்லாவிடில் விவசாயத்தில் புதிய முறைகள் இன்னும் துரிதமாகப் பரவியிருக்கும். பல புதிய பொருள்கள் தயாரிப்பதற்கு நாடெங்கிலும் பல பெரிய, சிறிய, தொழிற் சாலைகள் ஏற்பட்டிருப்பதும் சிறிய விஷயமல்ல.

வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையானாலும் அந்த வளர்ச்சியில் கோணல்களும், முடிச்சுகளும், சிக்கல்களும் அதிகமாக இருக்கின்றன என்பதையே நாம் குறிப்பிடுகிறோம். வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவும், பகட்டாகவும் காரியம் செய்யாமல் சிறிது நிதானத்துடன் காரியம் செய்திருந்தால், இந்தக் கோணல்களையும், சிக்கல்களையும் தவிர்த்து அஸ்திவாரம் பலமடைந்திருக்கும். மரம் சரி

யாக வளர்ந்தால், உத்திரம், ஜன்னல், பலகை முதலிய காரியங்களுக்கு உதவும். கோணலும், திருகலுமாக வளர்ந்தால் அடுப்பு எரிக்கத்தான் பயன்படும். ஆகையால், வளர்ச்சிக்காக நாம் போடும் திட்டங்கள் நிதானத்துடனும், ஒழுங்குடனும் நடக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவதே நமது நோக்கம்.

இன்றைய நிலைமையைப் பற்றி மக்கள் அதைரியப்பட வேண்டியதில்லை. அஸ்திவாரத்தைப் பலப்படுத்திக்கொண்டு இந்நாடு நிச்சயமாக முன்னேற முடியும். வரட்டு ஜம்பம், அரசியல் பிரசார நோக்கம், கற்பனையான கோணங்கள் இவற்றைக் கைவிட்டு (1) அஸ்திவாரத்திலுள்ள கோளாறுகளை எவ்வாறு நீக்கலாம் (2) போட்ட அஸ்திவாரத்தின் மீது எவ்வளவு உயரம் கட்ட முடியும் (3) நம்மிடமுள்ள வசதிகளைக் கொண்டு பிறர் உதவியில்லாமல் நாம் செய்யக்கூடியது எவ்வளவு என்பதை மதிப்பிட்டு, சிறிது நிதானத்துடன் காரியம் செய்ய வேண்டிய கட்டத்தை நாம் அடைந்துள்ளோம். இந்தக் கட்டத்திற்கு அவசியமான அடக்கம், பொறுமை, நிதானம், துணிவு ஆகியவற்றை ஆண்டவன் நமக்கு அருள்வானாக. 18 வயது முடிவு பெற்றதற்குத் தக்கமனப்பக்குவத்துடன் நடந்து கொள்ளும் விவேகத்தை வளர்த்துக் கொள்வோமாக.

—தினமணி தலையங்கம்


" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# தமிழில் முதற் புதினம்

தமிழ் பழைமையான மொழியாக இருந்த போதிலும், இலக்கிய வளம் வாய்ந்த மொழியாக இருந்த போதிலும் அதில் சில துறைகள் இல்லாமலே இருந்தன. இருந்தவைகளுள் சில வளம் குன்றி யிருந்தன. கவிதைத் துறையில் தன்னிகரில்லாத தமிழ், உரை நடையில் போற்றுவார் அற்றுக் கிடந்தது. பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் உரை நடை வளராமையால், மொழியும் நாடும் நலிந்தன. இந்நிலையை நன்குணர்ந்து மொழிப் பணியாற்ற முன் வந்தவர்களுள் ஒருவர், வேதநாயகம் பிள்ளை.

"'தமிழில் உரை நடை நூல்கள் இல்லை என்பது ஒப்புக் கொள்ளப் படுகிறது. இந்தக் குறைபாட்டைப் பற்றி எல்லோரும் வருந்துகின்றனர். 'இக் குறையை நீக்கும் நோக்கத்துடன் தான் இந்தக் கற்பனை நூலை எழுத முன் வந்தேன்' என்று வேதநாயகம் பிள்ளை அவர்களே, பிரதாப முதலியார் சரித்திரத்தின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். ஆம், 'பிரதாப முதலியார் சரித்திரம்' தான் தமிழில் வெளிவந்த முதற் புதினமாகும்.

வேதநாயகம் பிள்ளையின் அன்றைய விருப்பம் இன்று நிறைவேறி விட்டது என்று சொல்லலாம். இன்று தமிழில் உரைநடை பாராட்டத்தக்க வளர்ச்சியினைப் பெற்று விட்டது. 'பிரதாப முதலியார் சரித்திரத்தைப்" படிக்காமலேயே புதினம் எழுதுகின்றவர்கள் இன்று இலக்கிய உலகிலே நடமாடினாலும், அப்புதினம் எதற்காக வெளி வந்ததோ அந்தநோக்கம் நிறைவேறி விட்டது. அன்று இருந்த குறை இன்று நிறைவாகி விட்டது.

புதினம் எழுதுகின்றவர்களை மூன்று பெரும் பிரிவிற்குள் அடக்கலாம். கடந்த காலத்தைக் காட்டுபவர்கள், நிகழ் காலத்தின் படப் பிடிப்பாளர்கள், எதிர் காலத்தின் வழி காட்டிகள், என்று மூவகைப் படுவர் எழுத்தாளர்கள். வேதநாயகம்பிள்ளை இதில் மூன்றும் பிரிவைச் சேர்ந்தவர். 'உலகம் இப்படி இருக்கிறது என்று காட்டுபவர் அல்லர் அவர். உலகம் இப்படி இருக்க வேண்டும் என்று காண்பிப்பவர் அவர்.' இருக்கின்றவைகளைப் பற்றி எண்ணவில்லை. இருக்கவேண்டியவைகளைப்பற்றித் தான் சிந்திக்கின்றார் அவர்.

சமுதாயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து, சில தெளிவான முடிவுகள் எடுத்து, அறவுரைகளை நிரப்பி "பிரதாப முதலியார் சரித்திரம்" என்னும் உரை நடைக் காப்பியத்தை நமக்குத் தந்திருக்கின்றார் வேதநாயகனார்.

"பிரதாபமுதலியார் சரித்திரம்" எந்த ஒரு குறிப்பிட்ட

கொள்கையையும் வலியுறுத்துவதற்காக எழுதப்படவில்லை. எந்த ஒரு கருத்தை மையமாகக் கொண்டும் கதை சொல்லவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான பல அறவுரைகளைத் தன்னகத்தே கொண்டு, காட்டாறு போல் கதை செல்கிறது.

“நன்மை செய்வதால் கிடைக்கும் நன்மை என்ன? தீமை செய்வதால் கிடைக்கும் தீமை என்ன? வாழ்க்கையில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமை என்ன? தெய்வநம்பிக்கையால் வரும் பேறு என்ன? என்று அத்தனை பிரச்சனைகளையும் ஆய்கின்றார் வேதநாயகம் பிள்ளை. மேலும், மொழிப்பற்று, நாட்டுப்பற்று. நிருவாகம் எப்படியிருக்க வேண்டும்? வழக்கு மன்றங்கள் எப்படிச் செயல் பட வேண்டும் என்று எல்லாவற்றைப் பற்றியும் எண்ணி, எல்லாவற்றையும் ஒரே புதினத்தில் திணிக்கிறார், வேதநாயகனார்.

மையக் கருத்து ஒன்று இல்லாமல், எல்லாக் கருத்துக்களையும் ஒரே புதினத்தில் ஆசிரியர் கூற முன் வந்ததாலே, ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ ஒரு உருவத்தை—அமைப்பை இழந்துவிடுகின்றது. அறவுரை கூறும் பல சிறு கதைகளின் தொகுதியாக, இப்புதினம் விளங்குகின்றதே யன்றி, ஒரு நெடுங்கதையாக இல்லை. புதினத்தின் போக்கிற்குச் சற்றும் தொடர்பில்லாத நிகழ்ச்சிகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் நீக்கிவிட்டுப், ‘பிரதாப முதலியார் சரித்திர’த்தைப் படித்தால் அது ஒரு நெடுங்கதையாக—புதினமாக இருக்காது. மாறாக, சில கிழமை ஏடுகளில் வெளிவரும் ‘குறுநாவலை, ஒத்ததாகவே இருக்கும். இதற்குக் காரணம், இப்புதினம் ஒரு சில கருத்துக்களை மையமாகக் கொள்ளாமல் பத்து அல்லது பன்னிரண்டு புதினங்களில் சொல்ல வேண்டிய கருத்துக்களை இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பது தான்.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் அரிய கருத்துக்கள் பலவற்றைக் கொண்டுதான் ‘பிரதாப முதலியார் சரித்திர’த்தை வேதநாயகம் பிள்ளை படைத்திருக்கிறார். நூல்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் அறநெறிக் கொள்கைகளுக்குச் சான்று காட்டவே இப்புதினத்தை எழுதியதாக, அவர் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். அறநெறிக் கொள்கைகள், ஒரு புதினத்தில் அடங்க வேண்டிய அளவை மீறிக் கொண்டு, வெளியே தலை நீட்டி புதினத்தின் அழகை ....அமைப்பைக் கெடுத்தாலும், படிப்பவன் பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்ளுகிறான். அந்த அளவில் வேதநாயகனார் வெற்றியே பெற்றிருக்கிறார்.

ச. செந்தில்நாதன்

வேதநாயகம் பிள்ளை நம்மை விருந்துக்கு அழைத்து, ஒரே வேளையில் ஒரே இலையில் பல இனிப்புப் பண்டங்களை வைக்கின்றார். நம்மால் தான் அவ்வளவு இனிப்புப் பண்டங்களையும் சாப்பிட முடியவில்லை. அப்படியே சாப்பிட்டாலும், சாப்பிடச் சாப்பிட மெல்லத் தெவிட்டுவதை உணர்கிறோம். அதையும் பொருட் படுத்தாது சாப்பிட்டாலும், சாப்பிட்டது சீரணமாகுமா என்று ஐயப் படுகிறோம்.

'பிரதாப முதலியார் சரித்திரத்'தின் கதை தான் என்ன? கதை என்று பார்ப்போமேயானால் குறிப்பிடத் தகுந்தாற் போல் அதில் ஒன்றும் இல்லை என்றே சொல்ல வேண்டும். கடமையும் காதலும் மோதவில்லை; நீதியா பாசமா? என்ற பிரச்சனையும் இல்லை. காதலியை நினைத்துக் காதலன் ஆற்றங் கரையில் அலையவும் இல்லை; காதலனின் உள்ளத்தை மற்றொருத்தி கவர்ந்து விட்டாளே என்று காதலி உருகவும் இல்லை. இத்தனையும் இல்லாமலே புதினம் நன்றாக இருக்க முடியுமா? என்று சிலர் எண்ணலாம். ஆனால் இத்தனையும் இல்லாமல் "பிரதாப முதலியார் சரித்திரம்" நன்றாக இருக்கிறதே!

"பிரதாப முதலியார் சரித்திர"த்தில் சாதாரணப் புதினங்களில் காணப்படும் எல்லா நிகழ்ச்சிகளுமே இருக்கின்றன. கதைத் தலைவன் பிரதாப முதலியாருக்கும் கதைத் தலைவி ஞானம்பாளுக்கும் நடக்க விருக்கும் திருமணம் ஒரு சிறு நிகழ்ச்சியால் தடைப் படுகிறது. காதலர் பிரிகின்றனர். ஒரு சமயம் உனக்குத் தந்தை வேண்டுமா? கணவன் வேண்டுமா? என்று ஞானம்பாளைக் கேட்கிறார் அவள் தந்தை. அதே போல் உனக்குத் தந்தை வேண்டுமா? மனைவி வேண்டுமா? என்று பிரதாப முதலியாரைக் கேட்கிறார் அவரின் தந்தை. இப்படிப்பட்ட பாசப் போராட்டமும் இப் புதினத்தில் வரத்தான் செய்கிறது.

காதலர் பிரிவும், பாசப் போராட்டமும், இப்புதினத்திலும் காணப்பட்டாலும், அவைகளுக்கு முக்கியத்துவம் இல்லை. அதனால், அவைகள் இருந்தும் இல்லாதவைகளாகவே இருக்கின்றன. பிற புதினங்கள் போல் காதலும் பாசமும், கடமையும் தியாகமும் இப் புதினத்தை ஆக்கிரமித்துக் கொள்ளவில்லை. அவைகள் கதை என்றால் சிறிது இருக்க வேண்டுமே என்ற அளவில் இருந்து விட்டு, இல்லாமல் பிறகு சென்று விடுகின்றன. அதனால்தான் நாம் காதலர் பிரிகின்றபோது கலங்கவில்லை; பாசப் போராட்டம் வருகின்றபோது பதைக்க வில்லை.

திடுக்கிடும் நிகழ்ச்சிகளும் திடீர் திருப்பங்களும் "பிரதாப முதலியார் சரித்திரத்"தில் இல்லாமல் இல்லை. ஆனால், அவையெல்லாம் எப்படி வந்தனவோ, அப்படியே சென்று விடுகின்றன.

பிரதாப முதலியாரின் திருமணம் நிற்கின்றபோதும், மனைவியைப் பிரிந்து வேற்று நாட்டில் அல்லற் படும் போதும், ஞானம்பாள் அம்மையார் இறந்து விட்டாள் என்ற பொய்ச் செய்தியைக் கேட்கும் போதும நம் உள்ளம் வருந்தாமல் இல்லை; நெகிழாமல் இல்லை. ஆனால் அந்த வருத் தமும் நெகிழ்ச்சியும் சில விநாடி களிலேயே மறைந்து விடுகின் றன. நடந்த நிகழ்ச்சியை நினைத்து வருந்தவோ, ஆழ்ந்த உணர்ச்சிக்கு இரையாகவோ நமக்கு வாய்ப்புத்தராமல்—நேரம் தராமல், நிகழ்ச்சியை அல்லது அறவுரையைப் புகுத்தி, நம்மை அல்லலுருமல் தடுத்து விடுகிறார் வேதநாயகம் பிள்ளை.

கதையில், மாட்டு வண்டிப் பயணத்தில் காணப்படும் விரைவு தான் காணப்படுகிறது. மாட்டு வண்டிப் பயணமாவது நிற்காமல் தொடர்கிறதா என்றால், அதுவும் இல்லை. நிழலைக் கண்ட இடத் திலும் நீர் கண்ட இடத்திலும் நின்றுவிடும் மாட்டைப் போல், அறிவுரை வழங்க வாய்ப்பு கிடைக்கின்ற சமயத்தி லெல் லாம், கதையின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்திவிட்டுச் சொற் பொழிவு செய்கின்றார் வேத நாயகம் பிள்ளை.

'பிரதாப முதலியார் சரித்திரத்' தில் காணப்படும் முக்கியச் சிறப்பு என்ன என்று கேட்டால் 'நகைச் சுவை' என்றுதான் பதில் சொல்ல வேண்டும். புதினத்தின் முதற்பகுதியில் இருக்கும் சுவை, பிற்பகுதியில் இல்லாமைக்கு, முற்பகுதியில் நிறைந்திருக்கும் நகைச்சுவை பிற்பகுதியில் குறைந்து விடுவதேயாகும்.

நகைச் சுவைக்காக பிரதாப முதலியாரை ஆசிரியர் சில சமயங்களில் அசடாக்குகிறார் என்றாலும் அசட்டுத்தனத்தையும் மீறிக்கொண்டு வெளியே வந்து தன் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறார் பிரதாப முதலியார். அசட்டுத்தனத்தைவிடப் புத்தி சாலித்தனத்தில் நகைச்சுவை நிரம்பி வழிவதைக் காண்கிறோம். நகைச்சுவைத் தமிழ்ப் புதினங் களில், "பிரதாப முதலியார் சரித்திரத்" திற்கு ஓர் இடம் உண்டு.

பாத்திரப்படைப்பு என்று பார்க்கும் போது, அந்தப் பாத் திரமும் மறக்க முடியாத சிறந்த பாத்திரமாக இல்லை. மேலும் முழுமை பெற்ற பாத்திரம் என்று சொல்லவேண்டுமானால் பிரதாப முதலியாரைத்தான் சொல்ல வேண்டும். அதுவும் ஓரளவுக்குத்தான். கதைத் தலைவி ஞானம்பாளை, அறிவுள்ளவள் அழகுள்ளவள் என்று ஆசிரியர் எவ்வளவு வருணித்தாலும், ஞானம்பாள் நெஞ்சில் நிற்க வில்லை. நினைவுபடுத்திப் பார்த் தால்கூடப் பிற பாத்திரங்கள் நினைவுக்கு வருவதில்லை. பிரதாப முதலியார் சரித்திரத்தில் பாத்தி ரப் படைப்புச் சிறப்பாக இல்லா மைக்குத் திறனாய்வு முறையில் காரணம் சொல்ல வேண்டு மானால், பாத்திரங்களின் தவ

மையை அவர்களின் நடத்தையின் வாயிலாக உணர்த்தாமல்—நிகழ்ச்சிகளை நடக்கவிட்டு அதன் வாயிலாக உணர்த்தாமல், பாத்திரங்களின் தன்மையை 'இவர்கள் இப்படிப்பட்டவர்கள், அவர்கள் அப்படிப்பட்டவர்கள்' என்று ஆசிரியர் நேரடியாக உணர்த்து வதே காரணமாகும்.

ஆனால், இப் புதினத்தில் நேரடியாகப் பங்கெடுக்கும் பாத்திரங்களின்றி மற்றொரு பாத்திரம் மறைமுகமாகப் பங்கு கொண்டு; மறக்க முடியாதவாறு நம் மனத்தில் நிற்கின்றது. அந்தப் பாத்திரம் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளையேதான். பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியவர் ஒரு அறிஞர் என்ற எண்ணம் படிக்கின்றவர்கள் மனத்தைவிட்டு நீங்காதவாறு பார்த்துக்கொள்வது வேதநாயகனாரின் தனிச் சிறப்புக்குச் சான்றாகும்.

பாத்திரங்கள் பேசும் அறிவுரைகளைக் கேட்கும்போது நாம் பாத்திரங்களை மறந்து விடுகின்றோம். வேதநாயகனாரே நேரில் பேசுவதாக உணர்கின்றோம். சமுதாய சூழல்களைப் படம் பிடிக்கும்போது, வேதநாயகனாரின் சமுதாய அறிவு புலப்படுகின்றது. சமுதாயத்தைக் கூர்ந்து கவனித்திருக்கிறார் என்பது தெளிவாகின்றது. நீதிமுறை பற்றியும், சட்டம் பற்றியும் அவர் கருத்துத் தெரிவிக்கின்ற போது, அவரது சட்ட அறிவைக் கண்டு நாம் வியப்பில் மூழ்குகின்றோம்.

தமிழ் மொழி பற்றி ஞானம் பாள் பேசும்போது, வேதநாயகருக்குத்தான் எவ்வளவு தமிழ்ப் பற்று என்று மகிழ்ச்சியடைகின்றோம். இன்றைய ஆசியல் வாதிகள் கூறும் கருத்தை அன்றே அவர் சொல்லியிருக்கின்றார் என்பதை அறியும் போது—அவர் வகித்த பதவியையும் காலத்தையும் எண்ணிப் பார்க்கும்போது வேதநாயகனாரிடம் நாம் ஏற்கெனவே கொண்டிருக்கும் மதிப்பு மேலும் உயர்கின்றது.

பொழுதுபோக்குக்காகப் புதினம் எழுதாமல், வாழ்விற்கு வழி காட்டும் கருத்துக்களை நிரப்பி எழுதியிருப்பதாலே, அவரே ஒரு வழிகாட்டியாக இருக்கின்றார். இவ்வாறு எந்தக் கோணத்தில் பார்த்தாலும், புதினத்தின் எந்தப் பகுதியைப் படித்தாலும் ஆசிரியர் வேதநாயகனார் அகலாமல் நிற்கின்றார். பிரதாப முதலியாரை மறந்தாலும் நம்மால் வேதநாயகனாரை மறக்க முடியாது.

இன்றைய நோக்கில் 'பிரதாப முதலியார் சரித்திரத்தை ஆய்வோமாயின் அதில் பல குறைகளைக் காணலாம். புதினத்தின் அமைப்பிலிருந்து பாத்திரப் படைப்பு வரை ஒவ்வொன்றிலும் குறை கூறிக்கொண்டே போகலாம்.

ஆனால் புதினமும் திறனாய்வும் ஓரளவு வளர்ந்துவிட்ட இன்றைய நிலையை மறந்துவிட்டு, காலத்தை ஒட்டிய திறனாய்வு என்ற அளவில் 'பிரதாப முதலியார் சரித்

திர'த்தை அணுகுவோமேயானால், இக்குறைகள் நமக்குப் பெரிதாகத் தோன்றா.

தனக்கு முன்னே வழிகாட்டுவதற்கு இப்புதிய துறையில் யாருமே இல்லா நாளில், தானே புதினத்திற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, தமிழ் நாட்டுச் சூழ்நிலையை மையமாகக் கொண்டு, புதினம் எழுதுவது என்பது எளிய செயலல்ல; மேலும் வெறும் கற்பனைக்கு மாத்திரமே முக்கியத்துவம் தராமல, நல்ல கருத்துடனும் கதையை எழுதுவது — கற்பனைக் குதிரைக்குக் கருத்தென்னும் கடிவாளம் போடுவதென்பது உண்மையில் அரிய செயலாகும்.

'பிரதாப முதலியார் சரித்திரத்'தில் காணப்படும் கருப்பொருளையும் கருத்துக்களையும் ஒன்றுபடுத்தி, புதினம் எழுதுமாறு இன்றைய எழுத்தாளர்கள் சிலரிடம் கொடுத்தால், வேதநாயகரை விடத் திறம்படச் செய்வார்களா என்பது ஐயத்திற்குரியதாகும். ஏனெனில் பிரதாப முதலியார் சரித்திரத்தில் சில குறைகள் இருந்தாலும், ஆசிரியர் வேதநாயகனார் ஒரு சிறந்த புதின ஆசிரியர் என்பதற்கான மூத்திரை அப்புதினத்திலேயே பல இடங்களில் விழுந்திருக்கிறது.

மேலும் ஆங்கில மொழியில் தோன்றிய முதற்சில புதினங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, அதன் பெருமை சற்றும் குறையவில்லை. இன்று எழுதப்படும் புதினங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும், அது தனித்துத்தான் நிற்கின்றது. தனித்து நிற்கும் 'பிரதாப முதலியார் சரித்திர'த்தில் ஒரு தனிச் சுவை இருக்கிறது. அந்தத் தனிச் சுவையைத் தமிழ் இலக்கிய உலகம் என்றும் பெறும் என்பதில் ஐயமில்லை.

—" கல்லூரி "

---

"நல்ல அரசியல் இல்லா நாட்டில் அமைப்பேது? வாழ்வேது? அற ஒழுக்கமேது? ஒரு நாட்டில் நாகரிகமோ அநாகரிகமோ அந் நாட்டின் அரசியலை அன்றோ பொறுத்து நிற்கும்? அரசியல் என்பது உலகிடை மறவினை மலியாது அறவினை மலியுமாறு செய் தற்கு ஏற்பட்ட ஓரமைப்பு. குடியாட்சியோ கோனாட்சியோ குடிக்கோன் ஆட்சியோ எவ்வாட்சியோபற்றி இயங்கினும் இயங்க. அதனால் குடி மக்கட்குக் கேடுவிளைதல் ஆகாது என்பது அன்றோ கவனிக்கத் தக்கது? பெயருக்காக குடியாட்சி என்று ஆட்சி வகுத்துச் செல்வாக்குடைய சிலர் ஒன்றுகூடி நாட்டை வருத்துவதால் என்னபயன் ? எவ்வாட்சியாயினும் அதன் அடியில் அறனும் அன்பும் அருளும்கால் கொண்டு நிற்றல் வேண்டும்."

—திரு. வி. க.

# 10 ஆயிரம் கோடி மக்களுக்கு உணவளிக்க முடியும்

உலகின் வற்றாத வளத்தினை விவரிக்கும் இந்தச் சுவையான கட்டுரை, முதலாளித்துவ உலகில் நிலவிவரும் வறுமைத் தத்துவத்தினை உடைத்தெறிகிறது.

—ஆசிரியர்.

சோவியத் பேரவை விஞ்ஞானி ஐ. கெராசிமோவ்

இந்த உலகின் மக்கள் தொகை துரிதமாகப் பெருகி வருகிறது. 20ம் நூற்றாண்டின் முடிவில் உலகின் மக்கள் தொகை அனேகமாக இருமடங்காக உயரலாம். அதாவது 600 கோடியாகப் பெருகலாம். அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இது மேலும் நான்கு மடங்கு பெருகி, சுமார் 1300 கோடியாகலாம். இதனறி பல நூற்றாண்டுகளாக வறுமையில் உழன்றுவந்த பல நாடுகளும் கண்டங்களும் இப்பொழுது சுதந்திரம் அடைந்து, அவற்றின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கு இன்று முயற்சித்து வருகின்றன. ஐ. நா. புள்ளி விவரக்கணக்குப்படி இன்று உலகில் 60% மக்கள் போதிய உணவினைப் பெறுவதில்லை.

## தவறான தத்துவம்

மக்கள் தொகை பெருக்கத்திற்கும் வாழ்க்கைப் பண்டங்களுக்கான இயற்கை செல்வாதாரங்களின் அளவிற்கும் இடையில் ஊழ்வினை போன்ற ஏற்றத்தாழ்வு இருந்து வருவதாகக் கூறும் தவறான "தத்துவம்" இன்று முதலாளித்துவ உலகில் மிகப் பரவலாக உள்ளது. ஆனால் இது முற்றிலும் தவறானது என்பதை வரலாற்றிலிருந்தும் விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சியிலிருந்தும் தெளிவாகக் காணலாம்.

உதாரணமாக, சக்தி ஆதாரங்களை எடுத்துக் கொள்வோம். கடந்த நூறு ஆண்டுகளில் உலகின் நபர் விகித மின்விசை ஆதாரங்களின் அளவு, குறைவதற்குப் பதில் சுமார் 20 மடங்கு பெருகியுள்ளது. இன்று அணுசக்தி வேறு கிடைத்துள்ளது. கடல் அலைகள், பூமியின் கர்ப்பத்திலுள்ள வெப்பம், சூரிய ஒளி-இவற்றிலிருந்து மின் விசை தயாரிக்கும் நாளும் வெகு தூரத்தில் இல்லை. வெப்ப-அணுக் கருவிகிரியையினைக் கட்டுப்படுத்துவதாவது,உண்மையிலேயே வற்றாத சக்தியியல் அபரிமிதத்தினை ஏற்படுத்தும் என்பது தெளிவு. எனவே மக்கள் தொகை பெருகு

வதற்கேற்ப இயற்கை செல்வா தாரங்களின் அளவு போதுமான தல்ல என்ற "தத்துவம்" தவறு னது என்பதை இந்த ஓர் உதா ரணத்திலிருந்தே காணலாம்.

இதன்றி, நிலக்கரி எண்ணெய், எரிவாயு, நீரியல்சக்தி ஆகிய வழக்கமான மின்விசை ஆதாரங் கள் இன்றும் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது கண்கூடு. இத்தகைய இயற்கை செல்வாதாரங்களில் இன்னமும் பெரும் பகுதி பயன்படுத்தப் படாமலேயே உள்ளன என்ப தும், புதிய புதிய பிரதேசங்களில் புதிய புதிய இயற்கை வளங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன என்பதும் தெரிந்ததே.

## விவசாய ஆதாரங்கள்

இப்பொழுது விவசாயத்திற் கான இயற்கைச் செல்வாதாரங் களைக் கவனிப்போம். உலகி லுள்ள 5 லட்ச வகை தாவரங் களில் 23,000வகை தாவரங்களைத் தான் மனிதன் பயன்படுத்துகி றான். அதிலும் 600 வகைத் தாவரங்கள் தான் விவசாயத் தைச் சேர்ந்த பயிர்வகைகளாகக் கருதப்படுகின்றன. ஐ.நா. புள்ளி விவரக்கணக்குப்படி உலகின் சாகுபடிப் பிரதேசம் பூமியின் பரப்பில் 3 சத விகிதத்திற்கும் குறைவாகும். இன்றுள்ள விஞ் ஞான, தொழில் நுட்ப நிலையில் இதனை மும்மடங்காக வெகு எளி தில் பெருக்க முடியும்.

விவசாயத்தை ரசாயன மயமாக் கும் முறை மூலம், உலகின் உணவு உற்பத்தி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு மிகுந்த விரி வானவாய்ப்புக்கள் இன்று எழுந் துள்ளன. மண்ணில் அல்லாது, வெறும் சத்துக்கரைசல்களில் பயிர்களைச் சாகுபடி செய்ய முடி யும் என்ற கண்டுபிடிப்பும் உணவு ஆதாரங்களைப் பன்மடங்கு பெருக்குவதற்கு வழி திறந்துவிட் டுள்ளது.

இதன்றி உலகின் கடல்களில் உள்ள உயிரியல் செல்வங்கள் கள் இன்னும் போதிய அளவு பயன்படுத்தப்படவில்லை.

வருங்காலத்தில் மனித குலம் செயற்கை உணவினை உபயோகிக் கத்தலைப்படும். இது, ருசியிலும், சத்து அளவிலும் இயற்கை உண விற்கு எவ்வகையிலும் குறை வற்றதாகவிளங்கும் என்பதுடன், மலிவானதாகவும் இருக்கும்.

## விலை மதிப்பிடற்கரிய செல்வ வளம்

நீர், விலைமதிப்பிடற்கரியதோர் செல்வ வளமாகும். ஆண்டுதோ றும் பூமியின் பரப்பிலிருந்து 500,000 கன கிலோ மீட்டர் நீர், ஆவியாக மாறி விடுகிறது. இதில் மழை நீர் கடல்களுக்கும் 107000 கன கிலோமீட்டர் நீர் உலகின் தரைப்பரப்பிற்கும் திரும்புகிறது. இது கருங்கடலை நிரப்புவதற்குப் போதுமான அளவு நீராகும்.

இன்று இந்த நீரில் ஒரு பகு தியே அன்றாடப் பொருளாதார தேவைகளுக்காகப் பயன்படுத்தப் படுகிறது. உதாரணமாக சோ

வியத் யூனியனில் ஆற்று நீரில் 5 சத விகிதமே பயன் படுத்தப்படு கிறது. ஆனால் பூகோள ரீதியில் உலகின் சில பல பகுதிகளில் ஈரலைப்புக் குறைவாக உள்ள தைச் சமாளிப்பதற்கு இன்று திட்டமிடுவது முற்றிலும் சாத் தியமே. இத்துறையில் இக்கா லத்தின் மாபெரும் திட்டங்க ளில் ஒன்றினை சோவியத் யூனி யன் உருவாக்கி வருகிறது. வடக்குத் திக்கில் ஓடும் ஆற் றினைத் தெற்கே வால்கா பள்ளத் தாக்கில் திருப்பி விடத் திட்ட மிடப்பட்டுள்ளது. ஆண்டொன் றுக்கு இதன் மூலம் 40 கன கிலோ மீட்டர் நீர் தெற்குப் பகுதிக்குக் கிடைக்கும். இது போன்று பல திட்டங்களை உல கின் பல்வேறு பகுதிகளிலும் வகுத்து, நிறைவேற்றுவது முற் றிலும் சாத்தியம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

வற்றாத ஊற்று

பூவுலகின் இயற்கை வளங்கள் பிரம்மாண்டமானவை. வற்றாத ஊற்றுப் போன்றவை அவை. 10 ஆயிரம் கோடி மக்களுக்குக்கூட வயிறார உணவளிக்கப் போதிய இயற்கை வளங்களை மனித குலம் பெற்றுள்ளது என்றால் மிகையா காது. ஆனால் எல்லா வளங்க ளும் முற்றிலும் விஞ்ஞான ரீதி யில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும் வருங்கால சந்ததி களின் நலன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதும் வெளிப்படை.

—தினமணி

# புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி. B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய் பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

# குறையும் நிறையும்

**மு. பி. பாலசுப்பிரமணியன்,** எம். ஏ., தமிழ் விரிவுரையாளர்,
காஞ்சி பச்சையப்பன் கல்லூரி

**முன்னுரை :**

மனிதனின் குணங்களை ஆராயும்போது குறையை மட்டும் வைத்துக்கொண்டு எடை போடலாகாது. குறையையும் பார்க்க வேண்டும்; நிறையையும் பார்க்கவேண்டும்; பின்புதான் கொடுமைக்காரனா? அல்லது குணக்குன்றா என்ற முடிவுக்கு வரவேண்டும். சிலப்பதிக்காரம், ஒரு குடி மக்கள் காப்பியம். கோவலன், கண்ணகி, மாதவி போன்ற குடிமக்களைப்பற்றிக் கூறும் காவியமே, சிலப்பதிகாரம். அதன்தலைவி கண்ணகி; தலைவன் கோவலன். தன் நிகர் இல்லாத் தலைவனாகத்திகழும் அவன்மேல் சாட்டப்படும் குற்றச் சாட்டுக்கள் சில உண்டு. "கோவலன் கொடுமைக்காரன்; அவன் நல்ல கணவனாக இல்லை; சிறந்த காதலனாக இல்லை; உயர்ந்த கலைஞனாக இல்லை; தேர்ந்த வணிகனாக இல்லை: அவன் ஒரு கோழை; அவன் அறங்களைச் செய்ததாகச் சான்றுகள் இல்லை; விருந்தோம்பலும் இனிய பேசலும் அவனுக்குப் புரியாத அறங்கள் ஆயின" — இத்தனை குற்றச் சாட்டுகளுக்கும் இளங்கோவின் கோவலன் பொறுப்புடையவன்தானா? காப்பியத்திற்கு உள்ளே நுழைந்துதான் விடை காணவேண்டும்.

**அன்புள்ள காதலன் :**

காதலித்த கண்ணகியைக் கடிமணம் செய்து கொண்டான்; கைப்பிடித்த காரிகையைக் கண்போலப் போற்றுகின்றான். நிலாமுற்றத்தில்—அழகிய கட்டிலில்—இருவரும் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் மார்புகளில் கிடந்த மாலைகள் மயங்குகின்றன. கோவலன் கண்ணகியின் முகத்தைப் பார்க்கிறான். அதனை இளங்கோ, "தீராக் காதலின் திருமுகம் நோக்கி" என்று கூறுகிறார். தீராத காதலுடையவனாகக் கோவலன் காட்சி அளிக்கிறான். அப்போது அவனிடம் ஆழமான அன்பு மிளிர்கின்றது; உண்மையான பற்று ஒளிர்கின்றது. அந்த ஆழமான அன்போடு — கண்ணகியைப் போற்றியுரைக்கும் பாராட்டுரை போலியாகவோ, பொய்யுரையாகவோ தெரியவில்லை. கொலைக் களக் காதையில் கண்ணகியின் குடிப்பிறப்பையும் நாணம் முதலிய குணச் சிறப்பையும் பண்பட்ட உள்ளத்தோடு பாராட்டுகிறான்

கோவலன். "நாணின் பாவாய் நீள் நில விளக்கே! கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி" என்று அவன் கூறும் புகழுரை, அவனது காதல் நெஞ்சைப் படம் பிடித்துக் காட்டும் பொன்னுரையாகத் திகழ்கிறது.

## இரக்கமுள்ள கணவன் :

புறஞ்சேரி இறுத்த காதையில் துணைவியின் துன்பத்தைக்கண்டு துடிக்கின்ற தூய கணவனைக் காட்சியளிக்கிறான் கோவலன். கானகத்தில் நடந்து செல்லும் கண்ணகியின் நிலையைக்கண்டு கலங்குகின்றான். அந்தக் கலக்கம் அவன் ஒரு 'நல்ல' கணவன் என்பதைக் காட்டுகிறது. "கடுங் கதிர் வெப்பத்தைக் கண்ணகி பொறுக்கமாட்டாள்; இரவு நேரத்தில்—இனிய நில வொளியில் நடந்து செல்லலாம்" என்று கவுந்தி அடிகளிடம் கூறுகின்ற பண்பு, இரக்கமுள்ள ஒரு கணவனிடம்தான் இருக்க முடியும். வழிநடைப் பயணத்தால் வருந்துகின்ற கண்ணகியை நோக்கி, "கொடிய புலிகள் நடமாடும்; கோட்டான்கள் அலறும்; கரடிகள் முழங்கும்; நீ அஞ்சாமல் நடக்கவேண்டும்" என்று அன்பொழுகக் கூறுகிறான். கூறியது மட்டுமன்று, "தொடிவளைச் செங்கை தோளிற் கட்டி" அணைத்து—அழைத்துச் செல்லுகின்றான். வடநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்த கோவலன் இவன் என்பதை மறந்து விடுகின்றோம்—மறக்கச் செய்கிறார் இளங்கோ. "காதலி தன்னொடு கானகம் போந்ததற்கு ஊது உலைக்குருகின்" உயிர்க்கின்ற கோவலனை—உள்ளம் கலங்குகின்ற கோவலனை—நாம் காண்கின்றோம்.

சிலம்பினை விற்கப் புறப்படும் போது கண்ணகியிடம் விடை பெறுகிறான். அந்த நேரத்தில் அவளுக்குப் பணிப் பெண்கள் ஒருவர் கூட இல்லையே என்பதற்காக மிகமிக வருந்துகின்றான். அவள் பெற்றோரையும் உற்றோரையும் பிரிந்து தனியளாக இருக்கின்ற நிலையினைக் கண்டு, உள்ளம் வெதும்புகின்றான். இரக்கமுள்ள அவன் கண்களின் நீர் ததும்புகின்றது. அதைக் கண்ணகி பார்த்துவிடக் கூடாதே என்பதற்காக மறைக்கின்றான். "வருபனி கரந்த (—மறைத்த) கண்ணன்" ஆக வருந்துகின்ற கோவலன் தன் மனைவியின் மேல் வைத்திருந்த உண்மையான அன்பிற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ?

## சிறந்த கலைஞன் :

கோவலனின் கானல் வரிப் பாடல்களைக் கொண்டே, அவன் சிறந்த கலைஞன் என்று முடிவு கட்டிவிடலாம். பாடுவதில் மட்டுமன்று, யாழ் வாசிப்பதிலேயும் சிறந்த கலைஞனாகத் திகழ்கிறான் கோவலன். அதனைப் புறஞ்சேரி இறுத்த காதையில் நாம் காண்கின்றோம். கௌசிகனை அனுப்பி விட்டு, கவுந்தி அடிகளும் கண்ணகியும் இருக்கும் இடத்தை அடைகிறான். அந்த இடத்தில் பாணர்கள் பாடி ஆடுவதைப் பார்க்கின்றான். அவனுடைய

கலைமனம் அவனை வாளா இருக்க விடவில்லை. பாணரோடு சேர்ந்து பாடவேண்டும் என்று நினைக்கிறான். உடனே 'பாடும் பாணரிற் பாங்குறச்' சேர்கின்றான். 'செந்திறம் புரிந்த செங்கோட்டியாழை' எடுத்து, அதன் நரம்புகளைத் திருத்தி, இசை மீட்டுகின்றான். பாணரோடு பாடுகின்றான்; ஆடுகின்றான். கலைக்கு அடிமையாகும் சிறந்த கலைஞனாகக் காட்சியளிக்கின்றான்.

கோவலன் வணிக குடும்பத்தில் பிறந்தவன்தான். அதற்காக அவனுக்கு வணிகம் தெரிந்துதான் இருக்க வேண்டுமா? தந்தை செய்த தொழிலையேதான் மகன் செய்யவேண்டும்; தந்தைக்குத் தெரிந்த தொழிலேதான் மகனுக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்பதில்லை. செருப்புத் தைப்பவனின் மகன் செருப்புத்தான் தைக்க வேண்டும் என்றால் ஸ்டாலினை இந்த உலகம் கண்டிருக்க முடியாது. விறகு வெட்டியின் மகன் விறகு வெட்டித்தான் பிழைக்கவேண்டும் என்றால் ஆப்பிரகாம் லிங்கனை இந்த உலகம் பெற்றிருக்க முடியாது. இவர்களைப் போன்ற மகான்களும் மேதைகளும் வெளியுலகத்திற்குத் தெரியாமல் மறைந்திருப்பார்கள் — குலத் தொழிலையே செய்து கொண்டிருந்தால்! எனவே கோவலனுடைய தந்தை, மலைபோன்ற செல்வத்தை ஈட்டிய வணிகர்தான். அதற்காக அவருடைய மகனும் வணிகத் தொழிலிலே நிபுணனாக இருக்க வேண்டும் என்பதில்லை. கோவலன் வாணிகம் செய்யாவிட்டாலும், பாடுவதிலும் யாழ் இசைப்பதிலும் வல்ல கலைஞனாகத் திகழ்ந்தான் — கலைவாழ்வு வாழ்ந்தான்!

## உயர்ந்த வள்ளல் :

கோவலனின் வள்ளல் தன்மையை அடைக்கலக் காதையில் மாடல மறையோன் வாயிலாகக் காட்டுகிறார் இளங்கோ. இல்வாழ்வோன் செய்ய வேண்டிய அறங்களை ஒரு குறைவுமின்றிச் செய்தவன் கோவலன் என்பது அப்போதுதான் புரிகிறது. மணிமேகலை பிறந்த நாளில், மங்கல மடந்தை மாதவியுடன், செங்கையினால் செம்பொன்னைத் தானமாக வாரி இறைத்த கோவலனா அறங்களைச் செய்ய மறந்தவன்? கணவனைப் பிரிந்த காரிகையின் துயரத்தைப் போக்கி, கானம் போன அவள் கணவனையும் கூட்டி வந்து, "ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து நல்வழிப்படுத்த செல்லாச் செல்வ"னாகத் திகழும் கோவலன் ஓர் உயர்ந்த வள்ளல் அன்றோ? பெற்ற மகனை இழந்து பேதலித்த தாயின் பெருந் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கி, அந்தத் தாய்க்கும் சுற்றத்தார்க்கும் நெருங்கிய உறவினனாக இருந்து, "பசிப்பிணி அறுத்துப்பல்லாண்டு புரந்த இல்லோர் செம்ம"லான கோவலன் ஓர் உயர்ந்த வள்ளல் அன்றோ?

**திண்தோள் வீரன் :**

அரண்மனை சென்று திரும்பினான் பொற்கொல்லன். அவனுடன் வாளேந்திய காவலரும் வந்தனர். கோவலனிடம், "இவர்கள் மன்னவன் ஏவ, சிலம்பைக் காண வந்தவர்கள்" என்று வந்திருந்தோரை அறிமுகப்படுத்துகிறான் பொற்கொல்லன். சிலம்பை விற்கவந்த கோவலன், சிலம்பைக் காணவந்த அவர்களிடம் சண்டையா செய்யமுடியும்? எனவே அந்த இடத்தில் கோவலன் கோழையாக இருந்தான் என்று கொள்ள முடியாது. அந்த கோவலனுக்கு வீரத்தை வெளிக்காட்ட வேண்டிய வாய்ப்பு, முன்பு ஒருமுறை கிடைத்தது. அதனையும் மாடல மறையோனே தெரிவிக்கின்றான். யாருக்கும் அடங்காத மதம் பிடித்த யானையினை அடக்கி, கூன்விழுந்த முதியோனைக் காப்பாற்றும் திண்தோள் வீரன் கோவலன் என்பதை அறிகிறோம். யானையின் துதிக்கையில் புகுந்தான்; போர்செய்யும் கூர்மையான தந்தங்களில் கால் வைத்து ஏறினான்; விஞ்சையனைப் போல் அதன் பிடரியில் அமர்ந்தான். மதங்கொண்ட யானையின் செருக்கினை அடக்கினான். மறவனாகக் காட்சியளித்தான். அதுவும் சாதாரண மறவனாக அல்ல; முதியோன் ஒருவனுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த கருணை மறவனாகக் காட்சியளிக்கிறான். கடக்களிறு அடக்கிய கோவலன் ஒரு கோழையா? முதியோனைக் காத்த கோவலன் ஒரு கொடுமைக் காரனா?

**ஒரே ஒரு குறை :**

இத்தனை குணங்களுக்கும் உறைவிடமான கோவலனிடம் ஒரே ஒரு குறைதான் இருந்தது. ஆம்! அவன் உள்ளத்தில் திண்மை இல்லை. அந்த உள்ளத்திண்மை இல்லாத காரணத்தால்தான் கலவியும் புலவியும் கலந்து அளித்த மாதவியை, 'மாயப் பொய்பல கூட்டும் மாயத்தாள்' என்று தூற்றுகிறான். விடுதல் அறியா விருப்பினனாகி யாரோடு இருந்தானோ அந்த மாதவியை, "சலம் புணர் கொள்கை சலதி" என்று இகழ்கிறான். அவ்வாறெல்லாம் தூற்றிய கோவலனே பின்பு மாதவியைப் போற்றவும் செய்கிறான். கௌசிக முனிவன் கொண்டுவந்த மாதவியின் மடலைப் படித்த பின்பு, 'தன்தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி, என் தீது' என்று குற்றத்தைத் தன்மேலேயே சுமத்திக் கொள்கிறான். மாதவியை எவ்விதமான தீமையும் செய்யாதவள் என்று உளமார — உணர்ந்து — போற்றுகிறான். அந்தப் போற்றுதலைக் கேட்டவுடன், முன்பு அவன் தூற்றிய மொழிகளை எல்லாம் மறந்துவிடுகிறோம்; தூயவன் கோவலன் என்பதை உணர்ந்து கொள்கிறோம்.

அடுத்து, மாதவியை விட்டுப் பிரியக் காரணமாக இருந்த உள்ளத்திண்மை இன்மையானது, கோவலனைப் புகார்

களைவிட்டும் பிரியச்செய்கிறது. ஓர் இரவில் பயங்கரமான கனவு கண்டான்; புகார் நகரத்தில் இருந்தால் என்ன நடக்குமோ என்று அஞ்சினான். தான் கண்ட கனவிற்குப் பயந்து மதுரைக்குப் புறப்பட்டான். இந்த உண்மையை அடைக்கலக் காதையில் மாடல மறையோனிடம் "கனவு கண்டேன்; கடிது ஈங்கு உறும்" என்று கோவலனே கூறுகிறான். உள்ளத்திண்மை இல்லாத ஒரே ஒரு குறையைக் கொண்டு, கோவலனைக் கொடுமைக்காரன் என்று கொள்ளலாமா? — அவன் குணநலனில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று கூறலாமா? குறையுடையவன் மனிதன் (To err is human). முழு நிலாவிலே முயல் தோற்றம் ஒரு குறைதான். ஆனால் நாம் அதைக் குறையாகவா கொள்ளுகின்றோம்? குறையை மறைக்கின்ற அளவிற்கு எவ்வளவோ குணநலன்களைப் பெற்ற குணக்குன்றாய்த் தோற்றமளிக்கிறான் கோவலன்.

## பாராட்டுக்கள் :

ஒரு பாத்திரத்தின் குணநலன்களைப்பற்றி ஆராயும்போது, மற்றப் பாத்திரங்கள் எவ்வாறு பாராட்டுகின்றன என்பதனையும் பார்க்கவேண்டும். சிலப்பதிகாரக் காப்பியத்தில் கோவலன், மற்றப் பாத்திரங்களால் பலபடப் பாராட்டப்படுகின்றான். "இராமனைப்போலவோ, நளனைப் போலவோ, நீ கைப்பிடித்த மனைவியைப் பிரியவில்லை. பிரியாத வாழ்க்கையின்ப் பெற்றிருக்கின்றாய்" என்று கவுந்தி அடிகளால் போற்றப்படுகின்றான். "நான் அறிந்த வரையில் இந்தப் பிறவியில் நீ செய்ததெல்லாம் நல்வினையே" என்று மாடல மறையோனால் புகழப்படுகின்றான். "ஆயர்பாடியில் யசோதை பெற்றெடுத்த கண்ணனைப்போன்றவன்" என்று ஐயையாலும் அவள் தாயாலும் போற்றப்படுகிறான். "நல்லோர்களுக்கு உரிய இலக்கணங்களை எல்லாம் பெற்றவன்" என்று கொலைசெய்யவந்த காவல்காரர்களால் பாராட்டப்படுகிறான்.

## முடிவுரை :

'மண்தேய்த்த புகழினான்' என்று இளங்கோ அடிகளால் அறிமுகம் செய்யப்படுகிறான் கோவலன். மண்ணும் தேயும்படியான அவனுடைய சிறந்த புகழை, சிலப்பதிகாரம் முழுதும் பரக்கக் காணலாம். சிறந்த காதலனாகவும், நல்ல கணவனாகவும், உன்னதக் கலைஞனாகவும், உயர்ந்த வள்ளலாகவும், திண்தோள் வீரனாகவும் நாம் அவனைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். அவன் உள்ளத்தில் அன்பு உண்டு; பண்பு உண்டு; காதல் உண்டு; கலை உண்டு; வீரம் உண்டு; கொடைத் தன்மை உண்டு. இத்தகைய அருங்குணங்கள் பல பெற்றதனால் கோவலன் ஒரு கொடுமைக்காரனாக நம்முன் காட்சியளிக்க வில்லை — குணக்குன்றாகக் காட்சியளிக்கிறான்.

"கல்லூரி இதழ்"

# வயது வந்த பிள்ளை

பி. தங்கவேலு, எம். ஏ., உளவியல் விரிவுரையாளர்,
காஞ்சி பச்சையப்பன் கல்லூரி.

தகப்பனுர் அலுவலகத்திலிருந்து மிகவும் களைப்புடன் வீட்டிற்கு வருகிருர். வந்ததும் வாராததுமாகத் தாயார் தன்னுடைய பிள்ளையின்மீது புகார் செய்கிருள். "பார்த்தீர்களா உங்கள் மகனை! நீங்கள் அலுவலகத்திற்குப் போனதிலிருந்து கொஞ்ச நாழிகூட வீட்டிலில்லை. பக்கத்து வீட்டுப் பையனுடன் சேர்ந்து இன்றைக்கெல்லாம் ஊரைச் சுற்றிவிட்டு நீங்கள் வருவற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் வீட்டிற்கு வந்தான். வயது கொஞ்சமாக ஆகிறதா என்ன? ஆனி பிறந்தால் 14 முடிந்து 15 வயது ஆரம்பிக்கப் போகிறது. இன்னும் சின்னக் குழந்தையா என்ன? நீங்கள் தான் அவனை விசாரிக்க வேண்டும்", என்று தாயார் கூறியதும், அலுவலக மேலதிகாரியின்மீது இருந்த தகப்பனுரின் கோபமெல்லாம் பையன் மீது திருப்பப்படுகிறது. உடனே கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு பிள்ளையை விசாரிக்காமல்கூடக் கண்மூடித்தனமாக அடிக்கிருர். இம்மாதிரி நிகழ்ச்சிகள் ஏறக்குறைய எல்லாக் குடும்பங்களிலும் நடைபெறுகின்றன அல்லவா? ஆனுல் அவைகளை நாம் மனதுவைத்தால் வெகு சுலபத்தில் தடுக்கலாம் அதற்கு என்ன வழி? ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் வயது வந்த பிள்ளைகளின் உள்ளத்தையும், உடலையும் பற்றிச் சில உண்மைகளைத் தெரிந்து கொள்வது.

குழந்தைப் பருவத்தைக் கடந்து பொறுப்புள்ள மனிதர்களாக மாறுவதற்குத் தங்களால் முடிந்தவரை முயற்சி செய்யும் வாலிபர்களையே நாம் வயது வந்த பிள்ளைகள் என்று கூறுகிருேம். சுமார் 12 அல்லது 13 வயது முதல் 19 அல்லது 20 வயதுள்ள எல்லா வாலிபர்களும் வயது வந்த பிள்ளைகள் ஆவர். ஆனுல் அவர்கள் எல்லோரும் நடத்தையில் ஒரே மாதிரியாகக் காணப்படுவதில்லை. சிலர் வீட்டிற்கு அடங்காமல் சுற்றித் திரிகின்றனர். மற்றும் சிலர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தாழ்ந்த பண்பாடு உள்ளவர்களுடன் கூடிக் கொலை, களவு முதலியன புரிகின்றனர். அவர்களைத்தான் நாம் இளங் குற்றவாளிகள் என்று கூறுகிருேம். சமீபத்தில் அரசாங்கத்தார் கூட இம்மாதிரி இளங் குற்றவாளிகளைத் திருத்துவதற்காகப் பல முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

வயது வந்த பிள்ளைகள்

எல்லோரும் மனிதகுலத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் அவர்களில் ஏன் இவ்வளவு வேறுபாடு? குழந்தைப் பருவத்தைக்கடந்து காளைப்பருவத்தை அடையும்பொழுது அவர்களுடைய உடல் கூற்றிலேயே ஒரு புதிய மாறுதல்—அதன் விளைவாக உள்ளத்திலே சில உணர்ச்சிகள்—அவைகளை வெளிப்படுத்துவதற்கு வேண்டிய நல்ல வாய்ப்புக்கள் கிடைக்காவிடில் வாழ்க்கையே மாறுபட்டு விடுகிறது. இந்த உண்மையைப் பெற்றோர்கள் நன்றாக உணர வேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும் 13 அல்லது 14 வயது அடைந்ததும் அதனுடைய உடலில் திடீரென்று ஒரு புதிய மாறுதல் ஏற்படுகிறது. முன்பெல்லாம் மெல்லிய குரலில் இனிமையாகப் பேசிய குழந்தை இப்பொழுது தடித்த குரலிலே பேச ஆரம்பிக்கிறது. விரைவாகக் குழந்தையின் உயரம் அதிகரித்து விடுகிறது. கரியினால் ஒரு மெல்லிய கோடு கிழித்தமாதிரி குழந்தையின் முகத்தில் மீசை தோன்றுவதைப் பார்க்கலாம்.

சுருக்கமாகக் கூறினால் அவனுடைய ஒவ்வொரு உறுப்பும் முழு வளர்ச்சியுற்றுப் பக்குவ நிலையை அடைகிறது. இம்மாதிரி வியக்கத்தக்க நிலையில் உடல் அதி சீக்கிரத்தில் வளர்ச்சி அடைவதால் எப்பொழுதுமில்லாத ஒரு சக்தி பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த அபரிமிதமான சக்தியை நல்ல முறையிலே வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்பை அளிக்க வேண்டியது பெற்றோர்களுடைய கடமை. பந்தாட்டங்கள், ஓட்டப்பந்தயங்கள், சாரணர் இயக்கம், உல்லாசப் பிரயாணங்கள் முதலியவைகளில் வயது வந்த பிள்ளைகள் சேர்ந்து தங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்தலாம். அன்றியும் விடுமுறைக் காலங்களில் சமூகத்தொண்டு, தேசிய மாணவர் படை போன்ற உபயோகமுள்ள பல இயக்கங்களில் கலந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு குழந்தையும் தனக்கு வயது வந்தவுடன் பெற்றோர்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட முயற்சி செய்கிறது. தானாகவே எந்தக் காரியத்தையும் செய்ய முற்படுகிறது. மற்றவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் குறுக்கிடுவதை ஒருபோதும் விரும்புவதில்லை. எதற்கும் எளிதில் அஞ்சுகிறவர்கள்தாம் எப்பொழுதும் பெற்றோர்களைச் சார்ந்து வாழ்வதற்கு விரும்புவர். ஆகையால் வருங்காலத்தில் தனி மனிதர்களாக வாழும்பொழுது அவர்கள் பல இன்னல்களை அடைகிறார்கள். ஆனால் வயது வந்தவுடன் பெற்றோர்களுடைய உதவியின்றித் தாமாகவே வாழ்க்கையை நடத்துவதற்கு முனைகின்ற குழந்தைகள்தாம் நல்ல முறையிலே வளர்ந்தவர்கள். இதைச் சரிவரப் புரிந்து கொள்ளாது பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள்மீது பல குற்றங்களைச் சுமத்துகின்

றனர். குழந்தைகளும், தங்களுடைய உள்ளத்தில் எழுகின்ற புத்துணர்ச்சிகளைப் பெற்றோர்கள் அறிந்து கொள்ள முடியவில்லை என்று கருதுகின்றனர். முடிவு என்னவென்றால் இருசாரார் உள்ளத்திலும் ஒரு பெரிய போராட்டம். போராட்டத்தின் விளைவாகப் பெற்றோர்களின் அதிகாரத்தோரணை முறியடிக்கப்படுகிறது. அவர்களுடைய கட்டளைகளும் எதிர்க்கப்படுகின்றன. நாளடைவில் பெற்றோர்களிடத்தில் உண்டான எதிப்பு பிறர் மீதும்—அதாவது ஆசிரியர், சுற்றத்தார், மனைவி, மக்கள், நண்பர்கள் ஆக எல்லோர் மீதும் திருப்பப்படுகிறது. குழந்தைகளை முக்கியமாக வயது வந்த பிள்ளைகளை—ஓயாது சிலர் திட்டுகின்றனர். அது ஒரு பெரிய தவறாகும். ஒரு தகப்பனார் தன் பிள்ளை சரிவரப் படிப்பதில்லை என்று அவனை ஓயாது கடிந்து கொள்வது வழக்கம். ஒருநாள் அவனைப்பார்த்து "நீ வர வர சோம்பேறி யாகிறாய். சரிவரப் பாடங்களைப் படிப்பதில்லை. உன் வயதில் ஆபிரகாம் லிங்கன் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்திருக்கிறார் தெரியுமா?" என்றார். அதற்கு அவன் "ஆம். ஆபிரகாம் லிங்கன் உங்கள் வயதில் அமெரிக்க ஜனாதிபதியாக அல்லவா இருந்தார்", என்று தகப்பனார் திகைக்குமாறு பதில் உரைத்தானாம்.

குழந்தைகளுக்கு வயது ஆக ஆக உடலுறுப்புக்கள் தங்களுடைய கவனத்தைக் கவருமளவில் வளர்ச்சியடைகின்றன. தாங்கள் மனிதர்களாக மாறுகிறார்கள் என்கின்ற ஒரு எண்ணம் அவர்களுக்கு எழுகிறது. பிறரைப்போல் தாங்களும் அழகாகவும், பலசாலிகளாகவும், நல்ல தோற்றத்துடனும் காணப்பட வேண்டுமென்ற அவா அவர்களுக்குத் தோன்றுகிறது. தங்களுடைய படிப்பைவிட உடலைப்பற்றி அதிகக் கவலை கொள்ளுகிறார்கள். தற்பெருமை அடைகிறார்கள். உலகம் நம்மை விரும்புவதற்கும் வெறுப்பதற்கும் தம்முடைய தோற்றமே காரணம் என்று முடிவு செய்கிறார்கள். ஆகையால் தங்களை அழகுள்ளவர்களாக மாற்றிக் கொள்ளுவதற்குத் தங்களால் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு முயற்சி செய்கிறார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் அரசியல் தலைவர், நடிகர், பேச்சாளர் அல்லது எழுத்தாளர் போன்றவர்களையே பின்பற்ற விரும்புகின்றனர். பெரும்பாலும் சினிமாவில் வரும் நட்சத்திரங்களே வயது வந்த பிள்ளைகளின் தனிப்பற்றுக்குரியவர்கள். நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் அவர்களையே பின்பற்றப் பிரியப்படுகின்றனர்.

வயது வந்த பிள்ளைகளிடத்திலுள்ள மற்றொரு குறிப்பிடத்தக்க இயல்பு, எப்பொழுதும் வளவளவென்று பேசிக் கொண்டே இருப்பதாம். பொ

துக் கூட்டங்களிலும், சினிமா அல்லது நாடக அரங்குகளிலும் அவர்கள் ஒன்றுகூடி விட்டால் ஒருவருக் கொருவர் போட்டி யிட்டுக் கொண்டு பேசுவதை நாம் கவனிக்கலாம். ஒவ்வொரு வரும் தங்களுடைய பேச்சைப் பிறர் கேட்க வேண்டுமென்று விரும்புவரே தவிர, மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவனிப்பது அரிது. மேலும் பிள்ளைகள் இம் மாதிரிப் பேசிக் காலத்தை வீணுக்குகிறார்கள் என்று முதியோர்கள் நினைக் கலாம். ஆனால் வயது வந்த பிள்ளைகள் தங்களுடைய அறி வைப் பெருக்கிக் கொள்வதற்கு உரையாடுதல் ஒரு சிறந்த வாய்ப் பை அளிப்பதுடன், தவறான கொள்கைகளையும் கருத்துக்களை யும் மாற்றியமைத்துக் கொள்ள வும் பயன்படுகிறது.

பகற்கனவு காண்பது சிலரி டத்து மட்டுமுள்ள குறைபாடு என்று கருதுவதற்கில்லை. பொது வாக எல்லா வயது வந்த பிள்ளைகளும் பகற் கனவில் ஈடுபடுகின்றனர். முக்கியமாக வாழ்க்கையில் ஏற்படும் காதல், முடிக்க விரும்பும் காரியத்தில் காணும் வெற்றி, இடையூறுகளை விலக்குவதற்கான பாதுகாப்பு,— இவைகளே அவர்களுடைய கற்பனையில் அடிக்கடித் தோன் றும் காட்சிகள். நடை முறை யிலே வாழ்க்கையில் தோல்வியை அடைந்த ஒருவன் கற்பனையில் வெற்றியைக் காண்கிறான். ஆட்டப்பந்தயங்களில் பங்கு எடுத்துக்கொள்ள முடியாத வாலிபர்கள் ஒலிம்பிக் பந்தயத் தில் வெற்றியடைந்து வாகை சூடித் தாய்நாடு திரும்புவதாய்ப் பகற் கனவு காண்கின்றனர். ஆபிசில்வேலைபார்க்கும் ஏவலாள், மானேஜர் பதவியை வெகு சுலபத்தில் அடைகிறான். பகற் கனவு வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்களையும், தோல்விகளை யும் ஈடுசெய்கிறது. கனவு அந்த அளவிலே இருந்துவிடாமல் நினைவாக மாறுவதற்கு வேண்டிய தூண்டு கோலாகவும் இருத்தல் வேண்டும். ஆகையால் வயது வந்த பிள்ளைகளுடைய மன நிலையை நன்றாக உணர்ந்து, அவர்களிடத்திலுள்ள குறை பாடுகளை மிகைப்படுத்தாமல் இரக்கம் கொண்டு அவர்களை ஊக்குவிப்பது பெற்றோர்களு டைய கடமையாகும்.

பள்ளிக்கூட ஆசிரியர்களும் வயது வந்த பிள்ளைகளின் இக் கட்டான நிலையைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. குழந்தைகள் வாலிபப் பருவத்தை அடையும் பொழுது வளர்ச்சியின் வேகம் அதிகரிப்பதால் உடலிலுள்ள சக்தியும் அதிகமாக உபயோகப் படுத்தப்படுகிறது. இதன் கார ணமாக உண்மையிலேயே வயது வந்த பிள்ளைகள் தம்முடைய பாடங்களில் கவனத்தைச் செலுத்த முடியாத நிலைமையில் இருக்கலாம்.

மேலும் ஒரு வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் ஏறக்

குறைய ஒரே வயதுடையவர்களாக இருந்தாலும் அவர்கள் எல்லோருமே ஒரே ஆற்றலுடையவர்களென்று நினைப்பது தவறாகும். எல்லோரிடத்திலும் ஆற்றல் உண்டு. ஆனால் அதை ஒவ்வொருவரும் வெவ்வேறு விதங்களில் வெளிப்படுத்துவர். சிலர் சித்திரம் வரைவதில் ஆற்றல் உள்ளவர்களாக இருக்கலாம். சிலர் கதைகள் கட்டுரைகள் எழுதுவதில் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தலாம். மற்றும் சிலர் இன்னிசை பாடுவதில் தேர்ச்சியடைந்திருக்கலாம். ஆகையால் பள்ளிக்கூடப் பாடங்களில் பின்னடைந்திருக்கும் மாணவர்களை அறிவுக் கூர்மை இல்லாதவர்களென்று கொள்ள முடியுமா? எல்லாக் குழந்தைகளும் வயதிற்கேற்ற வளர்ச்சியை அடைவதில்லை. சில குழந்தைகள் 14 அல்லது 15 வயதடைந்ததும் முதியோர் போலக் காணப்படுகின்றனர். 16 அல்லது 17 வயதானாலும் உருவத்தில் சிலருக்கு ஒரு மாறுதலும் ஏற்படுவதில்லை. வயதிற்கேற்ற வளர்ச்சியில்லாமல் குழந்தைப் பருவத்தில் எப்படி இருந்தார்களோ அம்மாதிரியே இருக்கின்றனர். உடல் வளர்ச்சியில் வயது வந்த பிள்ளைகள் எப்படி ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனரோ அப்படியே உள்ள வளர்ச்சியிலும் வேறுபடுகின்றனர். உள்ள வளர்ச்சி, உடல் வளர்ச்சியை மட்டும் பொருந்தியதன்று. சமூகம், கலாசாரம், குடும்பம்—முதலிய சூழ்நிலைகளையும் சார்ந்திருக்கிறது. ஆகையால் குழந்தையாக இருக்கும் பொழுது சுறுசுறுப்புடனும் அறிவுக்கூர்மையுடனும் இருந்த ஒருவன் வாலிபப் பருவத்தை அடைந்ததும் சூழ்நிலையின் காரணமாக நேர்மாறாக வளரக்கூடும். குழந்தைப் பருவத்தில் ஆரம்பப் பள்ளியில் முதலிடம் பெற்றிருந்த ஒரு மாணவன் வயது வந்த பிறகு உயர்நிலைப்பள்ளியில் அடைந்ததும் வகுப்பிலே கடைசியாகவும்; பள்ளிக்கூடப் பாடங்களில் அக்கறையே இல்லாதவனாகவும் மாறக்கூடும்.

மேலும் குழந்தைகள் பள்ளியில் சரிவரப் பாடங்களைப் படிக்காமல் இருப்பதற்கு ஆசிரியர்களும் காரணமாக இருக்கலாம். சில ஆசிரியர்களைப் பார்க்கும் பொழுதே பிள்ளைகளுடைய உள்ளத்திலே பீதி—திகில் ஏற்படுகிறது. அவர்களைக் கண்டு அஞ்சுகின்றனர் நாளடைவில் ஆசிரியர்களை வெறுக்கவும் ஆரம்பிக்கின்றனர். அவர்கள் கற்பிக்கும் பாடங்களின் மீதும் வெறுப்பு—அவர்களுடைய வகுப்புகளும் சுவையற்றவையாக மாறி விடுகின்றன. மாணவர்களும் தம்மைக் கவரும் வேறு சில செயல்களில் ஈடுபடுகின்றனர். வகுப்பு அறையை விட வெளியுலகம் அவர்களுக்கு இன்பகரமாகக் காட்சியளிக்கிறது. வயது வந்த பிள்ளைகள், பலர் ஒன்று கூடித் துணிகரமான செயல்களில் ஈடுபடுவதற்கு

இயற்கையாகவே தூண்டப்படு கின்றனர். அதற்கு வேண்டிய வாய்ப்பும் கிடைத்தால் சும்மா இருப்பார்களா? பல வயது வந்த பிள்ளைகள் ஒன்று கூடிக் கூட்டமாகச் சென்று சில துணி கரமான செயல்களைச் செய் கின்றனர். அவர்களுக்கு இன் பமாக இருப்பவை மற்றவர்களுக் குத் துன்பமாக முடிகின்றன. நாளடைவில் குற்றவாளிகளா கவும் மாறுகின்றனர். ஏழ்மை யின் காரணமாகக் குற்றம் புரி கின்றவர்கள் மிகச்சிலரே. அதுவும் வயது வந்த பிள்ளை களில் அம்மாதிரிக் குற்றவாளி கள் இன்னும் குறைவாகவே காணப்படுவர். பெரும்பாலும் வீட்டிலே அன்பைப் பெறமுடி யாத பிள்ளைகளும், தங்களுடைய செய்கைகளை ஏற்றுக்கொண்டு தங்களை ஊக்கப்படுத்த ஒருவர் கூட இல்லாத காரணத்தினால் வயது வந்த பிள்ளைகளும் இளங் குற்றவாளிகளாக மாறுகின்றனர். ஆகையால் அவர்களை அடியும் உதையும் கொடுத்துத் திருத்த முயல்வது மிருகத்தன்மை யன்றோ!

சிறந்த பண்புகள் உண்மை யிலே ஒவ்வொரு வயது வந்த பிள்ளையினிடத்தும் புதைந்து கிடக்கின்றன. புதையலை எடுக்க மண்வெட்டி, கடப்பாரை போ ன்ற ஆயுதங்கள் தேவையில்லை. ஆனால் நல்ல பண்பாடுகள் நிரம்பப் பெற்ற குடும்பம், எல்லா வசதிகளுமுள்ள பள்ளி, துணிச்சல் மிகுந்த செயல்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கும் பல இயக்கங்கள் ஆகிய இவை களே தேவை. கூடிப் பழகுவ தற்கு ஒழுக்கமுள்ள நண்பர்கள், அவ்வப்பொழுது எழும் உணர்ச் சிகளின் போராட்டத்தை முடித்து வைப்பதற்கான உள நோய் மருத்துவர் போன்றவர் களும் பயனளிக்கக் கூடியவர் களே ஆவர்.

[திருச்சி வானொலி நிலையத்தில் ஆசிரியரால் பேசப்பட்டது]

—'கல்லூரி இதழ்'

---

## வேற்றுமையில் ஒற்றுமை

பணக்காரனுக்கும் ஏழைக்கும் இதுதான் வேற்றுமை. முன் னவன் தான் விரும்பிய பொழுது உண்பான். பின்னவன் உணவு கிடைத்த பொழுதுதான் உண்பான்.

ஃபிராங்க்லின்

# உயிரினம் தோன்றிய விந்தை

பூமியில் உயிரினம் தோன்றிய விதத்தைப் பற்றி ஆராய்பவர்கள் ஊகமாக இதுவரை கண்டவற்றைக் காட்ட நியூயார்க்கில் இயற்கை வரலாற்று அமெரிக்க மியூசியத்தில் ஒரு மாபெரும் கண்காட்சி நடக்கிறது.

450 கோடி ஆண்டுகளுக்கு முன்னே பூமி எவ்வாறு இருந்திருக்கும் என்பதை அங்கு காட்டுகிறார்கள். விஞ்ஞானிகளின் புத்தகம் புதிய கொள்கைகளைத் தழுவி இக் கண்காட்சி உருவாகி யிருக்கிறது.

"உயிரினத்தின் தோற்றமும் அமைப்பும்" என்பது கண்காட்சியின் பெயர். ஓவியங்கள், புகைப்படங்கள், திரைப்படங்கள், மாதிரி உருவங்கள் முதலியன உயிரினத்தின் தோற்றத்தையும் அமைப்பையும் விளக்க உதவுகின்றன. உயிரற்ற ரசாயனப் பொருள்களிலிருந்து எவ்வாறு உயிருள்ள "செல்லுகள்" உண்டாக்கப்பட்டன என்றும், இவை நாளடைவில் எவ்வாறு பல்வேறு உயிரனங்களாக வளர்ச்சியடைந்தன என்றும் காட்டுகிறார்கள்.

கண்காட்சியில் நுழைந்ததும் ஒரு பெரிய சுவர் ஓவியம் காட்சியளிக்கிறது. தீ கக்கும் எரிமலைகளின் வெப்பமும், விண்வெளியிலிருந்தும் இளம் பூமியின் உள்ளிருந்தும் வரும் கதிரியக்கங்களும், மின்னல்களும் சேர்ந்து அந்த ஆதிகால வாயு மண்டல வாயுக்களை அதிகச் சிக்கலான அமைப்புகள் கொண்ட வாயுக்களாக மாற்றிய வகையை இச் சித்திரம் காட்டும்.

இவ்வாறு உண்டானவற்றுள் அமினோ அமிலங்கள் என்பவை சில. இவற்றால்தான் புரதச் சத்துக்கள் உண்டாக்கப்படுகின்றன. உயிரினம் தோன்ற இவை இன்றியமையாதவை.

புளோரிடா அரசாங்கப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஸிட்னி டபிள்யு. :. பாகஸ் உயிரினத் தோற்றம் பற்றிய ஆராய்ச்சியில் உலகில் முன்னணியில் விளங்குபவர். அவர் தயாரித்த திரைப்படம் ஒன்றும் கண்காட்சியில் காட்டப்படுகிறது.

எரிமலைகள் உமிழும் வெப்பம் போன்ற ஈரமற்ற சூட்டில் அமினோ அமிலங்களின் கலவையைச் சுட வைத்து ஆய்வுக் கூடத்தில் பூர்வீகப் புரதச் சத்துக்களை உண்டு பண்ணும் விதத்தைத் திரைப் படத்தில் காண்கிறோம். சூடான புரதத்தின்மீது தண்ணீர் ஊற்றினால் ஒரு குழம்பு உண்டாகிறது; ஆதி நாளில் மழை பெய்தபோது இது உண்டாகியிருக்கக் கூடும். இக் குழம்பை ஆறவிட்டால், மிக நுண்ணிய உருண்டைகள் தோன்றுகின்றன. உயிருள்ளவற்றின் செல்லு

களுக்கு முன்னோடியாகக் கருதப் படுவது இந்த நுண்ணுருண்டையே.

நுண் உருண்டைகள் பூர்விக பாக்டீரியா போன்றிருக்கின்றன. இவற்றிலிருந்தே இன்றைய உயிரினங்களின் செல்லுகள் தோன்றி யிருக்கக் கூடும்.

நுண்ணுருண்டைகளை 30,000 மடங்கு பெரிதாகக் காட்டும் மாதிரி உருவங்கள் காட்சியில் இருக்கின்றன. அண்மையில் ஆராய்ந்தறிந்தபடி செல் அமைப் பைக் குறுக்கு வெட்டாகக் காட் டும் மாதிரி உருவம் ஒன்றும் உள்ளது. இது உண்மையான செல்லைப் போல் 40,000 மடங்கு பெரிது. செல்லின் பல் வேறு உறுப்புகளையும் காட்ட இதில் 39,000 கண்ணாடிக் குண்டு களைப் பயன்படுத்தியுள்ளனர். மாதிரியின் குறுக்களவு 104 செண்டிமீட்டர் உயரம் 188 செண்டிமீட்டர்.

ஒவ்வொரு மூலகத்தின் அணு அமைப்பையும் ஒவ்வொரு நிறத் தில் மாதிரி உருவமாகச் செய்து வைத்து, அணுக்கள் சேர்ந்து மூலக்கூறு ஆவதையும் காட்டி யிருக்கிறார்கள். சாதாரண வாயுக்கள், அமினோ அமிலங்கள், நியூக்ளிக் அமிலங்கள் முதலிய பல்வேறு பொருள்களின் மூலக் கூறு அமைப்புகள் இவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

கண்காட்சியில் பெரிதும் இடம் பெறுவன இந்த நியூக்ளிக் அமிலங்களே. இவற்றிலும் டி. என். ஏ. என்னும் ஒன்றுதான் மிகுதியும் விளக்கப்படுகிறது. உயிருள்ளவை எல்லாவற்றிலும் உடற்கூற்றில் பிறவிக்குணங்க ளாக வருபவற்றை இடைவிடாது தலைமுறை தலைமுறையாக எடுத் துச் செல்பவை டி என் ஏ அமி லங்களே.

---

## அரசின் இயல்பு!

அரசர்கள், ஏகாதிபத்தியங்களின் உண்மையான வலிமை சேனை களிலும், உணர்ச்சிகளிலும் இல்லை. ஆனால் அவர்கள் கபடமில்லா மலும், உண்மையாகவும், சட்டப்படியும் நடக்கிறார்கள் என்று மக்கள் கொள்ளும் நம்பிக்கையிலேயே அது அமைந்துள்ளது. அந்த உயர் நிலையிலிருந்து ஓர் அரசாங்கம் விலகியவுடன் 'அது ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுள்ள ஒரு கூட்ட'த்தைத் தவிர வேறில்லை. அதன் முடிவு காலமும் நெருங்கி நிற்கும்.

எச். ஜி. வெல்ஸ்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] 1963ல் மூன்று தினங்கள் விண்வெளியில் இருந்தார்.

மீட்சிக் கப்பல் சாக்பிலினிலிருந்து சுமார் 80 மைல் தொலைவில் அட்லாண்டிக்கில் இருவரும் விண்வெளிக் கப்பல் மூலம் இறங்கினர். சாக்பிலினிலிருந்து ஹெலிகாப்டர்கள் பறந்து சென்று சமுத்திரத்தின் மீது வட்டமிட்டன. நாசகாரி போட் விண்வெளி கப்பலை நோக்கி விரைந்தது. சமுத்திரத்திலிருந்து மீட்கப்படும் வரை 3 லிருந்து 5 அடி உயரமுள்ள அலைகளில் விண்வெளி வீரர்கள் நீந்திக் கொண்டிருந்தனர்.

விண்வெளி யாத்திரை 7 தினங்கள், 22 மணி, 56 நிமிடம் ஆயிற்று.

“நாங்கள் தண்ணீரில் இருக்கிறோம். நல்ல நிலையிலேயே இருக்கிறோம்” என்று கூப்பர் மீட்சிக் கப்பலுக்கும், விண்வெளி சோதனை நிலையத்துக்கும் தெரிவித்தார்.

ஹெலிகாப்டர்களிலிருந்து மூன்று கடற்படை வீரர்கள் கடலில் குதித்துப் பெரிய மிதப்பு ஒன்றை விண்வெளிக் கப்பலுடன் இணைத்தனர். கூப்பர் முதலில் கதவைத் திறந்து, கடற்படை வீரர் ஒருவருடன் பேசினார். பின்னர் கோன்ராட் வெளிவந்து கூப்பர் அருகே நின்று கொண்டார். இருவரும் ஹெலிகாப்டர் ஒன்றினுள் ஏற்றிக்கொள்ளப்படுமுன் மிதப்பு ஒன்றில் ஏறிக்கொண்டனர். பின்னர் பத்திரமாக ஹெலிகாப்டரில் ஏற்றிக்கொள்ளப்பட்டனர்.

ஹெலிகாப்டரிலிருந்த டாக்டர் ஒருவர் இருவருக்கும் எளிய வைத்திய சோதனைகளை நடத்தினர்.

சுமார் 8 தினங்கள் கனமற்ற நிலையிலிருந்ததால் ஏற்பட்ட விளைவைக் கண்டறிய இருவரும் 11 தினங்கள் வைத்திய பரிசோதனை செய்யப்படுவர்.

கூப்பரும், கோன்ராடும் விண்வெளி யாத்திரையைத் துவக்கிய முதல் தினம் விண்வெளிக் கப்பலில் மின்சார எரிபொருள் தகராறு ஏற்பட்டது நினைவிருக்கலாம். ஆனால் பிராணவாயு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதால் அழுத்தம் ஏற்பட்டு கோளாறு தானாகவே நீங்கியது. முதல் தினம் கோளாறு ஏற்பட்டதும் விண்வெளி யாத்திரையை ரத்து செய்து, இருவரையும் இறங்கச் செய்யலாமா என்று கூட ஆலோசிக்கப்பட்டது. தொடர்ந்து யாத்திரையை மேற்கொள்ள ஒவ்வொரு தினமும் இருவருக்கும் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

## புது சாதனையை ரஷியா ஒப்புக்கொண்டது

அமெரிக்க விண்வெளி கப்பல் ஜெமினி -5ன் யாத்திரை வெற்றிகரமாக முடிவடைந்தது என்று ரஷிய செய்தி ஸ்தாபனம் டாஸ் கூறியது. விண்வெளி வீரர்களான கூப்பரும், கோன்ராடும் விண்வெளியில் மனிதன் இருக்கும் காலம் சம்பந்தமாக புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளனர் என்பதை டாஸ் தகவல் ஒப்புக் கொண்டது.

# ஆசிரியர்களின் ஊதிய உயர்வுக்கு சக்ளா உறுதி

## மாநிலங்களுக்கு மத்திய உதவி கிடைக்கச் செய்வதாகக் கூறுகிறார்

புதுடில்லி, செப் 2—பள்ளி ஆசிரியர்களது ஊதியத்தை உயர்த்துவதற்காகத் தாம் முயற்சியை மேற்கொண்டு ராஜ்யங்களுக்கு மத்திய உதவி கிடைக்கச் செய்வதாகவும் நான்காவது நிதிக் கமிஷனின் பிரேரணைகள் மீது சர்க்கார் முடிவு எடுத்தவுடன் தாம் அவ்வாறு செய்வதற்காகவும் லோக் சபையில் இன்று கல்வி மந்திரி திரு. சக்ளா தெரிவித்தார்.

ஆசிரியர்களது வருவாய், வேலை நிலைமை பற்றி இன்று சபையில் இரண்டு மணி நேரம் விவாதம் நடந்தபோது திரு. சக்ளா குறுக்கிட்டுப் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். தேசிய வாழ்க்கையில் முக்கிய பங்கை வகிக்கும் ஆசிரியர்களது நிலைமையை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை எல்லாக் கட்சி உறுப்பினர்களும் வற்புறுத்தினர்.

நாடு முன்னேற வேண்டுமானால் ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்க வேண்டும் என்பதை மாநிலங்கள் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளன. ஆனால் அதிகப்படியான வசதி திரட்டும் நிலைமையில் மாநிலங்கள் இல்லை. திட்டவரம்புக்கு வெளியே கூடுதல் பணத்தை கண்டறிய மாநிலங்கள் விரும்பவில்லை என்றார் திரு. சக்ளா.

சிவில் ஊழியர்களுக்கு ஆகும் செலவைப் போலவே ஆசிரியர்கள் சம்பளத்தையும் மாநிலங்களின் நிர்வாக செலவாகக் கருத வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். நிதியை எவ்வாறு திரட்டுவது என்பதுதான் பிரச்னை. இதற்கு மத்திய உதவி மிக அவசியம் என்றே தோன்றுகிறது என்று அவர் மேலும் சொன்னார்.

சுயேச்சை மெம்பர் திரு. பிரகாஷ் வீர் சாஸ்திரி விவாதத்தை கிளப்பினர். நல்ல வேலை நிலைமை கோரி பல ஆசிரியர் ஸ்தாபனங்கள் நடத்திய கிளர்ச்சி பற்றி இவ்வாண்டு துவக்கத்தில் சர்க்கார் சமர்ப்பித்த அறிக்கை மீதே இந்த விவாதம் நடந்தது.

பள்ளி ஆசிரியர்கள் நிலைமைக்கே சர்க்கார் முதலில் கவனம் செலுத்த வேண்டும். தீவிர கிளர்ச்சியை அவர்கள் மேற்

கொள்ளவில்லை. என்ற காரணத்துக்காக அவர்களது "கஷ்டம் களை" சர்க்கார் புறக்கணிக்கப் போகிறதா? என்று அவர் கேட்டார்.

திரு. பி. கே. வாசுதேவன் நாயர் பேசுகையில் ஆசிரியர்களது வருவாயை அதிகரிப்பதற்காக மாநிலங்களுக்கு நீடித்த அடிப்படையில் மான்ய உதவி கிடைப்பதற்கான விஷயத்தில் "இறுதியான முடிவை" எடுக்குமாறு மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டார்.

"ஆசிரியர்களைப் புறக்கணித்தால், நம் குழந்தைகளை நாம் புறக்கணித்தவர்களாவோம்" என்றார் அவர்.

ஆசிரியர்கள், கல்வி பிரச்னையை இணைந்த முறையில் அணுக வேண்டும் என்று டாக்டர் ஆனே வற்புறுத்தினார்.

ஆசிரியர்களுக்காக ஓர் ஊதியக் குழுவை அமைக்குமாறு திரு. எஸ். எம். பானர்ஜி சர்க்காரைக் கேட்டுக் கொண்டார். கல்வியை மத்திய சர்க்கார் பொறுப்பில் விடவேண்டும் என்று திரு. டி. ஸி. சர்மா சொன்னார்.

அண்டைப்புறங்களை சுத்தம் செய்யும் சுத்திகரிப்பு ஊழியர்கள் நிலைமையும் உள்ளத்தின் இருளைப் போக்கும் ஆசிரியர்கள் நிலைமையும் நாட்டில் புறக்கணிக்கப்படுவதாகத் திரு. கே. மிக்காமி சொன்னார். சுத்தகரிப்பு ஊழியர்கள் நிலைமையை அபிவிருத்தி செய்யும் காலம் வந்துவிட்டது. ஆனால் ஆசிரியர்கள் நிலையைத் தொடர்ந்து புறக்கணிப்பது நாட்டின் முன்னேற்றத்துக்கே தடங்கலாக உள்ளது என்றார் அவர்.

திரு. கே. என் திவாரி பேசுகையில் ஆசிரியர்கள் டியூஷன்கள் வைத்துக்கொள்ள அனுமதியளிக்க வேண்டும். இதனால் அதிகப்படியான வருவாய் அவர்களுக்குக் கிடைக்குமாதலால் தங்கள் கடமைகளை நன்கு கவனிக்க அவர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்றார்.

ஆசிரியர்களுக்கு உதவுவதற்காகத் "தசரா"வின் போது நிதி வசூல் இயக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு. என். ஜி. ரங்கா வற்புறுத்தினார்.

மூன்றாவது பிரிவு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சமமான ஊதியம் ஆசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று திரு. பீட்டர் ஆல்வாரிஸ் சொன்னார்.

திரு. சக்ளா பதிலளித்துப் பேசுகையில் சர்வகலாசாலை மான்யக் கமிஷன் மாதிரியில் துவக்கக்கல்வி செகண்டரி கல்வி போர்டுகளை அமைப்பதில் சட்டபூர்வ சங்கடங்கள் உள்ளன. இது போன்ற நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னதாகக் கல்வியை பொதுப் பட்டியலில் சேர்க்க வேண்டும். எவ்வளவோ தீவிர முயற்சிகளை எடுத்தும் இது சம்பந்தமாக பஞ்சாப் சர்க்காரை மட்டுமே என்னால் சம்மதிக்க வைக்க முடிந்தது என்றார்.

அகில இந்திய கல்வி சர்வீஸை அமைப்பதற்கான விவரங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வாழ்க்கை சுருக்கம் :

# வி. கலியாணசுந்தரனார்

வெ. சாமிநாத சர்மா

1917-ம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாவது வாரம். சென்னை கோகலே மண்டபத்தில் பெருங் கூட்டம். திவான் பகதூர் பட்டு கேசவப் பிள்ளை தலைமை. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் பேச்சு. ‘ஒரு தமிழ்ப் பண்டிதர் அரசியலைப் பற்றி என்ன பேசிவிடப் போகிறார்? கேட்டுத்தான் வைப்போமே’ என்ற அலட்சிய எண்ணத்துடன்தான், கூட்டத்திற்குப் பலர் வந்திருந்தனர். ஆனால், கூட்டம் முடிந்து திரும்பிச் சென்றபொழுது “ஆகா இதுவல்லவோ பேச்சு! இவர், சாதாரண தமிழ்ப் பண்டிதர் அல்ல; அரசியல் மேதை” என்று அவர்களே சொல்லிக் கொண்டு போயினர். அது மட்டுமன்று; ‘இனி இவர் எங்கு பேசினாலும், எதைப்பற்றி பேசினாலும், எப்படிப் பேசினாலும், அந்தக் கூட்டங்களுக்கு ‘கட்டாயம் சென்றே தீரவேண்டும்” என்று தீர்மானித்துக் கொண்டு சென்றனர்.

*அன்றை சூழ்நிலையில் நிலவியிருந்த அரசியலைப்பற்றி திரு. வி. க. நிகழ்த்திய அந்த உரைதான், அவருடைய அரசியல் வாழ்க்கைக்கு முகவுரை மாதிரி மாதிரி அமைந்ததென்று சொல்லலாம்.*

## நாட்டுப்பற்று, தமிழ்ப் புலமையை விஞ்சியது !

*அப்பொழுது அவர், இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அதைத் துறந்துவிட்டு, அரசியல் சூறாவளியில் சிக்கிக் கொள்ள வேண்டாமென்றும் அதனால் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடுமென்றும் தமிழ்ப் புலவர் குழாத்திலேயே இருந்து பேரும் புகழும் பெறுவதற்கான வாய்ப்புக்கள் பல இருக்கின்றனவென்றும் உண்மையில், மாநிலக் கல்லூரித் தலைமை தமிழாசிரியர் பதவி அவரை விரைவில் அணுகக் காத்துக்கிடக்கிறதென்றும், தி. த. கனகசுந்தரம் பிள்ளை, கா. ர. நமசிவாய முதலியார் போன்ற தமிழறிஞர்கள் அவருக்கு அறிவுரைகள் வழங்கினார்கள். வேறு சில அன்பர்கள், நீண்ட நீண்ட கடிதங்கள் மூலம் அரசியல் எரியில் குதிக்க வேண்டாமென்று எச்சரிக்கை செய்தார்கள். ஆனால், அவர் கொண்டிருந்த நாட்டுப்பற்று, அவர் பெற்றிருந்த தமிழ்ப் புலமையை விஞ்சி நின்றது 1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் ஏழாந்தேதி, ‘தேசபக்தன்’ என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் அமர்ந்தார். அந்தப் பத்திரிகை தோன்றுவதற்குக் காரணம*

யிருந்தவர்கள் இருவர். ஒருவர் சுப்பராய காமத் என்ற மங்க ளூர்க்காரர். மற்றொருவர் அன்னி பெசண்ட் அம்மையார்.

சுமார் இரண்டரை ஆண்டுகள் சேவைக்குப் பிறகு, சுப்பராய காமத்துடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக, முதலியார், 'தேச பக்தன்' பத்திரிகையிலிருந்து விலகிக்கொண்டு 'நவசக்தி' என் னும் வார இதழைத் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தி வந்தார்.

## தமிழ்த் தென்றல் தவழச் செய்த பெரியார்

முதலியார், அரசியல் அரங் கத்தில் பிரவேசித்த காலத்தில், அங்கு ஆங்கில வாடையே வீசிக் கொண்டிருந்தது; அதை அப் புறம் போகும்படி செய்துவிட்டு, அங்குத் தமிழ்த் தென்றல் தவழும் படிச் செய்தார் முதலியார் தமிழில் பேசத் தெரியாது என்று சொல்வதில் பெருமை கண்ட தமிழர்கள், தமிழில் பேசத் தொடங்கினார்கள். மற்றும், அவர் பிறமொழி கலவாத தமிழில் அரசியல் நுணுக்கங்களை எல் லாரும் புரிந்து கொள்ளுகின்ற முறையில் சொல்லவும் எழுதவும் முடியும் என்பதற்கு வழிகாட்டி னார். ஆனால், அவருக்கு மொழி வெறி கிடையாது: பிறமொழி கள் மீது பகைமை கொண்டவரு மல்லர். உண்மையில், அவரு டைய, தமிழ்ப் பற்றும், தமிழ்ப் புலமையும், பிறமொழிகளிலுள்ள நயங்களை எடுத்துக்காட்டும் ஆற் றலை அளித்தன. அவர், சங்கர வேதாந்தத்தைப்பற்றிப் பேசினா லும் சரி, யேசுநாதரின் மலைப் பிரசங்கத்திற்கு விளக்கவுரை பகர்ந்தாலும் சரி, அவருடைய இந்த ஆற்றல், ஒளிவிட்டுப் பிர காசித்தது.

திரு. வி. க. வின் பிற்கால அரசியல் வாழ்க்கை வெற்றி பெற வில்லை என்று கூறுவர் சிலர் வெறும் அரசியல் கண்ணோட்டத் துடன் அவரைப் பார்த்தால், இது ஓரளவுக்குப் பொருத்துவது போலத் தோன்றும். ஆனால், அப்படி வெறும் அரசியல் கண் ணோட்டத்தில் அவரைப் பார்க் கக்கூடாது. பாரத நாட்டின் அர சியல் பரம்பரையை அவருக்குப் பின்னணியாக வைத்து, அவரைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அந்தப் பரம்பரையை அவர் நன்கு அறிந்தவர். அதன் வழி யிலே வந்தவர்.

## அறத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல்

அந்தப் பரம்பரை என்ன கூறு கிறது? அரசியல் என்பது அறத்தை அடிப்படையாகக் கொண்டதென்றும், அந்த அடிப் படையோடு கூடியதைத்தான் அர சியல் என்ற பெயரிட்டு அழைப் பதற்குத் தகுதி படைத்ததென் றும் கூறுகிறது. அறத்தைத் அடிப்படையாகக் கொள்ளாத அரசியல், உயிரில்லாத உடல் மாதிரி என்று முதலியார், தமது நூலொன்றில் கூறியுள்ளார். இந்த மாதிரி மேலான ஒரு கருத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டுதான் அவர் அன்றைய அரசியலில் பிரவேசித்தார். பிர

வேசித்த சிறிது காலத்திற்குப் பிறகு, அந்த அடிப்படை உண்மையிலேயே இருக்கிறதா, இல்லையா என்று சந்தேகிக்கக் கூடிய நிலையில் எங்கேயோ ஆழத்தில் அமுந்திக்கிடந்தது. அதனைக் கண்டுபிடித்து, அது இருக்க வேண்டிய நிலையில் அதனை அமைக்க, தமது சொல்லாலும் எழுத்தாலும் வெகுவாகப் பாடுபட்டார். எதிர்பார்த்த பயனைக் காண முடியவில்லை. அந்நிய ஆதிக்கத்தின் சக்தி அந்த அடிப்படையைக் காணவிடாதபடி செய்து வந்தது. ஆகவே, அந்த அந்நிய ஆதிக்க சக்தி உருக்குலைந்து ஒழிந்தாலன்றி, நமது நாட்டின் அரசியல், அறத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்க முடியாதென்பதை உணர்ந்தார். அதனை ஒழிக்க, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வழி தோன்றினாலும், முதலியாருக்கு கடவுளின் திருவருளை நாடுவதுதான் சிறந்த வழி என்று தோன்றியது. எனவே, வெறும் அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டு, கடவுளின் அருளுக்கு விண்ணப்பித்துக் கொண்டு வந்தார். அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதிக் காலத்து எழுத்திலும் பேச்சிலும் இந்த முறையீடு தொனிப்பதைக் காணலாம். இதனால் வெறும் அரசியலிலிருந்து அவர் ஒதுங்கிக்கொண்டார் என்று சொல்லுவதுதான் பொருந்துமே தவிர, வேறுவிதமாகச் சொல்வது பொருந்தாது.

அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத அரசியலில், சூழ்ச்சி மலிந்து காணப்படும்; பதவிப் போட்டி முட்டி நிற்கும். வன்ம உணர்ச்சி மாறுபட்ட கொள்கையினரைத் தேடி அலையும், தன்னலம் தலைதூக்கி ஆடும். தன் முகப்பு தம்பட்ட மடித்துக் கொண்டிருக்கும். இவைகளுக்கெல்லாம் புறம்பானவரல்லவா முதலியார்?

மற்றும், முதலியார், மனச்சாட்சிக்கு முழு மதிப்புக் கொடுத்தார்; அதற்கு அஞ்சவும் செய்தார். இதனால் நீங்கள் இங்ஙனம் மனச்சாட்சிக்கு முழு மதிப்புக்கொடுத்து வருவதினால்தான் அரசியலில் உங்களுக்கு வெற்றி கிட்டவில்லையென்று சிலர் கூறுகின்றனர் என்று யாராவது அவர் காதில் போட்டால், அதற்காக அவர் வருந்தமாட்டார், மகிழ்ச்சியே கொள்வார். பெருமையும் அடைவார்.

## மனித வாழ்க்கைக்கு முதல் முக்கியத்துவம்

உண்மையில் முதலியார், அரசியல் வாழ்க்கையைக் காட்டிலும் மனித வாழ்க்கைக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தார். வெறும் அரசியல்வாதியாக இருந்து செல்வமும் செல்வாக்கும் பெறுவதைக் காட்டிலும், மனித பண்புகளோடு கூடிய மனிதனாக இருந்து வறுமை வாழ்க்கையை நடத்துவதே சிறப்பு என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. காந்தியடிகளை, அரசியல் வாதிகளில் ஒருவராக

அந்த அரசியல்வாதிகளின் தலைவராக அவர் கருதவில்லை, மனிதத் தன்மைகள் நிறைந்த மேலான ஒரு மனிதராகவே கருதினர். பத்திரிகாசிரிய பீடத்தில் அமர்ந்த பிறகு, முதன் முதலாக வெளிவந்த அவருடைய நூல் "காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்" என்று தலைப்புப் பெற்றதே தவிர, "காந்தியடிகளும் அரசியல் வாழ்க்கையும்" என்ற தலைப்பைப் பெருதது, ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. அறத்தை வளர்ப்பதற்கும், அதனைப் பாது காப்பதற்கும் அரசியலையே குறிக்கோளாகக் கொள்ளக் கூடாதென்ற காந்தியடிகளின் கருத்தில் முதலியாரின் உள்ளம் படிந்திருந்ததென்பதைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை.

### திரு. வி. கலியாணசுந்தரனர் :

முதலியார், சிறை செல்லத் தயங்கினர் என்று சொல்லி, அவருடைய தியாகத்தில் ஒரு சிறு கறை காண முயல்வர் சிலர். ஆனல், அவர் சிறை செல்லத் தயங்கவில்லை என்பதும், அப்படிச் செல்ல வேண்டிய வாய்ப்போ அவசியமோ அவருக்கு ஏற்படவில்லை என்பதும், சிறிது காலம் அவர் வீட்டோடு காப்பில் வைக்கப்பட்டிருந்தார் என்பதும் அவரோடு நெருங்கி உறவாடி வந்த ஒரு சிலருக்கு நன்கு தெரியும்.

தவிர, முதலியார் நடத்திவந்த "தேசபக்தன்" "நவசக்தி" பத்திரிகைகளில் அவர் எழுதிய தலையங்கங்கள், அரசாங்கத்தின்மீது துவேஷத்தை உண்டு பண்ணக்கூடியவை என்பதற்காக, அப்பொழுதைய அரசாங்கம், ஆயிரக்கணக்கில் ஈடுகாணம் (ஜாமீன்) கேட்டுப்பெற்று, பிறகு அந்தத் தொகைகளை அவர் இழந்துவிடும்படி செய்ததை அந்த ஒரு சிலர் நன்கு அறிவர்.

### கவிதை உள்ளம் படைத்தவர்

முதலியாரை, கவிதைகள் பல இயற்றிய ஒரு கவிஞராக மட்டுமே ஒரு சிலர் காண்பர். ஆனல், அவர் கவிதை உள்ளம் படைத்தவர், கவிதையாக வாழ்ந்தவர், வாழ்க்கையை கவிதையாக அமைத்துக் கொண்டவர். இனிமையும் எளிமையும் அவரோடு பிறந்த இயல்புகள். இத்தகைய கவிஞர்கள், கர்ம வீரர்களைச் சிருஷ்டித்துக் கொடுப்பது தங்கள் தலையாய கடமையென்று கருதுகிறார்கள். இவர்களே கர்ம வீரர்களாகிவிடுவதில்லை. உலக வரலாற்றில் இத்தகைய கவிஞர் பலரை நாம் சந்திக்கிறோம். சீன, ருஷ்யா, துருக்கி, ஐர்லாந்து, இத்தாலி ஆகிய அநேக நாடுகளில், வீரர்கள் பலர் தோன்றிப் பெரும் புரட்சி நடத்தியதற்குக் காரணமாக இருந்தவர்கள் கவிஞர்களே. இவர்களில் ஒருவராகவே முதலியாரை நாம் பார்க்க வேண்டும். அன்றைய தேசிய இயக்கத்தை உரமிட்டு வளர்ப்பதற்கான கர்மவீரர்களைப் பாரதியாரின் கவிதைகள் சிருஷ்டித்துக் கொடுத்தன. அதே காலத்திலும், அவருக்குப் பின்பும், முதலியாரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வந்தன.

ஆகவே, முதலியார் சிறை செல்லவில்லை யென்றால், அதற்கு அடிப்படையான காரணம், கர்மவீரர்களைச் சிருஷ்டித்துக் கொடுக்கும் தமது தலையாய கடமை ஸ்தம்பித்துப் போய்விடக் கூடாதென்பதுதான்.

உண்மையான மனிதனாக ஒருவன் வாழ விரும்பினால், அவன், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூவற்றைத் துறக்கவேண்டும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா. இந்த வாசகத்திற்கு முதலியார் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார். இது மட்டுமன்று, நான்காவதாகச் சொல்லப்படக்கூடிய பதவி ஆசையையும் துறந்தவராயிருந்தார் முதலியார்.

## ஒருவனுக்கு ஒருத்தி

அவர் 1918–ம் ஆண்டின் இடைக்காலத்தில், முப்பத்து மூன்றாவது வயதில் தமது மனைவியார் கமலாம்பிகை அம்மையாரை இழந்துவிட்டார். அதற்குப் பிறகு, அவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை. எத்தனையோ பெரிய பெரிய இடத்துப் புள்ளிகள் அவருக்குப் பெண் கொடுக்க போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தன. ஆனால் அவர் கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற ஏகபத்தினி விரதத்தைக் கடைப்பிடித்தார். கடைசிகாலம் வரை பிரம்மச்சரிய வாழ்க்கையையே நடத்தி வந்தார். அவரைக் காண வரும் பெண்கள், தங்கள் தந்தை முன்னே வந்து நிற்பதற்காகவே உணர்வார்கள், தங்கள் குறை நிறைகளை மனம் விட்டுச் சொல்வார்கள், ஆறுதலும் பெறுவார்கள். வாழ்க்கையில் வழுக்கி விழுந்து விட்ட எத்தனையோ சகோதரிகள், அவருடைய அறிவுரைகளையும், அறவுரைகளையும் கேட்டுத் திருந்தி நல்வாழ்வு நடத்த முற்பட்டிருக்கிறார்கள்.

## வாழ்க்கை வரலாறு

முதலியாரின் முன்னோர்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள். திருவாரூரில் வதிந்தவர்கள். ஆயினும் முதலியார் தொண்டை நாட்டிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து புகழெய்தினார். தமது முன்னோர்கள் வதிந்த ஊரை நினைவுகொள்கின்ற முறையில், தமது பெயருக்கு முன்னால், தமது பங்காளிகளின் அன்பான கட்டளைப்படி திரு என்ற ஈரெழுத்துக்களை சேர்த்துக்கொண்டார்.

இவர் பிறந்தது சென்னை பூவிருந்தவல்லிக்கு அருகில் உள்ள துள்ளம் என்னும் கிராமம். வருஷம் 1883. இவருடைய தந்தையார் விருத்தாசல முதலியார். தாயார் சின்னம்மாள்.

இவர் பிறக்கும்போது வலது காலில் ஆறு விரல்களோடு பிறந்தார். 'ஆறு விரல்களோடு பிறந்தவர்கள் ஆளை கட்டி வாழ்வார்கள்' என்ற வாசகத்திற்கிணங்க இவர் வாழவில்லையென்றாலும், தமது ஐம்புலன்களை கட்டி மனிதனாக வாழ்ந்தார்.

முதலியார் மெட்ரிகுலேஷன் வகுப்போடு படிப்பை முடித்துக்கொண்டு, குடும்பத்தின்

தேவையை முன்னிட்டு, ஸ்பென்ஸர் கம்பெனியில் ஒரு கணக்கராகப் போய்ச் சேர்ந்தார். சுமார் பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு, இந்த உத்தியோகத்திலிருந்து விலகி, ஆயிரம்விளக்கு என்ற பேட்டையில் நடைபெற்று வந்த வெஸ்லயன் மிஷன் பள்ளியில் சுமார் ஆறு ஆண்டு காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் சுமார் பதினெட்டு மாத காலம் வெஸ்லியன் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகச் சேவை செய்தார். இதற்குப் பிறகே 1917–ல் ஆண்டு கடைசியில் பத்திரிகாசிரிய பீடத்தில் அமர்ந்து தேசத்தொண்டு செய்து வரத்தொடங்கினார்.

## தமிழ்மீது தணியாத காதல்

முதலியாருக்கு இளமையில் ஆங்கில மொழியின் மீது மோகம் இருந்ததாயினும், வயதாக ஆக தமிழ் மொழியின்மீது தணியாத காதல் கொண்டவரானார். ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் நா. கதிர்வேற்பிள்ளை அவர்களிடமும், பிறகு மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியார் அவர்களிடமும் தமிழ் பயின்று அதில் நல்ல புலமையும் பெற்றார். இந்தப் புலமையை அநேக புராணப் பிரசங்கங்கள் வாயிலாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு நிறையக் கிடைத்தன. இந்தக் காலத்தில்தான் இவர் தமது சொல்லாற்றலை வளர்த்துக் கொண்டார்.

'தேசபக்தன்' ஆசிரிய பீடத்தை அலங்கரித்து வந்த போதுதான் அவர் தொழிலாளர் இயக்கத்தைத் தொடங்கி அதைத் திறம்பட நடத்தி வந்தார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஊதியத்திற்காகவும் பல போராட்டங்கள் நடத்தி அவைகளில் வெற்றியும் கண்டார். இந்தப் பலதுறை அலுவல்களுக்கிடையே அநேக நூல்கள் இயற்றி வெளியிட்டு வந்தார்.

கடைசி காலத்தில் முதலியார் கண்ணொளி இழந்து துன்புற்றார். ஆயினும் மன அமைதி குலைவுறாமல் பாதுகாத்து வந்தார் இதற்குத் துணை செய்தவை இரண்டு. ஒன்று, அவரது கவிதையுள்ளம்; மற்றொன்று, இவரது சமரஸ ஞானம். இவ்விரண்டும், கண் பார்வை இழந்து நின்ற அந்தக் காலத்தில், பல சமய உண்மைகளை விளக்கிக் கூறுகின்ற முறையில் செய்யுள் வடிவமான அநேக நூல்களை இயற்றும்படி செய்தன. இந்த நூல்களைப் படித்தவர்களுக்கு இவருடைய ஞான பரிபக்குவம் ஒருவாறு புலனாகும்.

முதலியார் 1953–ம் ஆண்டு பூதவுடலை நீத்து புகழுடல் எய்தினார்.

—"கிராம நலம்"

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.

CONNEMARA PUBLIC LIBRARY